# இலக்கியப்பீடம்

அக்டோபர் 2005
மாத இதழ்
சுவடி 56
விலை ரூ.25



# மலர்ந்த சிந்தனை

கடவுளிடம் பிரார்த்தனை செய்யும்போது அவர் இருப்பதை உணர முடியவில்லை என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். இது நம் இயலாமையினாலேயே தவிர, கடவுளின் குற்றமன்று. உணர்தல் இருவகைப்படும். நேரிடையாகப் பார்த்து உணர்வது; மனத்தால் உணர்வது. மனத்தால் உணர்வதே நிரந்தரமானதாகும். இப்பௌதீக உலகம் துன்பங்கள் நிறைந்தது. நாம் அனைவருமே இத்துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று அமைதி காண விரும்புகிறோம்.

புத்திக் கூர்மையுள்ளவர்கள் சாமர்த்தியமான திட்டங்களாலும், எண்ணங்களாலும் இத்துன்பங்களிலிருந்து விடுபட முயல்கிறார்கள். ஆனால், மாயாதேவியின் சக்தியோ, புத்திக் கூர்மையுள்ளவர்களையும் மனம் கலங்க வைக்கிறது. மனித சமுதாயம் துன்பங்களிலிருந்து விடுபடுவதென்பது கடுமையானதே. கோயிலுக்குப் போய் கஷ்டத்தைப் போக்க பிரார்த்தனை செய்வது தவறன்று. ஒருவேளை கடவுள் நமக்கு வேண்டியதைக் கொடுத்தாலும்கூட அதனால் திருப்தி ஏற்படாது.

மண் தரையுள்ள வீடு உள்ளவன் அதனால் திருப்தி அடைவதில்லை. சிமெண்ட் போடுகிறான். சிமெண்ட் தரையுள்ளவன் மொசைக் தளமிடுகிறான். மொசைக் தரைக்கு மேலாக வசதியுள்ளவன் உயர்ரக கற்களைப் பதித்து பளபளப்பாக்க விரும்புகிறான். எனவே கிருஷ்ண பரமாத்மாவிடம், 'நான் உன் நித்திய ஊழியன். ஏதோ ஒரு வழியில் பிறப்பு, இறப்பு என்னும் கடலில் வீழ்ந்து விட்டேன். எனவே, தயைகூர்ந்து பிறப்பு, இறப்பு என்னும் கடலிலிருந்து என்னை மீட்டு, உன் கமலப்பாதங்களில் ஒரு தூசியாக என்னை நிலைநிறுத்திக் கொள்வாயாக. நான் உனக்குச் சேவை செய்ய விரும்புகிறேன். நான் உன்னை நாடியே வந்துள்ளேன். தயவுசெய்து என்னை உன் சேவையில் ஈடுபடுத்து' எனப் பிரார்த்திக்க வேண்டும். மேலும் பகவானின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக அனைத்தையும் உபயோகிக்க வேண்டும். இது மட்டுமே நாம் பெருமளவில் விரும்பும் அமைதியைத் தரக்கூடியதாகும். நாம் அனைவரும் பரம புருஷரான பகவானின் படைப்புகளே!

**- சுவாமி பிரபுபாதா**

'காவியம் செய்வோம்
கலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம்'
- பாரதியார்

அக்டோபர் 2005 -
விலை ரூ.25 -
சுவடி 56

# இலக்கியப்பீடம்

மாத இதழ்

ஒவ்வொரு மாதமும்
1ஆம் தேதி
வெளிவரும்.
ஜனவரி, ஏப்ரல்,
ஜூலை, அக்டோபர்
சிறப்பிதழ்கள்
விலை ரூ. 25.
மற்ற இதழ்கள்
தனிப் பிரதி ரூ. 6

●

ஆசிரியர்:
கலைமாமணி
விக்கிரமன்

●

ஆண்டுச் சந்தா
(12 இதழ்கள் - 4 சிறப்பு
இதழ்களுடன்) ரூ.148
இரண்டாண்டுகள் சந்தா
(24 இதழ்கள் - 8 சிறப்பு
இதழ்களுடன்) ரூ.250

முகவரி:
3, ஜயசங்கர் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை 600 033.
தொலைபேசி:
2371 2485

## பொருளடக்கம்

2 சுவடி 56
5 'முல்லைக் கொடியா'ளைப் பெற்றவர்...
- சுப்ர. பாலன்
13 செல்வம் வெல்லுமோ கூற்றுவனை?
- நந்தி அடிகள்
17 காக்கைச் சிறகினிலே... (தொடர்கதை)
- பா. சத்தியமோகன்
29 கச்சிமூதூர் கருணை வள்ளல்
- சத்யகாமன்
37 பேதையர் உரையும் மேதையர் பேச்சும்
- கவிக்கோ ஞானச்செல்வன்
44 சைகை மொழி (கவிதை)
- முத்து எத்திராசன்
45 'நானொரு கம்யூனிஸ்ட்' - நா. காமராசன்
- ஜானகிராமன்
50 பேய்த்தொழிலாட்டி
- இரா. கலைக்கோவன்
52 பயணம் (கவிதை)
- கா. சங்கரன்
53 இளமை இனிது முதுமை நன்று
- யுகபாரதி
55 ரப்பர்
- எம். தோத்தாத்ரி
61 நினைத்துப் பார்க்கிறேன்
- கலைமாமணி விக்கிரமன்
74 வான மண்டலம்
- புஷ்பா தங்கதுரை
77 மானம் காத்தான் (சிறுகதை)
- ச. கலியாணராமன்
84 மனிதன் தேடுவது மோட்சம்
- கர்மயோகி
91 வாங்கிப் படியுங்கள்
93 வெயிலில் உலவும் நிலவு (கவிதை)
- கவிஞர் சுடர்
94 இவர், இப்போது என்ன செய்கிறார்?
மற்றும் கட்டுரைகள்: அமரர் கல்கி, டாக்டர்
மு.வ., விந்தன் முன்னுரைகள் 70, 72, 73

மேலட்டையில்: 'விந்தன்'

# சுவடி 56

56ஆவது சுவடி - உங்கள் திருக்கரங்களில் திகழ்கிறது. மக்கள் எழுத்தாளர் விந்தன் அவர்களின் 90ஆவது பிறந்த நாள் 1.09.05. அந்த நாளை எப்படிக் கொண்டாடுவது என்று எண்ணினேன். விந்தன் அவர்களின் திருக்குமாரர்கள் வரதராசனும், ஜனார்த்தனனும் சில ஆண்டுகளாக தந்தை யின் புகழ் பரப்ப பலவகையில் முனைந்து வருகிறார்கள். விந்தனுடன் பழகிய என்னைச் சந்தித்துத் திட்டமிடுவார்கள். தந்தையை மறவாத தனயன்கள்.

அமரர் விந்தனுடன் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகியவன் நான். 'கல்கி' வார இதழில் என் சிறுகதைகள் பலவற்றை வெளியிட்டு ஊக்கமளித்தார்கள். இன்று 'ஞானபீடம்' விருது பெற்ற ஜெயகாந்தன் உயர்வுக்கு மக்கள் எழுத்தாளர் விந்தனின் பங்கு மகத்தானது. எனக்கு அவரை அறிமுகப்படுத்தி 'அமுதசுரபி'யில் கதையை வெளியிடப் பரிந்துரை செய்ததை மறக்க முடியாது.

பல சம்பவங்கள் நேற்று நடந்தவை போல் என் மனக்கண்ணில் தோன்றுகின்றன. நேரம் போவது தெரியாமல் என்னுடன் அவர் பேசிக் கொண்டிருப்பார். 'அமுதசுரபி' விற்பனை உயர்வுக்கு அவர் தெரிவித்த உத்திகள் பல. அவர் 'பொன்னி'யில் ஒரு தொடரும், 'கல்கி'யில் ஒரு தொடரும் (பாலும் பாவையும்) எழுதினார். ஆனால், 'அமுதசுரபி'யில் அவர் எழுதிய இரு தொடர்கதைகளும் பரபரப்பாகப் பேசப்பட்டன. ஆனால், இன்று அவர் புகழ்பாடி, அவர் எழுத்தைப் புகழ்பவர்கள் 'அன்பு அலறுகிறது', 'மனிதன் மாறவில்லை' இரு தொடர்கதைளைப் பற்றிப் பேசுவதில்லை. அதனால் எழுந்த இலக்கியச் சர்ச்சைகள் இலக்கிய வரலாற்று ஏட்டில் மறக்க முடியாதவை. அவரைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாம். 'நினைத்துப் பார்க்கிறேன்' பகுதியில் அவரைப் பற்றி விரிவாக எழுதுவேன்.

இந்தச் சுவடியில் அவர் புதல்வர்களை எழுத்தாளர் சுப்ர. பாலன் சந்தித்து, தங்கள் தந்தையைப் பற்றி அவர்களிருவரும் கூறியவற்றைத் தொகுத்து எழுதியுள்ளார். பல செய்திகள் அதில் நமக்குத் தெரிய வருகின்றன. அமரர் கல்கி, டாக்டர் மு.வ. - விந்தனைப் பாராட்டி எழுதிய முன்னுரைகள் இந்தச் சுவடியில் இடம் பெறுகின்றன. மக்கள் கலைஞரின் முன்னுரை அவர் துணிவை எடுத்துக் காட்டுகிறது. மேலட்டையில் மக்கள் எழுத்தாளரின் வண்ணப்படத்தை வெளியிட்டுப் பெருமையடைகிறேன்.

ஒவ்வொரு சுவடியிலும் புகழ்பெற்றவர்களின், புகழ்மிக்க மகன்களிடம் கேட்டு சுப்ர. பாலன் எழுதுவதைப் பலர் பாராட்டுகிறார்கள். அமரர் த.நா. குமார சாமி 'நாதஸ்வரம் நன்றாக வாசிப்பார்?' என்ற செய்தி எனக்கே புதுமையாக இருந்தது. தமிழ்ப் படைப்பாளர்களின் வரலாற்றில் அழியா இடம் பெறும் செய்திகள்.

திருமூலரின் மந்திர பூர்வமான தமிழ் நயத்தை மேதை நந்தி அடிகள் எளிய நடையில் விளக்கி அளித்துள்ளார். புலவர் ஞானச் செல்வன் கட்டுரை பாரதி சிந்தனைக்கு உற்ற விருந்து. அப்பர் பெருமானின் பாடலில் புதைந்துள்ள வரலாற்று - இலக்கியச் சிறப்பை - டாக்டர் இரா. கலைக்கோவன் விளக்கிப் பயனுள்ள கட்டுரையாக வடித்துள்ளார்.

புத்துலகச் சிற்பி யுகபாரதியின் கட்டுரை ஒவ்வோர் இதழிலும் நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

ரப்பரைத் தூய தமிழில் அழிப்பான் என்று தூய தமிழ் இலக்கியவாதிகள் கூறுவார்கள். ஆனால் பொருளாதாரத்தை உயர்த்தும் அந்த 'ரப்பரின்' பயன், உருவாகும் விதம், உப-பொருள்கள் இவற்றை அறிவியல் மேதை எம். தோத்தாத்ரி எளிய நடையில் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

தவத்திரு கர்மயோகி எழுதியுள்ள 'மனிதன் தேடுவது' கட்டுரை வாழ்க்கை வளம்பெற உதவுகிறது.

'இவர், இப்போது என்ன செய்கிறார்' பகுதியும், புகழ்பெற்ற அறிவாளிகள் இன்று என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய உதவுகிறது.

'வானம் அளப்போம்', 'வானநூற் பயிற்சி கொள்' என்றார் மகாகவி. வான மண்டலத்தில் நிகழும் மாறுதலை எழுத்தாளர் புஷ்பா தங்கதுரை நாம் அறியச் செய்கிறார்.

கவிஞர்களிடம் கேள்விகள் கேட்டுப் பயனுள்ள உளம் திறந்த விடைகளைப் பெற்று வரும் கவிஞர் ஜானகிராமன், இந்தச் சுவடியில் கவிஞர் நா. காமராசனைச் சந்தித்து அவருடைய 'நான் ஒரு கம்யூனிஸ்ட்' என்று ஒளிவுமறைவு இல்லாத பதிலைப் பெற்றுள்ளார்.

'இலக்கியப்பீடம்' சிறுதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகளைத் தவிர, பாராட்டுப் பெறும் சில கதைகளை வெளியிட முடிவு செய்து, ஒவ்வொரு கதையாக வெளியிட்டு வருகிறோம். சென்ற சுவடியில் திரு. என். சொக்கன் எழுதிய சிறுகதையும், இந்தச் சுவடியில் ச. கலியாணராமன் எழுதிய சிறுகதையும் உறுதியாக வாசகர்கள் பாராட்டுதலைப் பெறும்.

அமரர் ரங்கநாயகி அம்மாள் நாவல் போட்டியில் பரிசு பெற்ற திரு. பா. சத்திய மோகன் எழுதிய 'காக்கைச் சிறகினிலே...' தொடரைப் படிப்பவர்கள் பாராட்டுகிறார்கள்.

'கச்சிமூதூர் கருணை வள்ளலை' நேரே கண்டு ஆசிபெற்ற உணர்வை அடைகிறோம் என்று ஒவ்வொரு சுவடியிலும் படிப்பவர்கள் பாராட்டுகிறார்கள். எழுத்தாளர் 'சத்யகாமனின்' தொண்டு மறக்க முடியாதது.

இந்தச் சுவடியில் வெளிவந்துள்ள கவிஞர்கள் முத்து. எத்திராசன், கா. சங்கரன், கவிஞர் சுடர், இளஞ்சுடர் கவிதைகள் பீடத்தின் பெருமையை உயர்த்துகின்றன.

**கலைமாமணி விக்கிரமன்**

மறக்க முடியாத நிகழ்ச்சி:

# மகாத்மாவை வணங்கிய கே.பி. சுந்தராம்பாள்

பிரபல பாடகி கே.பி. சுந்தராம்பாள் கணீரென்ற குரலில் பாடி, லட்சக்கணக்கான ரசிகர்களை அந்தக் காலத்திலேயே ஈர்த்தவர் புகழ்பெற்ற நாடக நடிகர், திரைப்பட நடிகர் என்பவை எல்லாம் இருக்கட்டும். அவர் சிறந்த தேசப்பற்று மிக்கவர்.

புகழ்மிக்க ஜி.ஏ. நடேசன் அவர்கள் சென்னை, தம்பு செட்டி தெருவிலிருந்து, மயிலாப்பூர் லஸ்ஸுக்கு புது வீடு கட்டிக் கொண்டு இடம் மாறினார். 'மங்கள விலாசம்' என்று பெயர்.

இப்போதுள்ள நாகேசுவரராவ் பூங்கா பல ஆண்டுகளுக்கு முன்பு குட்டையாகத் திகழ்ந்தது. அதன் அருகே மாளிகை போன்ற வீடு 'மங்கள விலாசம்'.

அந்த வீட்டிற்கு தேசபிதா மகாத்மா காந்தி விஜயம் செய்ததை நினைவுகூர்ந்து திருமதி ஜானகி சுப்பிரமணியம், மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றை விவரித்தார்.

மகாத்மா காந்தி அங்கு வந்தது அறிந்த திருமதி கே.பி. சுந்தரம் பாள் அவரைத் தரிசித்து வணக்கம் தெரிவிக்க வந்தார். மகாத்மாவின் காலில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கிய அம்மையாரை, மகாத்மா தூக்கி நிறுத்தினார். அப்போது கணீரென்ற குரலில் பாடலொன்றைப் பாடினார், கே.பி.எஸ்.

'காந்தியோ பரம ஏழை சந்நியாசி
கருதும் சுதந்திர ஞான விசுவாசி
ஆழ்ந்த சக்தியுடைய ராட்டினத்தாலே
அடிமை அகற்ற வந்தார் அன்பாய் முன்னாலே
தாழ்ந்த சோதரர்கள் தாய் தந்தை போலே
தரணியில் அவதாரம் செய்தார் அக்காலே...'

(பிரபல பத்திரிகையாளரும் தேசத் தொண்டருமான ஜி.ஏ. வைத்ய ராமய்யரின் (ஜி.ஏ. நடேசனின் மூத்த சகோதரர்) பெண் லட்சுமி யம்மாள். அவருடைய கடைசி பெண் திருமதி ஜானகி சுப்பிர மணியம். மகாகவி பாரதியின் பாடல்களை கணீரென்று பாடுபவர். அந்தப் பாடல்கள் ஒலிநாடாவாக வெளிவந்துள்ளது)

# 'முல்லைக்கொடியா'ளைப் பெற்றவர்!

# விந்தன்

அச்சுக்கோப்பவராய்த் தொடங்கித் தமிழகமே வியந்து நோக்கிய எழுத்தாளராக, இதழாளராக, திரைப்பட வசனகர்த்தாவாக, பாடலாசிரியராக - பன்முகம் கொண்டு பரிணமித்தவர் 'விந்தன்'. அவரைப் பற்றிய நினைவுப் பெருமிதங்களை இங்கே பகிர்ந்து கொள்பவர்கள், அவருடைய குமாரர்கள் வரதராஜனும், ஜனார்த்தனமும்.



அந்த இளைஞர் புதிதாக கம்பாஸிட்டர் வேலைக்குச் சேர்ந்தவர். அந்தப் பத்திரிகை ஆசிரியர் கையெழுத்துப் படியை அச்சுக்கோத்து அது அவருக்குப் போனது. 'என் எழுத்து கடவுளுக்கும் கம்பாஸிட்டருக்கும் மட்டுமே புரியும்' என்று

சொன்ன பேராசிரியர் கல்கி தான், அந்த ஆசிரியர்! 'வீணை பவானி' நாவல் தான் கம்போஸ் ஆகிக் கொண்டிருந்தது.

அச்சாகி வந்த பக்கங்களைப் பார்த்து கல்கி வியந்து, 'கூப்பிடு அந்தப் பையனை!' என்று ஆளனுப்பி - சுத்தமான வேலைக்குப் பாராட்டாக 'கல்கி' அலுவலகத்தில் ஆசிரியர் குழுவிலேயே மேஜை, நாற்காலி போட்டு அமரச் சொன்னது ஒரு சுவையான வரலாறு.

அந்த இளைஞர்தான் 'விந்தன்' என்ற பெயரில் தமிழ் இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த நாவலூர் வேதாசலம் கோவிந்தன். எங்கள் பாசமிகு தந்தை!

'கல்கி'யில் வேலை பார்த்தபோதே புதுக்கோட்டையிலிருந்து வெளியான 'பொன்னி' மாத இதழிலும் 'நக்கீரன்' என்ற பெயரில் 'கண் திறக்குமா?' என்னும் தலைப்பில் ஒரு கதையை எழுதினார் அப்பா. அந்த மாதிரிச் சிந்தனைகளைக் 'கல்கி' வெளியிடுமா என்று அவர் தயங்கியிருக்கலாம். ஆனால் எழுத்தைப் பார்த்து இனம் கண்டு கொண்டார் கல்கி.


''நீ நம்ம பத்திரிகையிலேயே எழுதலாமே'' என்று ஆசிரியர் தந்த ஊக்கத்தில் எழுதப்பட்ட தொடர்கதைதான் 'பாலும் பாவையும்'. பரபரப்பாகப் பேசப்பட்ட அந்தக் கதைதான் அப்பாவைத் திரைப்படத் துறைக்கு ஈர்த்தது.

ஒரு பிரபல திரைப்பட நிறுவனம் அந்தக் கதையைப் படம் எடுக்கிறோம் என்று சொல்லி, வருந்தி அழைத்ததன் பேரில், பத்திரிகை வேலையை உதறி விட்டு, திரைப்பட நிறுவனத்துக்குப் போனார்.

தன்னுடைய கதையை தன் பெயரில் இல்லாமல், '............ கதை இலாகா' என்கிற பெயரில் எடுக்கப் போகிறார்கள் என்றறிந்து, தன்மானம் இடம் தராமல் மறுநாளே வெளியே வந்தார் அப்பா.

'கல்கி'யை விட்டு விலகியபோதே அதிபர் சதாசிவம் தடுத்துப் பார்த்திருக்கிறார். ''விந்தன்! ............. அவர் அழைக்கிறார் என்று சினிமாவுக்குப் போக விரும்புகிறீர்கள். அங்கே போனால் கார், பங்களா, வசதிகள் கிடைக்கலாம். ஆனால் உங்கள் எழுத்தில் இருக்கிற ஜீவன் போயிடும். இப்போ கூட ஒண்ணும் ஆயிடலை.

பேசாமப் போய் வீட்லே உட்கார்ந்து வேலையைப் பார்க்கலாம்''. கல்கி இவ்வளவு பேசவில்லை. ஆனால், சற்றுக் கோபம் வந்திருக்க வேண்டும். கையைக் காட்டி 'போ' என்று ஒரே எழுத்தில் அனுப்பிவிட்டிருக்கிறார்.



வரதராஜன்



ஜனார்த்தனம்

சதாசிவம் அவர்கள் அழைத்துப் பேசியும் கேளாமல், வேலையை உதறி விட்டுப் போய் அங்கே ஒரு நாள் தான் இருக்க முடிந்தது. சில நாள்களிலேயே இயக்குநர் ராமண்ணா, அப்பாவை வரச் சொல்லி வேலை தந்திருக்கிறார். 'விந்தன்' திரைக் கதை - வசனம் எழுதிய முதல் படம்தான் ராமண்ணாவின் 'வாழப் பிறந்தவள்'.

தன்னை 'இனம்' கண்டு கொண்டு எழுத்துலகில் வாய்ப்பளித்த பேராசிரியர் கல்கியின் பிரபல வரலாற்று நாவலான 'பார்த்திபன் கனவு' திரைப்படமானபோது அதற்கு வசனம் எழுதுகிற பேறும் அப்பாவுக்குக் கிடைத்தது. அத்துடன் அதில் இடம் பெற்ற 'இதய வானில் உதய நிலவே! எங்கே போகிறாய்?' என்ற இனிமையான பாடலையும் எழுதினார் அப்பா.

குலேபகாவலி படத்தில் வரும் 'மயக்கும் மாலைப் பொழுதே நீ போ', கூண்டுக்கிளியில் வரும் 'கொஞ்சும் கிளியான பெண்ணை' போன்ற சிரஞ்சீவிப் பாடல்களை எழுதியதும் அப்பாதான். பத்துப் பாடல்களுக்குள்தான் அப்பா எழுதியது. இருப்பினும் பெயர் தந்த பாடல்கள் அவை. அதே போல் கதை - வசனம் எழுதிய படங்களின் எண்ணிக்கையும் ஏழு தான்!

திரைப்படத்துறைத் தொடர்பு அப்பாவுக்கு சரிப்பட்டு வரவில்லை. எப்படியோ பத்தாண்டுக் காலம் அதில் உழன்றார். அவரிடம் ஓர் ஒழுங்கு இருந்தது. எங்கும் வெளியில் உணவு அருந்தவே மாட்டார். நண்பகல் ஒருமணிக்கு எப்படியும் வீட்டுக்கு வந்து விடுவார். அதே போல் இரவு ஏழு மணியானால் கண்டிப்பாக வீட்டில்தான் இருப்பார். திரைப்படத்துறை சம் பந்தப்பட்ட எந்த விருந்திலும் அப்பா கலந்து கொண்டதில்லை.

ஒரு பட அதிபர் 'ஆதி மந்தி - ஆட்டன் அத்தி' கதையைப் படமாக்குகிற எண்ணத்தில் அப்பாவை அழைத்து, 'டிஸ்கஷன்' வைத்திருந்தார். அங்கே போய்ப் பத்து நிமிடங்கள் போல் உட்கார்ந்திருந்து விட்டு -

''உங்களையெல்லாம் புத்திசாலியாக்க என்னால் முடியாது. வருகிறேன்'' என்று சொல்லிப் பெரிதாய் ஒரு கும்பிடு போட்டு விட்டு வந்தவர் அப்பா.

எழுத்தாளர்கள் பலரையும் பற்றுகிற நோய் அப்பாவையும் பிடித்தது; பத்திரிகை தொடங்குகிற ஆசைதான். 'மனிதன்' என்ற மகுடத்தோடு நாலணா விலையில் (இருபத்தைந்து பைசா) மாத இதழ் ஒன்றை நடத்தினார். மூச்சைப் பிடித்துக் கொண்டு பதின்மூன்று இதழ்களைத்தான் அவரால் வெளியிட முடிந்தது.

'மனிதன்' முதல் இதழ் வெளியானது ஒரு சுதந்தர தினத்தில். முதல் இதழை 'என்னை மனிதனாக்கிய மனிதன், ஆசிரியர் 'கல்கி' அவர்களுக்கு அன்புடன் விந்தன், 15.8.54' என்று தன் கையெழுத்திலேயே பதிவு செய்து, பேராசிரியர் கல்கியின் படத்தையும் போட்டு 'சமர்ப்பணம்' எழுதினார்.

அப்பாவின் முன்னோர்கள் மிகவும் வசதியாக வாழ்ந்து நொடித்துப் போனவர்கள். செங்கல்பட்டு மாவட்டம் நாவலூரில் பெரிய பண்ணையார் என்கிற சிறப்போடு ஊரையே ஆண்டவர் - தாய்வழித் தாத்தா முருகேச நாயக்கர். ஜமீன்தார் என்றே சொல்வார்கள். பால் வியாபாரம். சிலம்பப் பயிற்சியைப் பொழுது போக்காக வைத்திருந்தவர் அவர்.

குடும்பம் நொடித்துப் போய் சென்னைக்கு இடம் பெயர்ந்த போது அப்பாவுக்கு ஒன்பது வயது. பள்ளிப்படிப்பு முழுவதுமாகத் தடைப்பட்டது. தண்டையார்ப்பேட்டையில் குடியேறினார்கள். ஜட்கா வண்டியில் வைத்துப் பால் வியாபாரம் செய்தார் தாத்தா. கூட்டுக் குடும்பமாக விளங்கியது அது.

கொஞ்ச நாள்களில், எங்கள் தாத்தா - அப்பாவின் அப்பா சூளை, பட்டாளத்தில் சொந்தத்தில் ஒரு வீடு வாங்கிக் கொண்டு தனியே வந்து விட்டார். அந்த வீடு இன்றைக்கும் இடிபாடுகளாய் அப்படியே இருக்கிறது. தாத்தா எப்போதோ வாங்கிய வெறும் ஐநூறு ரூபாய்க் கடன், அந்த வீட்டை விழுங்கி விட்டது. முகவரி கூட நினைவிருக்கிறது, 'நெ 1, வீராசாமித் தெரு' என்பதாக!

அப்பா இரவுப் பாடசாலையில் படித்துத்தான் அறிவை வளர்த்துக் கொண்டார். ஓவியம் வரைவதில் ஆர்வமும் திறமையும் இருந்தன. எழும்பூரில் உள்ள 'ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸ்' ஓவியப் பள்ளியில் சேர்ந்து படித்தார்.

'கல்கி'க்கு வருவதற்கு முன்னால் மாசிலாமணி முதலியார் 'தமிழரசு' என்ற பெயரில் நடத்திய மாதப் பத்திரிகையில் அச்சுக் கோப்பவராக வேலை பார்த்தார். அப்போது பாவேந்தரின் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்று தொடங்கும் பிரபலமான பாடலை தாம் அச்சுக்கோத்ததைப் பெருமையோடு சொல்வார் அப்பா.

'கல்கி'யில் வெளியான 'முல்லைக்கொடியாள்' நூல் வடிவம் பெற்றபோது அதற்குப் பேராசிரியர் கல்கி அருமையான முன்னுரை எழுதினார். நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே தொடங்கப்பட்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு, முதன் முதலாக அந்த நூலுக்குத்தான் கிடைத்தது. அப்பாவின் எழுத்துகள் பலரையும் புருவம் உயர்த்தி வியக்க வைத்தன. 'நடை புதுசு, கதை புதுசு, வேகம் புதுசு. யார் இந்த விந்தன்?' என்று கேட்க வைத்தன.

'புத்தகப் பூங்கா' என்ற பெயரில் நூல் வெளியீட்டகம் ஒன்றையும் தொடங்கிக் கைகளைச் சுட்டுக் கொண்ட அனுபவமும் அப்பாவுக்கு உண்டு. அந்தப் பதிப்பகத்தில் அப்பா தன்னுடைய நூல்களை எதையும் வெளியிடவில்லை. சாண்டில்யனின் 'ஒன்பதாவது இரவு', ஜெயகாந்தனின் 'ஒரு பிடி சோறு', இளங்கோவனின் 'சாவே வா', அடால்ஃப் ஹிட்லரின் 'அந்தரங்கக் காதலிகள்' என்று ஒரு நூல் - இந்த நான்கும்தான் அதில் வெளியிடப்பட்டவை.

இவற்றில் 'ஒரு பிடி சோறு' தொகுப்பை நூல் மதிப்புரைக்காக என்று எடுத்துப் போய் 'ஆனந்தவிகடன்' அலுவலத்தில் கொடுத்தோம். அந்தக் கதைகளைப் படித்துப் பார்த்த பிறகுதான் ஜெயகாந்தனுக்கு ஆனந்த விகடனில் மிகப் பெரிய கௌரவம் கிடைத்தது என்பது சுவையான நிகழ்வு.

'குழந்தைகள் கண்ட குடியரசு' என்று ஒரு படத்தை பந்துலு தயாரித்தார். அதற்குக் கதை - வசனம் எழுதியதற்காகக் கிடைத்த பணத்தில்தான் இப்போதுள்ள ஒன்றரை கிரவுண்டு வீட்டை 1961இல் அப்பா வாங்கினார். நிறைய மரங்கள், விதம் விதமான

செடிகள் என்று வளர்த்தார். தோட்டம் போடுவதில் அலாதியான விருப்பம் உண்டு அப்பாவுக்கு. சுண்டைக்காய் செடியொன்று இருந்தது. தினசரி சுண்டைக்காய்க் குழம்பு, கூட்டு என்று மணக்கும்.

அப்பா அசைவ உணவுப் பிரியர். ஆனால் தினமும் கட்டு படியாகாது. ஆகையால் ஞாயிற்றுக்கிழமை எல்லாக் குழந்தை களுக்கும் கறிக் குழம்பு கிடைக்கும்.

அப்பாவுக்கு இரண்டு மனைவியர். முதல் மனைவி நீலாவதி மூன்றாண்டுகளே வாழ்ந்தார். அவருக்கு இரண்டு குழந்தைகள். அடுத்து சரஸ்வதி. இவருக்கு ஆறு குழந்தைகள். ஆக, நாங்கள் ஐந்து பிள்ளைகள், மூன்று பெண்கள். எல்லாருக்கும் 'விந்தன்' சாரின் குழந்தைகள் என்கிற பெருமையால் சிரமமில்லாமல் நல்ல வேலைகள் கிடைத்தது ஒரு பெரும் பேறு.

புளியந்தோப்புப் பகுதியில் அப்பா இருந்தபோது, தி.மு.க. வின் என்.வி. நடராசன் நல்ல நண்பர். எங்கள் பக்கத்து வீட்டில் அறிஞர் அண்ணாவின் நண்பர் பேராசிரியர் மா.கி. தசரதன் இருந்தார். அப்பா பொதுவுடைமை சித்தாந்தங்களில் பற்றுடைய வராக இருந்தார். தி.மு.கழகம் தொடங்கிய காலத்தில் அப்பா வைக் கட்சியில் சேரும்படி அழைத்ததுண்டு. ஆனால், அப்பா கடைசி வரை எந்த அரசியல் கட்சியோடும் தம்மை இணைத்துக் கொண்டதில்லை. கட்டுப்பாடுகள் அற்ற சுதந்தரமான சிந்தனை களே அவருடைய தனித்தன்மையாக இருந்தது.

உலகத் தமிழ் மாநாடு முதன்முறையாக அண்ணாவின் காலத்தில் சென்னையில் நடைபெற்றபோது, சில எழுத்தாளர் களுக்கு நகர்ப் பகுதியில் இலவச வீட்டுமனை வழங்க முன்வந்தது அரசு. மா.கி. தசரதன் பரிந்துரையில் அப்பாவுக்கும் மனை தருவதாக அண்ணாவே அழைத்துச் சொன்னார். ''வேண்டாம்'' என்று சொல்லி அதைக் கூடப் பெற்றுக் கொள்ள மறுத்த புதிர் மனிதர் அப்பா.

அப்பாவுக்குப் பண்டிகைகள் என்றால் மிகவும் பிடிக்கும். குறிப்பாக கண்ணன் பிறந்த நாள், தீபாவளிக்கு மறுநாள் வரும் கேதார கௌரி விரதம் போன்றவை. ஆனால், கோயிலுக்குப் போய் வழிபடுகிற வழக்கம் கிடையாது.

கண்ணன் பிறப்பு நாளன்று வீடே அமர்க்களப்படும். கண்ணன் படத்துக்கு அப்பாவே மலர் மாலைகள் போட்டு அலங்காரம்

செய்து விடுவார். பெண் குழந்தைகள் அவ்வளவு பேரையும் முன்னால் அமர வைத்துப் பாடச் சொல்லுவார். பாடி, பூஜையெல்லாம் முடியும் வரை நாங்கள் தின்பண்டங்களுக்காக ஆவலோடு காத்திருப்போம்.

வீட்டில் கண்ணன், பெருமாள், சரஸ்வதி படங்களோடு பாரதியார், காந்தியடிகள், நேரு, சுபாஷ் சந்திரபோஸ், கல்கி, தாகூர் படங்கள் இருக்கும். அப்பாவுக்கு தன்னைப் படங்கள் எடுத்துக் கொள்வதில் ஆர்வம் கிடையாது. போட்டோவுக்குப் 'போஸ்' தரவே மாட்டார். அதேபோல் மேடையேறிப் பேசுவதிலும் விருப்பமில்லை. எழுத்தில் இருந்த வேகமும் துடிப்பும் அவர் மேடையில் பேசியிருந்தால் வெளிப்பட்டிருக்கலாமோ என்னவோ!

இறை நம்பிக்கையோடு விளங்கிய அப்பாவின் கடைசி நாள்களில் ஒரு மாற்றம் உண்டானது. சுய மரியாதைக் கொள்கைகளில் ஈடுபாடு ஏற்பட்டது. பெரியாரின் கொள்கைகளை விளக்கி 'பெரியார் அரிச்சுவடி' என்று ஒன்றை எழுதி அச்சிடாமலே அதை வைத்திருந்தார்.

'குட்டக் குட்டக் குனிபவன் முட்டாள்
நூலோர் எல்லாம் மேலோர் அல்லர்
கைம்பெண் ணாயினும் கட்டு தாலியை
கிளர்ச்சிகள் இன்றி வளர்ச்சி இல்லை'

போன்ற சிந்தனைகளோடு 'கோயிலென்றும் குளம் என்றும் சுற்ற வேண்டாம்' என்றும் எழுதப்பட்டிருந்த அந்த 'அரிச்சுவடி'யை அப்பா மறைந்து பன்னிரண்டாண்டுகள் கழித்து 1987இல் நாங்களே வெளியிட்டோம்.

எழுத்துகளில் நிறைய எதிர்ப்புகளைச் சந்தித்ததிலும் அப்பாவுக்குத் தனியிடம் உண்டு. 'அன்பு அலறுகிறது', 'மனிதன் மாறவில்லை' போன்ற கதைகளுக்காக நீதி மன்றம் வரை போக நேர்ந்தது. 'அன்பு அலறுகிறது' கதை 'அமுதசுரபி' இதழில் தொடராக வந்தபோது அத்தியாயத் தொடக்கத்தில் பூத்தொடுக்கும் விரல்களை வரையும்படி ஓவியர் 'ஸ்ரீபா'வுக்கு ஆலோசனை தந்தாராம். 'அத்தியாயம் - 1' என்றால் ஒரு கண்ணி, 'அத்தியாயம் - 2' என்றால் இரண்டு கண்ணிகள் என்று பூக்கள் இருக்கும். ஓவிய மனத்தின் சிந்தனை இது.

குழந்தைகள் மீது அளவற்ற பாசம் உடையவர் அப்பா. எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் எங்களை எந்த வீட்டுக்கும் அனுப்ப மாட்டார். தன்னுடைய பார்வையிலேயே நாங்கள் எப்போதும் இருக்க வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தார். யாருக்காவது சிறிது அடிபட்டால் கூட மிகவும் துடித்துப் போவார் அப்பா.

ஞாயிற்றுக்கிழமைகளில் கண்டிப்பாக எண்ணெய்க் குளியல் தவற மாட்டார். உடனே பிளேடால் நகம் வெட்டிக் கொள்ள வேண்டும். இரவில் அதிகமாகத் தூங்க மாட்டார். பகல் உணவுக்குப் பிறகு சிறு தூக்கம் போடுவார். அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து அரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கி விடுவார். ஆறு மணிக்கு மீண்டும் படுத்து ஒரு மணி நேரம் உறங்குவார்.

காலையில் அவருக்கு மட்டும் ஹோட்டலிலிருந்து காபி வாங்கித் தருவோம். ஒன்பது மணியானால் இரண்டு சுருட்டுகள். ஒரு பொடி டப்பா. அப்புறம் கடிதங்கள் எழுத, 'இன்லேண்ட் லெட்டர்கள்'. பதினோரு மணிக்கு ஒரு டீ. மறுபடியும் மாலை நான்கு மணியளவில் ஒரு டீ வேண்டும்.

சினிமாவிலிருந்து மீண்டு வந்து பத்திரிகைத் துறையில், சாவி யின் காலத்தில் தினமணி கதிருக்கு வந்தார். அப்போதுதான் 'எம்.கே. தியாகராஜ பாகவதர் வரலாறு', 'எம்.ஆர். ராதாவின் சிறைச் சாலைச் சிந்தனைகள்' போன்றவை வெளியாயின. மகாபாரதக் கதையைப் 'பாட்டினில் பாரதம்' என்று தினமணியில் எழுதிய போது ஆசிரியர் ஏ.என். சிவராமன் அழைத்துப் பாராட்டியதுண்டு.

எழுதாத கதைக்குப் பணம் பெற்ற நிகழ்வும் உண்டு. ஒரு சமயம் 'கல்கி' அதிபர் சதாசிவம், அப்பாவை அழைத்து ஒரு தொடர் எழுதச் சொல்லித் தலைப்பு என்ன என்று கேட்டார்.

'வாழ்க்கை ஒரு விளையாட்டு' என்று அப்பா தலைப்பைச் சொன்னவுடன், ''பேஷ்! பேஷ்! நன்னா இருக்கு!'' என்று பாராட்டி உடனே இரண்டாயிரம் ரூபாய் பணமும் தந்தாராம் சதாசிவம். ஆனால், அந்தக் கதை பல காரணங்களால் எழுதப் படவே இல்லை என்பது தனிக்கதை.

சந்திப்பு: **சுப்ர. பாலன்**

திருமந்திரம் காட்டும் வாழ்க்கை நெறி:

# செல்வம் வெல்லுமோ கூற்றுவனை?

## நந்தி அடிகள்

செல்வன் அவன் -

சிறிதும் ஈகை குணமற்றவன். பணம் சேர்ப்பதிலே குறியாக வாழ்பவன். அதில் வெற்றியும் பெற்றவன். 'சீமான்' என்ற பட்டப் பெயரும் உண்டு அவனுக்கு. தனக்கும் சரி, குடும்பத்திற்கும் கூட சுகமான வாழ்வு தர விரும்பாதவன். சுகமாக வாழ்பவர்களைக் கண்டால் கூட பொறாமைப்படுபவன். 'இப்படி செல்வத்தை வீணாக்குகின்றனரே' என பெருமூச்செறிவான்.

எளியோர், வறியவர்களுக்கு அதுவும் தன் உறவினர்களுக்குக் கூட உதவி செய்யாமல் சதா 'பணம்... பணம்' என்று அலைவதும், பணம் சேர்ப்பது ஒன்றே வாழ்வின் கடமை என்றும் நினைப்பவன். அவனிடம் செல்வம் பல வகையிலும் வந்து சேர்ந்த வண்ணமிருந்தது.

ஒருநாள் -

அடுத்த கிராமத்துக்கு வட்டிப்பணம் வசூலித்து வரப் புறப்பட்டான் அந்தச் சீமான்.

ஆற்றைக் கடந்து போக பரிசல் உண்டு. இளங்கன்னியர் நகையொலி செய்வது போல ஆறு இருகரைகள் தொட்டும் ஓடிக் கொண்டிருந்தது.

'புது வெள்ளம். அதுதான் நீர் இப்படி இரு கரைகளைத் தொட்டுச் செல்கிறது. பரிசலில்தான் போக வேண்டும்' என்று நினைத்தபடியே பரிசலோட்டியை நோக்கி சீமான் நடந்தான்.

'சுவாமி! புது வெள்ளம். துடுப்புப் போட முடியாது. ஐயா, அவசர ஜோலிங்கறதாலே சம்மதிக்கிறேன்.

சீமான், அவன் கேட்ட தொகையைத் தர முடியாது என்று பேரம் பேசினான். ஊரில் பெரிய தனவான். பொல்லாப்பு ஏன் என்று எண்ணியவனாக பரிசலோட்டி சம்மதித்தான். சீமான் பரிசலில் ஏறுகிறான்.

உள் மனம் 'எப்படியோ பயலை ஏமாற்றி விட்டேன். காசு என்ன செடியில் முளைக்கிறதா?' - ஏழை பரிசலோட்டி கேட்ட தொகையைத் தர முடியாது என்று பேரம் பேசி, அவனைத் தன்னுடைய விருப்பம் போல் சொன்ன குறைந்த தொகைக்கு பரிசல் விடச் செய்த தனது திறமையைத் தனக்குள்ளாகவேப் பெருமை பேசி பெருமிதத்துடன் பரிசலில் பயணப்பட்டுக் கொண்டிருந்தான் சீமான்.

நீரலைகள் கம்பீரத்துடன் சுழன்றன. புது வெள்ளத்தின் ஆர்ப்பாட்டமும் தொடங்கியது. ஆற்றில் வெள்ள நீரின் அபாயம் அதிகமாயிற்று. பரிசலோட்டிக்கோ பயம் ஒருபுறம் பிறந்தது.

பரிசல் தாறுமாறாக ஆடத் தொடங்கியவுடன், "ஐயோ! சுவாமி, ஆத்துலே வெள்ளம்... பரிசலை எடுக்க முடியாதுன்னு சொன்னேனே கேட்டீங்களா? இப்ப தண்ணி ஏறுதே" என்று இரைந்தான். கரை இன்னும் வரவில்லை.

அடுத்த ஊரில் கடன் வாங்கிச் சென்ற அப்பாவுவிடம் எப்படியும் பணத்துடன் நின்று போன வட்டித் தொகையையும் வாங்கி விட வேண்டும் என்ற வெறியுடன் அல்லவா சீமான் புறப்பட்டான்? அப்பாவு வண்டி மாட்டை விற்று வந்து தொகையைப் பறித்து வராவிட்டால் பணம் வந்து சேராது என்ற ஒரு பேராசை சீமான் மனத்தில்.

பெரிய அலை வந்து பரிசலைக் கவிழ்த்து விட்டது. பரிசலோட்டியும் சீமானும் ஆற்றின் புது வெள்ளத்தில் தவித்தனர். பரிசலோட்டிக்கு நீச்சல் தெரியும். சீமானுக்கோ?

கடன், வசூல், வட்டி விவரம், பேய் போன்று பணத்தைக் காப்பது எப்படி என்பது மட்டுமே தெரியும். நீச்சல் தெரியாதே!

ஆற்றின் புது வெள்ளத்தின் வேகத்தை சமாளிக்க முடியவில்லை. நீர் ஆற்றின் உள்ளே சீமானைக் கொண்டு சென்றது. மீண்டும் ஆற்று வெள்ளத்தின் மேல் தலையை நீட்டி "ஐயோ காப்பாத்துங்களேன்" என அலறினான். பிறகு காணவில்லை. சில நிமிட நேரத்திற்குப் பிறகு நீரில் மேல் வந்தான். மூச்சு திணறியது. சாகப் போகிறோம் என்ற பயமும் வந்தது.

ஆற்று நீர் சீமான் என்றால் விட்டு விடுமா?

'இவ்வளவு செல்வம் எதற்காக சேர்த்தோம். மனைவி, மக்களும் கூட அனுபவிக்க விடாமல் சேர்த்தோமே. அவர்களுக்குப் பணமுள்ள இடம் கூடத் தெரியாதே'. இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் தெய்வத்தின் மேல் நம்பிக்கை வந்தது.

'தெய்வமே என்னைக் காப்பாற்று' என்று அலறினான் சீமான். பரிசலோட்டி துணிவுடன் சீமானின் தலைமுடியைப் பற்றி இழுத்தபடியே நீந்தினான்.

கரையில் இருவரும் அலைகளால் தூக்கி எறியப்பட்டனர்.

பரிசலோட்டி சீமானைக் கரை மணலில் படுக்க வைத்து, அவர் குடித்த நீரையெல்லாம் வெளியே எடுக்க வைத்தான்.

சீமானுக்கு நினைவு வந்தபோது பரிசலோட்டி கைகளைக் கட்டியவாறு நின்றிருந்தான்.

அப்போது சீமானுக்கு பரிசலோட்டி தெய்வமாகத் தோன்றினான். இந்த ஏழைக்குச் சேர வேண்டிய கூலியைக் கூட குறைத்தேனே! இவன் காப்பாற்றாவிட்டால் நீரில் மூழ்கி இறந்து போயிருப்பேனே! தெய்வமல்லவா பரிசலோட்டி மூலம் என்னைக் காப்பாற்றியது யமனிடமிருந்து! என்னிடம் இருந்த பணமா என்னைக் காத்தது?

ஒரே ஒரு வேளை. அதுவும் சாவின் சமீபத்தில் இறைவனை அழைத்ததற்கே இப்படி ஓர் உதவியைப் பெற்றேனே! இந்தப் பணம் ஆற்று வெள்ளம் தன்னுள் அகப்பட்டவரது மனத்தைக் கலக்கியது போல் கலக்கி விட்டதே! செல்வம் சேர்க்க எண்ணினேனே தவிர, தெய்வத்தை நினைக்காமல் போனேனே!

ஏழைப் பரிசலோட்டியை நோக்கி தன் இரு கரங்களையும் கூப்பி வணங்கினான் சீமான்.

"உனக்குப் புதிய பரிசல் வாங்கித் தருவேன். கவலைப்படாதே" என்றான்.

செல்வமும் ஆற்று வெள்ளம்போல் ஆரவாரம் செய்து விட்டு பின் மறைந்து போய் விடும் என்பது இன்றுதான் புரிந்தது.

இறையுணர்வும், செல்வத்தை வறியவர்களுக்குக் கொடுத்து மகிழும் தான குணமுமே சிறந்த குணங்களாகும்.

என் செல்வத்தையும் வறியவர் களுக்கு, ஈசனடியார்களுக்குத் தந்து தெய்வத்தை நோக்கி நடப்பதே என் கடமை.

சீமான் பரிசலோட்டியைத் தன் இல்லத்திற்கு வந்து பணம் பெற்றுப் போகுமாறு கூறி விட்டுத் தன் இல்லம் நோக்கி நடந்தான். ஒரு புதிய மனிதன் ஆனது போன்ற உணர்வு நெஞ்சுக்குள் சுழன்றது.

சித்தர் பெருமான் திருமூலத்தேவர் பிரான் இக்காட்சியை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகிறார்...

**''செல்வர்களே! இறை உணர்வே உண்மையான செல்வம் ஆகும். செல்வத்தை மட்டும் துணையாகக் கொண்டு கூற்று வனான யமனை வெல்லுதல் முடியுமா? முடியாது என்பதனை அறிந்து கொள்ளுங்கள். தெளிந்த நிலை பெறுவீர். கலக்கம் கொள்ளாதீர்கள்.**

**உங்களிடத்தில் உள்ள செல்வம் ஆற்று வெள்ளம் எப்படி தன்னுள் அகப்பட்டவரின் உடலையும் உள்ளத்தையும் கலக்கும்; புரட்டி எடுக்குமோ அதைப் போன்றதே என்பதனை உணர்வீர்.**

**தெய்வ உணர்வுடன் மக்களிடம் அன்பினைக் காட்டுதலே உண்மையான இன்பம். அதுவே நற்செல்வம் என்று உணருங்கள்''** என்று கூறுகிறார் திருமூலப் பெருமான்.

*''தேற்றத் தெளிமின்; தெளிந்தீர் கலங்கன் மின்;*
*ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே*
*மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்*
*கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.''*

(திருமந்திரம் - 171)


**வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.** (4)

*விருப்பு வெறுப்பு இல்லாதவன் வழியில்*
*நடப்பவர்க்கு எப்பொழுதும்*
*துன்பமில்லை.*



**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு (பி) லிமிடெட்

அமரர் திருமதி ரங்கநாயகி அம்மாள் நினைவு நாவல் போட்டியில்
2004ஆம் ஆண்டுக்கான பரிசு ரூ.5000 பெற்ற நாவல்

# காக்கைச் சிறகினிலே...

## பா. சத்தியமோகன்

### அத்தியாயம் 4

*ஒன்று மட்டும் சர்வ நிச்சயம்! உள்ளுக்குள்ளே என்ன நினைக்கிறோமோ, நினைத்துக் கொண்டிருக்கிறோமோ... அதைத்தான் உலகில் நிகழ்வதாகவும், நிகழப் போவதாகவும் கருதிக் கொண்டிருக்கிறோம். அதுதான் உலகில் நாம் தடுமாறக் காரணம்.*

*அதுவேதான் வாழ்வின் ருசிக்கும் காரணம். அகம் பிரம்மாஸ்மி. தத்துவம் சும்மா இல்லை. சிவானியைப் பார்ப்பதற்கு மேக்ஸ் புரியவில்லை என்ற ஒரு காரணம், திட்டமிடாமல் அல்வாத் துண்டு மாதிரி அமைந்து விட்டதே.*

*இது எப்படி? மனசில் நினைப்பதே இப்போது வெளியிலும் நிகழ்ந்திருக்கிறது. நிகழ்ந்து கொண்டிருக்கிறது.*

இல்லாவிட்டால் அப்பாவே இப்படி சொல்வாரா? 'இராஜகோபால் வீட்டுக்குப் போய் குவார்ட்ரேடிக் ஈக்குவேஷன் கத்துக்கோ' என்று.

இதெல்லாம் மனத்தில் ஓடிக் கொண்டேயிருப்பதால் கேசவனின் மனம் காலேஜில் ஒரு நிலையாக இல்லை.

எப்போது பீரியட் முடியும் என்கிற கணிப்பாகவே இருந்தான். பெரும்பாலும் கணக்கு பீரியட் புரிவதேயில்லை. கண்டிப்புக்குப் பெயர் பெற்ற லெக்சரர் டேவிட்தான் வந்திருந்தார்.

கடுகடு முகமும் பல் கடித்தால் வெளியே தெரியாமல் முறைத்துப் பார்க்கின்ற அகலக் கண்களும் பெரிய பிரச்னை. கவனிக்க முடியாத கணக்கை - தேவையே இல்லாத இந்த கணக்கை - புரிந்து கொண்டது போல் நடிக்க வேண்டியிருக்கிறதே... என்ன செய்வது?

இந்த வருஷம் முதல் பெஞ்சில் உட்கார்ந்தாயிற்று. இன்னும் ஒரு வருஷத்தில் டிப்ளமோ முடித்து வேலை தேடும் படலம்.

கவனமாக இருந்தும் ஒரு முறை கண் செருகி இழுத்துக் கொண்டு போய் விட்டது. கேசவன் மாட்டிக் கொண்டான்.

''ஹேய் பாய்! என்ன பண்றே?'' என்று சாக்பீஸ் துண்டைப் பிய்த்து லொட்டென்று வீச - செம வலி வலித்தது.

''இல்லை சார்... அது வந்து...''

''முதல் டெஸ்கில் உட்கார்ந்து தூங்கறியா? நீயெல்லாம் திட்டமா உருப்பட மாட்டே...''

லெக்சரர் டேவிட் சபிக்கும்போது மிக ஞாபகமாக 'திட்டமாக' என்ற சொல் சேர்ந்து கொள்ளும்.

''திட்டமா இந்த ப்ராப்ளம் செமஸ்டருக்கு வரும்'', ''இப்படி போட்டா திட்டமா ஆன்சர் வரவே வராது'' என்கிற விதமாய் வித வித அர்த்தம் வருகிற மாதிரி பயன்படுத்துவார்.

ஆனால், என்னவொரு சோகம் - அவர் பயன்படுத்தும் நெகட்டிவ் சாபங்கள் படிக்கிற பையன் ஒவ்வொருவனுக்கும் தவம் செய்யும் முனிவர் ஒருவரிடம், ''நீ மனித உருவம் அற்றுப் போகக் கடவது'' என்பது மாதிரி பயம் தருபவை.

கேசவிற்கு நல்ல நாளிலேயே பயம். மென்மைவாதி. சாக்பீஸ் விள்ளல் அடி சரியாக கழுத்துச் சதையில்பட்டு ஓர் அம்பு எம்பி இராஜகோபாலின் சட்டைக்குப் பின்புறம் நுழைந்தது.

அவன் டெஸ்கில் சாய்மானமாக கவிழ்ந்து எழுதுவதுபோல பாவ்லா புரிந்து கொண்டிருந்தான். அதனால் தப்பினான் போலும்.

''இல்ல சார்! இன்னிக்கு...'' என்று லெக்சரர் டேவிட்டுக்குப் பதில் சொல்லத் தொடங்கியபோதுதான் அந்த கூச்ச வியாதி வந்து விட்டது.

''என்ன மேன்! தலையை லொடுக்குன்னு கவுத்துகிட்டு தரையைப் பார்த்து பதில் சொல்றே?''

''அவன் எப்பவுமே அப்படித்தான் சார்!'' இராஜகோபால் தலை நிமிர்ந்து கேசவனுக்குப் பதிலாகப் பேச லெக்சரருக்கு இன்னும் கோபம் அதிகமானது.

*"நீ என்ன அவருக்கு டப்பிங் வாய்ஸா? அவர் பதில் சொல்ல மாட்டாரோ!"*

டிப்ளமா படிக்கிற மாணவனுக்குத் தருகிற மரியாதையாக அது இருக்காது. அவர், இவர் என்று அழைப்பதெல்லாம் கூட அவன், இவன் என்பதற்குச் சமமாகத்தான் இருக்கும். தனது குறை, தனது பலவீனம் வகுப்பில் எண்பத்து மூன்று பேருக்கும் தெரிந்து விட்டதே என்ற உறுத்தலில் இருந்தான் கேசவன்.

*"கேட்கறேன்ல... ஏன் தூங்கினே? தொண்டைத் தண்ணி போக கரடியா கத்தறேனே"* - பதிலாக எதைச் சொல்வது என்று தெரியவில்லை. என்ன காரணம் சொன்னால் தப்பி விட முடியும் என்று கேசவனுக்குத் தெரியவில்லை.

நல்லவிதமாக கணக்கு நடத்திக் கொண்டு வரும்போதே திட்டுகிறவர் குறுக்கே பதில் சொன்னால் என்ன கத்து கத்துவாரோ என்ற பயக்கோழி தலை தூக்கிக் கொத்தியது.

கேசவனுக்கு எப்போதும் போலவே தலை நிமிர்ந்து பார்த்து, கண்ணோடு கண் நோக்கிப் பார்க்கிற தைரியமும் பழக்கமும் இப்போது கை விட்டது. நிமிராமலே இருந்தான்.

*"பொட்டையனாடா நீ?நிமிர மாட்டியா?"*

இந்தக் கேள்வி கேசவனை நோக்கி வீசப்பட்டபோது கேர்ள்ஸ் சைடிலிருந்து சிறிய சிரிப்பலை புறப்பட்டு ஆண்கள் பக்கம் நகர்ந்து இரண்டு மடங்கானது. சிறிய வேதனை பெரிசாகி விட்டது.

குவார்ட்ரேடிங் ஈக்குவேஷன் இனி புரிந்தாலும் போடவே கூடாது என்ற வெறுப்புணர்வு ஒருபுறம் தோன்றியது. தனது சுபாவம் மிகப் பலராலும் தாக்கப்படுகிறது; கவனிக்கப்படுகிறது என்ற உணர்வு கேசவனுக்கு இன்னும் கூச்ச உணர்வைத் தந்தது. தலை இன்னும் தாழ்ந்தது.

லெக்சரர் டேவிட் மிச்சமிருந்த முழு சாக்பீஸையும் கேசவ் மீதே எறிந்து விட்டுப் போனார்.

வகுப்பை விட்டு இருவரும் சைக்கிளில் மெல்ல ஓட்டியபடி வெளி வந்தார்கள்.

எதிரே குல்மோஹர் மர நிழல் சிவப்புப் பூக்களின் கொத்துகளை தீயினால் எழுதிய மலர்க் கவிதை போல பச்சை இலைகள் நடுவே

மிளிர்ந்து குலுங்கியது. காற்றில் எழுப்புவதும் பிறகு தாழ்வதுமாக கிளைகள் செயல்பட பூக்களும் அவ்விதமே செய்தன. கேசவன் அந்த மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீ ஏதாவது பேசியிருக்கலாம்ல... சார்கிட்ட?"

"என்ன சொல்றே நீ? அவரு சடசடன்னு திட்றாரு... நான் பதில் சொன்னா விட்டுடவா போறாரு?"

"எவ்ளோ பேசறே... தலை குனிஞ்சிட்டு!"

"ஆமாண்டா எனக்கு அப்படிதான் வருது."

"மாத்திக்கயேன்."

"முடியலை."

"ஏன் முடியாது?"

"சொல்லிட்டுப் போறானுவன்னு வாழ ஆரம்பிச்சுட்டேன்டா இராஜகோபால்!"

"நான் உன் பிரெண்டுதானே! எங்கிட்டயாச்சும் தலை நிமிர்த்திப் பேசலாம்ல சவுகரியமா..."

"நீ சைக்கிளைப் பார்த்து ஓட்டு இராஜகோபால்!"

"பேச்சை மாத்றான் பார்... பேச்சை" - எதிரே லாரி ஒன்றும் மொபெட் ஒன்றும் கடந்து போயின. சிட்டி லிமிட் முடிந்து வடக்குத் தெருவுக்குள் அவர்களது சைக்கிள்கள் இரண்டும் வளைந்தன.

"அடுத்த வருஷத்துக்கு அடுத்த வருஷம் நாம இரண்டு பேருமே வேலை தேடிகிட்டுப் பிரிஞ்சு போயிடுவோம்... நீ எந்த ஊர்ல இருப்பியோ என்னமோ? கேக்கணும்னு தோணிச்சு கேட்டேன்" என்ற இராஜகோபாலை -

"என்ன கேட்டுட்டே புதுசா?" என்று மறித்தான் கேசவன்.

சிறிது நேரத்திற்குள் தன் ஊனத்தைப் பற்றி பேசுகிறான் என்பது புரிந்தது. குடைந்து குடைந்து பேசும் இராஜகோபாலை வேறு கேள்வி கேட்டாலன்றித் தப்ப முடியாது என்பது புரிந்து விட்டது.

"இப்போ நான் உன் விட்டுக்கு வரலாமா? ரொம்ப நாளாச்சு..."

“எப்படிடா கூலா பேசறே? உன்னை எல்லார் முன்னாடியும் பொட்டைன்னு திட்டிட்ட அவனை சும்மா விட மாட்டேன்டா.”

“இராஜகோபால்! நீ பழசுக்கே போறே... இப்ப உங்க வீடு வந்துருச்சு.”

“வா! காபி குடிச்சிட்டுப் போகலாம்...”

“எதுக்குடா சிரமம்?”

“ஒண்ணும் சிரமம் இல்லை... சங்கோஜப்படாம வா.”

“என்னால வீண் தொந்தரவு.”

“என்ன்டா புதுசா வீட்டுக்கு வர்றவன் மாதிரி...”

கேசவனுக்குள் சிவானி தனது கவிதை நோட்டில் எழுதித் தந்த முருகன் பற்றிய வரிகளே மீண்டும் நினைவு வந்தன. அந்த நினைவு தந்த அச்சமே புதிதாக இருந்தது. அவள் மனத்தில் குடி கொண்ட முருகனான தன்னை வரவேற்க எந்த உடையில் வருவாள்? என்ன கலர் புடைவையோ? கண்கள் எப்படி இன்று விரியுமோ? ஏக்கங்கள் வளர்த்த முள்காடு அது.

எப்படியும் இந்த வாரம் சிவானியைச் சந்திக்கும் வாய்ப்பை நிச்சயமாக எதிர்பார்த்திருந்தான். அதனால் கேசவ் தனது கவிதை நோட்டைத் தரத் தயாராக வைத்திருந்தான்.

‘முருகா!’ என்று முதல் முறை எழுதித் தந்தது போல வேறு ஏதாவது எழுதித் தருவாளா என்கிற ரகசிய எதிர்பார்ப்பு அது.

ஏதேதோ எண்ணம் விளைந்தபடி இருக்க சிவானியின் கலை உணர்வைக் காட்டும் கிருஷ்ணர் பொம்மை நீல நிற வண்ணத்தில் சிவப்பு அதரத்துடன் நின்றதையே ரசித்தான். சட்டென்று நினைவு வந்தவனாக, “டேய்! ஒரு விஷயம் கேட்கணும்டா இராஜ கோபால்!” என்றதும் -

“சொல்லு நான் கூட ஒண்ணு கேட்கணும் உன்னிடம்” என்றான் இராஜகோபால்.

“முதல்ல நீ கேளு இராஜகோபால்!”

“நீ கேளு...”

“இல்லை நீயே கேளு...” என்றான் கேசவன்.

"நீ இங்கே எங்க வீட்டுக்கு வர்றதுக்கு, கணக்கு கத்துக்க றேன்னு உங்கப்பாகிட்ட பொய் சொன்னியாமே" என்றதும் -

"அதெல்லாம் கட்டுக்கதை. யாரோ தவறாச் சொன்னதைக் கேட்டுக்காதே" என்றான் கேசவன் - மனத்தின் திட்டத்தை அப்பட்டமாக மூடிக் கொண்டு. பல சமயங்களில் அப்பட்டமாக பொய்தான் பேசுகிறது வாய்.

உள்ளேயிருந்து காபி மணத்திற்கான காற்று புதுவிதமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. காபியைக் கண்ணால் காண்பது இரண்டாம் சுகம் எனில், முதல் ரேங்க் வாங்கும் சுகம்... அதன் பில்டர் கொதி மணம்.

"கேசவன்! நீ ஏதோ கேட்கணும்னியே... கேட்டுடு... எங்க அக்கா முன்னாடி எதுவும் வேண்டாம்."

"உன்னை பிரௌசிங் சென்டர்ல நட்ராஜ் பார்த்தேன்னு சொன்னான்..."

"எவன் நட்ராஜ்?"

"தெற்குத் தெரு முதலியார் பையன்."

"அந்தத் திக்குவாய்க்காரனா?"

"மட்டமா பேசாதே! நேத்து காலை 11.45 இருக்கும். வேலை இருக்குன்னு சொல்லி மூணாவது பிரியட்லயே கிளம்பினியே... அப்பதான் நட்ராஜ் சொன்னான்."

"என்னை மாதிரியே எவனையாவது பார்த்திருப்பான்."

"இல்லடா, அது நீதான்! ஏன்னா, நானும் அன்னிக்குப் பார்த்தேன்" என்றதும் சட்டை அவிழ்த்து ஆணியில் மாட்டப் போன இராஜகோபால் அப்படியே ஓடி வந்து கேசவனின் வாயைப் பொத்தினான்.

"அப்புறம் பேசிக்கலாம் தனியா" என்றபோது சிவானி வெளிப்பட்டு, "ஏன் அவன் வாயைப் பொத்தினே?" என்றாள் ஸ்டூலில் காபி டம்ளர்களை வைத்தபடி.

சமையலறையில் மிக அவசரமான வேலை பாக்கி இருப்பது போல கேள்வி கேட்டுவிட்டு, சிவானி உள்ளே நிலைப்படி ஓரம் சென்றவுடன் சட்டென கேசவனை நோக்கித் திரும்பி ஓரப் பார்வை செலவு செய்துவிட்டு மறைந்து போனாள்.

உடனே இராஜகோபால் பிடித்துக் கொண்டான்.

"சப்தமாப் பேசாதேன்னு சொன்னா கேட்கறியா? எங்கக்கா காதில விழுந்தா அவ்ளோதான். நீ பார்த்தது உண்மைதான்" என்றான் அடிக்குரலில்.

"அப்போ செட்டியார்கிட்ட பணம் கேட்கப் போறது?"

"அதெல்லாம் சும்மா..."

"அப்படின்னா எதுக்கு வாராவாரம் போறே?"

"எங்கம்மா அரிக்கிறாங்களே..."

"அதைக் கேட்கலைடா. அந்த நேரத்துல டைம் பாஸுக்கு என்ன செய்வே?"

"அது ரகசியம்."

"ஏ... சொல்டா..."

"சொல்றேன்ல சீக்ரெட்னு..."

"நான் உங்கக்காகிட்டே கேட்டுக்கறேன். எனக்கென்ன?"

"ஏய்... வேணாம்... அப்படில்லாம் எதுவும் செய்துடாதே... நான் சும்மா டைம் பாஸுக்காக இன்டர்நெட் பார்ப்பேன்."

ஒப்புக் கொண்டான் இராஜகோபால். ஆனால் விரிவாக அல்ல. உள்ளே ஏதோ விஷயம் மூடியிருக்கிறது என்று கேசவனுக்குப் புரிந்தது.

"ஏதும் சொல்லிடாதே" என்று கிசுகிசுத்தான் இராஜகோபால். இதற்குள் சமையல்கட்டிலிருந்து ரோஸ் நிறப் புடைவையில் சிவானியின் அழகு புலப்பட்டது.

மாதுளம்பூவின் கீழ்பாக நிறம் மென்மையான சிவப்பிலும் மேற்புற இதழ்களில் ஆழமான ரத்தச் சிவப்பும் இருப்பது போல பொருத்தமான ஜாக்கெட்.

வாழ்க்கை எப்போதுமே அழுத்தமுடையது. அழுத்தங்கள் இல்லாமல் செயல்கள் நீர் மேல் மிதக்கும் பூவினைப் போல் மிதந்து செல்வதில்லை.

ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் பின்தளத்தில் ஒருவிதமான அழுத்தம் தேவைப்படுகிறது.

நீர்ப்பரப்பில் மிதந்து செல்லும் பூ பார்ப்பதற்கு இலகுவாக மிதந்து செல்வது போல தோன்றுகிறது. அப்பூவின் இதழோ நீர்ப் பரப்பின் விசையினால் உராய்வு பெறுவது கண்ணிற்குத் தெரியுமா என்ன?

வாழ்வின் நிகழ்ச்சிகளில் விடுதலைப் போராட்டத்திற்காக நாடு அடைந்த அழுத்தம் எவ்வளவோ அதே அளவு சாதாரண மாற்றத்திற்கும் தேவைப்படுகிறது என்பது ஒரு பேருண்மை.

வெளித்தோற்றத்தில் வேண்டுமானால் சம்பவங்கள் அடுத் தடுத்து நகர்ந்து கொண்டே செல்வதுபோல காட்சியளிக்கலாம்.

சிவானியின் வீட்டில் இப்போது நிகழும் மாற்றங்களுக்குப் பின்தளத்தில் பணத்தேவை எனும் அழுத்தம் உந்தித் தள்ளுவதை கேசவன் புரிந்து கொண்டான்.

''கசக்கறது'' என்றான் திடீரென்று.

''எது?''

''காபியைச் சொன்னேன்'' என்று சமாளித்தான் கேசவன்.

''சர்க்கரை கொண்டு வரட்டுமா?'' என்ற சிவானியின் அம்மாவை நிமிர்ந்து பார்க்க முடியாமல் வழக்கம்போல இரு கண்களும் தாழ்ந்தன.

''எல்லாச் சர்க்கரையும் அம்மா உடம்பிலேயே இருக்கு'' என்றாள் சிவானி.

உடல்நலம் பாதித்த அம்மாவின் அருகில் நிற்கும் அவள் முகத்தில் கவலை பரிபூரணமாக ஒட்டிக் கொண்டிருந்தது.

முதிர் கன்னிப் பருவம் படகுத் துடுப்பில் தெளிக்கும் நீராக ஒருபுறம் தெறித்துக் கொண்டிருக்க, உள்ளமோ... குடும்பப் பொறுப்பு எனும் சங்கிலியைத் தாலியாக்கிக் கொண்டிருந்தது.

அவளைப் பொருத்தவரை அந்த முகத்தில் குடும்ப பாரம் எனும் மைய நோக்கு விசையே அவளைச் செலுத்தியது.

கேசவன்தான் விட்டில் பூச்சி போல ஆசை இறக்கையுடன், அவள் மீது மோதி மோதி விழுந்தான். வெளிச்சத்தில் விழலாம் - அது அறிவு; இருட்டில் விழலாம் - அது அஞ்ஞானம். கேசவனோ நெருப்பில் அல்லவா விழுகிறான்!

அந்த அறையின் சிறிய இடத்தில் ஜன்னலோரம் கேசவன் உட்கார்ந்திருந்தான்.

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அவன் தலை மட்டும் தெரியும். வலக் கைப் புறமாக இராஜகோபாலும், நின்று சிரிக்கும் மூன்றடி உயர கிருஷ்ணர் பொம்மைக்கு அருகில் சிவானியும் அவளை ஒட்டி மெலிந்த அவள் தாயும் நிற்க...

''ரிட்டயர்டாகி ஐந்து வருஷங்கள் முடியப் போவுது. இப்போ கூட காலைல எழுந்து சைக்கிள்ல ஆபீஸுக்குக் கிளம்பி தபால் பார்க்கிற மாதிரியே இருக்கு'' என்று தொடங்கினார் இராஜகோபாலனின் அப்பா.

மக்களில் மிகப் பலருக்கு நல்ல செய்தி தபால். அதைத் தரும் போது மகிழ்ச்சியோ, துன்பமோ அடையாமல் இயங்குகின்ற தபால் துறைப் பணியில் செயல்பட்டது மாதிரியே ரிடையர்டான பிறகு அவரால் நடந்து கொள்ள முடியவில்லை.

வீட்டில் பணக்கஷ்டம் வந்தால் துடித்துப் போகிறார். சிட் பண்டில் பணம் ஏமாந்த பிறகு அதிகம் சிரிப்பு காட்டாத முகமாக இராஜகோபாலின் அப்பா முகம் ஆகி விட்டது.

''அப்புறம் தம்பி! எப்படி இருக்கீங்க தம்பி?'' என்று ஹியரிங் எய்டைச் சரி செய்தபடியே கேசவன் முகத்தைப் பார்த்தார்.

''நல்லாப் படிக்கறீங்களா?''

''நல்லா'' என்பதில் அழுத்தமாகக் கேட்டார்.

''எப்படியோ படிச்சு நல்ல வேலைக்குப் போயிடணும் தம்பி...'' - தம்பி, தம்பி என்று சேர்த்துக் கொள்ளும்போது அவர் இராஜகோபாலைச் சொல்கிறது போல் இருந்தது.

''நல்லபடியா சிவானியோட அக்காவை கரையேத்திட்டோம். அதே மாதிரி இவளையும் கட்டிக் கொடுத்தா முடிஞ்சுது கதை'' என்றாள் அந்த மெலிந்த தாய்.

''அப்படில்லாம் பண்ணிடாதே அம்மா! அப்புறம் கிருத்திகாவை நம்ம வீட்லேயே அக்கா விட்டுட்ட மாதிரி, நாளைக்கு என் குழந்தையும் இங்கேயே திரியும். பரவாயில்லையா?!''

யானையின் சதையில் நறுக்கென்று அங்குசம் பாய்ந்தது போல தைத்தது அந்த வார்த்தை. சரியாக வாழாத அக்காவின் குழந்தை

கிருத்திகா அந்த வீட்டில் ஒரு பாரம்தான். அதையும் சுட்டிக் காட்டி விட்டாள். சிரிப்பும் சிரிக்கிறாள் சிவானி. கேசவன் பிரமித்துப் போனான்.

இத்தனை அழகுடன் இருக்கும் ஒருத்தியைச் சுற்றிலும் இவ்வளவு முடிச்சுகளா என்று ஒருகணம் கேசவன் சிந்தித்தான்.

தலை நிமிர முற்பட்டது. லொடுக்கென பிறகு தாழ்ந்து கொண்டு விட்டது. பல்லிடுக்கு நடுவே சிக்கிய மாம்பழ நார் போல அவளது அழகு கேசவன் நெஞ்சில் இடையூறாக இருக்கிறது. தலை தாழ்த்திப் பேசும் பழக்கத்தை அது வளர்த்துதான் விட்டிருக்கிறது.

எதை அழகு என்று உள்மனம் 'பார்க்காதபோது பார்த்து' முடிவெடுக்கிறதோ - அந்த முகத்தை - நேருக்கு நேர் பார்த்தாலோ முற்றின நெற்கதிர் போல ஒடிந்து சாய்கிறதே... என்ன பண்ணித் தொலைக்க?

காது கேளாத அப்பாவுக்குத் தெரியாமல் எழுபத்தைந்தாயிரம் பணத்தை இராஜகோபாலும் அவன் அம்மாவும் செட்டியாரிடம் கொடுத்துவிட்டு, வட்டிக் காசும் சரிவரப் பெற முடியாமல் தவிக்கிறார்கள். அவர்கள் நிலைக்குத் தன்னால் ஏதேனும் செய்ய முடியுமா? எனத் தவித்தது கேசவன் உள்ளம்.

''எம் பையன் வாராவாரம் போய் செட்டியாரை அரிச்செடுத்து பணத்தை மீட்டுடுவான்'' - அந்தத் தாய் சொல்லிக் கொண்டிருந்த போது கேசவன் பார்வை இராஜகோபால் மீது சென்றது.

''ஆமாம்மா... வாரா வாரம் போய் இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் கடையிலேயே உட்கார்ந்து பணத்தை எடுறான்னு கழுத்துல துண்டு போடாத குறையா கேட்டுட்டுத்தாம்மா இருக்கேன்'' என்றான் இராஜகோபால் பச்சையாக. அவ்வப்போது கேசவன் முகத்தைப் பார்த்து அமர்த்தினான்.

பொய்யால் நெய்த வார்த்தைப் போர்வை பல சமயங்களில் நம்புவதற்கு இடமாகிறது.

''இவன் இருக்கும்போது எனக்கென்னப்பா கவலை?'' என்றாள் இராஜகோபால் அம்மா.

''நீங்கள்லாம் எதைப் பத்திப் பேசிக்கறேள்?'' என்றார் காது மெஷின் சரிவர வேலை செய்யாத இராஜகோபாலின் தந்தை.

''ஆமாம்மா! நான் மீட்டுடுவேன் செட்டியார்கிட்ட'' என்ற வரி மட்டும் காதில் விழுந்தவராக –

''என்னடா ராஜா? செட்டியார் அது, இதுன்னு பேசறே?'' என்று மென்மையாகக் கேட்டார். அவன் ஏதும் பேசாமல் இருக்கவே சிவானி முகத்தை நோக்கினார்.

''அப்பா! கிருத்திகா அழறாப்ல இருக்கு... நான் உள்ளே போயிட்டு வரேன்'' என மறைய முற்பட்டாள்.

''இரு... இரு சிவானி'' என்றான் இராஜகோபால். திரும்பிப் பார்த்தாள். ''இன்னொரு நோட்டு தரானாம்'' என்றபடி கேசவனிடம் வாங்கி நீட்டினான்.

காது கேளாத தந்தைக்கு கவிதை நோட்டு பற்றி ஞானமில்லை. சர்க்கரை பாதிப்பில் தவிக்கும் அந்தத் தாய்க்கோ நாட்டமில்லை.

''கவிதை நோட்டா?'' என்றாள் சிவானி சுவாரஸ்யமில்லாமல். அப்படி நடந்து கொண்டால் கேசவனின் தலை நிமிரும் என்று எதிர்பார்த்தாள். கேசவன் கண்கள் தரை பார்ப்பது நின்ற பாடில்லை.

''நிமிரு கேசவன்'' என்றாள் அதிக சப்தமில்லாமல். அதிகமாக உரத்துப் பேசாமல் 'கிசுகிசு' என்றும் இல்லாமல் உரிமை கலந்த சிநேகிதம் தொனித்தது அதில்.

''கேசவன் உனக்குள்ளே ஏதோ இருக்கு'' எனப் புகழ்ந்ததும் அவ்வீட்டினர் அவனை ஒருவிதமாகப் பார்த்தார்கள். இப்போது கேசவன் அரைத் தலை நிமிர்த்தியிருந்தான்.

கண் பார்த்தால் தானே! தனக்குள்ளே ஆழ்ந்து போகும் பார்வை எதிரில் நின்றுபேசுவோரை எப்படி அடையும்?

தரை மீதே பார்க்கும் பார்வைக்காரனிடம் யார்தான் உரையாட விருப்பம் கொள்வார்கள்?

கடவுள் சிற்பத்தில் இருக்கலாம். அந்த முகம் பார்வை... அது அழகு... மனிதருக்கு அது உதவாது.

''நிமிரு கேசவன்'' என்றாள் இடுப்பில் உள்ள குழந்தையின் அழுகை நடுவே.

''அக்கா! இவனை காலேஜ்ல பொட்டைன்னு சொன்னாங்க.''

''ஐயோ!''

''அதுக்கே அவன் தலை நிமிர்ல தெரியுமா! நீதான் துடிக்கிறே'' என்றான் இராஜகோபால்.

யாரையோ சொல்கிறார்கள் என்பது போல இருந்தானே தவிர, கேசவனிடம் எந்த ரியாக்ஷனுமில்லை.

அங்கிருந்தவர்களிடம் பேச்சு திசை திரும்பி செட்டியாரிடமே வந்தது.

அந்த வாரத்திற்குரிய அரிசி வாங்கும் சிக்கலுக்குள் திரும்பியது.

சற்றும் எதிர்பாராமல் கேசவன் செமஸ்டர் பீஸுக்காக வைத்திருந்த பணத்தில் மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து இராஜகோபாலின் அம்மாவிடம் தந்தான்.

எதிர்பாராத இந்த உதவி கண்டு அந்தத் தாயின் கைகள் வேண்டாம், வேண்டாம் என்பது போல கேசவன் பக்கமே நீண்டன.

''நீ என்ன பிச்சை போடறியா? அதெல்லாம் வேணாம் போடா...''

இத்தனை நேரம் ஆதரவாகப் பேசிய இராஜகோபால் இப்படி பேசுவான் என்று சிவானியும் எதிர்பார்க்கவில்லை.

குழந்தை கிருத்திகா நேற்று இரவிலிருந்து சளியால் கர்புர் ரென்று இருமலுடன் அழுதாள்.

டாக்டரிடம் கொண்டு காட்ட கேசவன் பணம் உதவுமே?

- தொடரும்...


நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. (20)

நீர் இல்லாமல் உயிர்கள் வாழா; அதுபோல
மழை இல்லாமல் ஒழுக்கம்
நிலையாது.



ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்

# கச்சிமூதூர் கருணை வள்ளல்

20ஆம் நூற்றாண்டில் கண்கண்ட தெய்வமாகக் காட்சியளித்து அருள்பாலித்து வந்த கச்சிமூதூர் பரமாச்சார்ய சுவாமிகள் முக்காலமும் உணர்ந்த தவசிரேஷ்டர். கச்சிமாமுனிவர் அருள்பார்வை நிகழ்ச்சிகளை ஸ்ரீ மடம் பாலுவிடமிருந்து தொகுத்தவர் சத்யகாமன்.



## மணத்தக்காளி மருந்து

*ரத்த சோகைக்காரர். உடலில் எலும்புகளை எண்ணி விடலாம்.*

*"ரொம்பவும் கஷ்டமா இருக்கு..."*

*"என்ன மருந்து கொடுத்திருக்கா?"*

*"மருந்து இல்லே. தங்க பஸ்பம் சாப்பிடணுமாம்."*

''சாப்பிடேன்...''

''பெரியவாளே இப்படி சொன்னா, எப்படி? தங்க பஸ்பம் வாங்கணும்னா, காசு நெறைய வேணும்.''

''மணத்தக்காளி கேள்விப்பட்டிக்கியோ?''

''முந்தி எப்பவோ சாப்பிட்டிருக்கேன்.''

''மணத்தக்காளி கீரையில், ஸ்வர்ணச் சத்து இருக்கு. நிறைய மணத்தக்காளி கீரை சாப்பிடு...''

அந்தச் சமயத்தில் மயிலாப்பூர் பிரமுகர் ஒருவர் தரிசனத்துக்கு வந்தார். பெரியவாளின் அறிவுரையைக் கேட்டுக் கொண்டிருந்த அவர், ''வெங்கட்டரமணா வைத்திய சாலையில் தங்க பஸ்பம் ரெடியா இருக்கு. நானே வாங்கித் தர்றேன்'' என்றார், பெரியவா உள்ளத்தை உணர்ந்து கொண்டு.

சோகைக்காரருக்கு, அப்போதே ஒரு பாட்டில் ரத்தம் உடலில் செலுத்தப்பட்டாற்போலிருந்தது.

''பெரியவாளுக்குத் தங்கமான மனசு!'' என்றவாறே நமஸ்கரித்தார்.

## நல்ல காலம் வராமல் போயிடாது!

ஒரு முதலியார் தரிசனத்துக்கு வந்தார். மிகவும் மனமுடைந்து போயிருந்தார். இனி வாழ்வதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தார்.

''வீட்டில் சம்சாரம், குழந்தைகள் யாரும் என்னிடம் மரியாதையாக நடந்து கொள்வதில்லை. தூக்குப் போட்டுக் கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்.''

பெரியவா கோபமாகப் பார்த்தார்கள்.

''ஓஹோ! நீங்க தூக்குப் போட்டுக் கொள்வதற்கு என்னிடம் அனுக்ரஹம் வாங்க வந்திருக்கேள்! அப்படி முடிவு எடுத்திருந்தா... என்னிடம் எதுக்காக வரணும்? வேற யாராவது சிநேகிதாள்கிட்ட போய்க் கேளுங்கோ...''

வந்தவர், அழுதார்... ''மன்னிக்கணும்...''

''உங்க சம்சாரம் குழந்தைகள் உங்க பேரிலே கோபமா இருந்தா, உங்க பேரிலே ஏதோ தவறு இருக்குன்னு அர்த்தம். மத்யபானம், பரஸ்திரீ, சூதாட்டம், குதிரை... இப்படி. அந்தத் தவறுகள் செய்யாமலிருக்க முயற்சி பண்ணுங்கோ.

''நீங்க ஆத்மஹத்தி பண்ணிண்டா பிரச்னை தீர்ந்துடுமா? போலீஸ்காரா வந்து ஆயிரம் கேள்வி கேட்பா. சடலத்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துண்டு போய் கண்ட துண்டம் பண்ணுவா! உங்க வீட்டுக்கு யாரும் வர மாட்டா. தூக்கு போட்டுண்ட வீடுன்னு...

''சம்சாரம், குழந்தைகளையெல்லாம் ஊர் ஜனங்க வாய்க்கு வந்தபடி திட்டுவா.

''நீங்களும் தூக்குப் போட்டுண்டு சந்தோஷமா இருக்க முடியாது. ஆவியா அலையணும்...''

''வாழ்க்கையிலே கஷ்டங்கள் வரத்தான் செய்யும். அப்போதான் தைரியமா இருக்கணும். தூக்குப் போட்டுக்கிறவன், கோழை; முட்டாள்; அசிங்கம்...

''ஸ்வாமியைப் பிரார்த்திச்சிண்டு தைரியமா இருங்கோ. நல்ல காலம் வராமல் போயிடாது...''

முதலியாருக்கு மனத் தெளிவு உண்டாயிற்று. அறிவுரையைக் கேட்டுத் திருப்தி அடைந்தவராகக் காணப்பட்டார்.

''புத்திவந்தது; தப்பு செய்ய மாட்டேன்'' என்று கூறி கன்னத்தில் போட்டுக் கொண்டு வந்தனம் செய்தார்.

## அமெரிக்கா போகணுமா?

தோற்றத்திலிருந்தே, 'இவர் அமெரிக்காவிலிருந்து வந்தவர்' என்று புரிந்து கொள்ள முடிந்தது.

நமஸ்காரம் செய்தார்.

''யாரு? சப்தரிஷியா?''

''ஆமாம்...''

''லால்குடியா?''

''ஆமாம்...''

''அத்தை பெயர் ஸ்ரீமதியா? அவள் சௌக்கியமா இருக்காளா?''

''இருக்கா...''

''மாந்துரையானை தரிசனம் பண்ணிட்டுத்தான் வந்திருக்கியோ?''

''ஆமாம்...''

''ஊர்ல உங்க க்ருஹம் இருக்கா?''

''இருக்கு...''

''நீ அமெரிக்கா போய் அஞ்சு வருஷமாச்சா?''

''ஆமாம்...''

சற்று மௌன இடைவெளி.

''உங்க ஊரிலே ஸப்தரிஷிகள் பூஜை பண்ணின ஸ்வாமி இருக்கார். காவேரி தீரம். நல்ல முரட்டு மழநாட்டுப் பிருஹசரணப் பிராமணர்கள், நீங்க...?''

''பிரஹசரணம்னா... நல்ல ஆசாரம் உள்ளவர்கள்னு அபிப்ராயம்.''

''ஊரை விட்டுட்டு எங்கோ... அமெரிக்கா போய் சம்பாதிக்கணுமா? உன் தாத்தா, கொள்ளுத் தாத்தாவெல்லாம் நல்ல வைதிக சிரத்தை உள்ளவா... அமெரிக்கா போய் சம்பாதிக்க வேண்டுமா?''

''இருக்கும் சொத்து சுகங்களை வைத்துக் கெண்டு உன் கிராமத்திலேயே இருக்கலாம்; திருச்சியிலே ஸ்வாமி தரிசனம் பண்ணிண்டு இருக்கலாம்...''

லால்குடி (அமெரிக்க)க்காரருக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. எந்த விஷயத்தைப் பற்றிப் பெரியவாளிடம் பேசி உத்தரவு பெறலாம் என்று எண்ணிக் கொண்டு வந்தாரோ, அதே விஷயத்தை பெரியவாளே விஸ்தாரமாகப் பேசி ஆக்ஞையிட்டு விட்டார்.

''பெரியவா உத்தரவுப்படியே செய்யறேன்...''

## ஜட்ஜ்மெண்ட் வந்துடுத்து

தஞ்சாவூர் மாவட்டம் பதினெட்டு கிராம வாத்திமர் குடும்பம். செல்வச் செழிப்பு, ஈசுவர ஆராதனை, பெரியவாளிடம் பக்தி.

ஜாதகம் பார்த்து, பெண் பார்த்து, விமர்சையாக விவாஹம் நடந்தேறியது. மகிழ்ச்சிகரமான இல்வாழ்க்கை.

எந்த கிரகம் இடம் பெயர்ந்ததோ?

சாதாரணமாகத் தோன்றிய கசப்பு, விவாகரத்து வரை வந்து விட்டது.

விசாரணைகள், ஆலோசனைகள், மறு ஆய்வுகள்...

ஊஹூம்.

நாளைக்குத் தீர்ப்பு.

பெண்ணும் பெற்றோரும், பெரியவா தரிசனத்துக்கு வந்தார்கள். ''காமாக்ஷி தரிசனம் பண்ணிட்டு வாங்கோ.''

அப்புறம் பையனும் பெற்றோரும் வந்தார்கள். பெரியவருக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டது. ''நாளைக்கு ஜட்ஜ்மெண்ட்...''

''காமாக்ஷி தரிசனம் பண்ணிட்டு வாங்கோ...''

கோயிலில் ஏராளமான கூட்டம். அத்துடன், பக்தி பூர்வமாகத் தரிசனம் செய்யும் நிலையில் யாருமில்லை. 'பெரியவா சொல்லிட்டா; அதனால் வந்தேன்.'

ஸ்தானீகர் அர்ச்சனை செய்துவிட்டு, பிரசாதத் தட்டைக் கொண்டு வந்தார்: ''சேர்ந்து வாங்கிக்கோங்கோ.''

சேர்ந்து? ''நான்... தனியாத்தான் வந்தேன்.''

சட்டென்று தலை நிமிர்ந்தபோது, அவர்... அவள்...

''சேர்ந்து வாங்கிக்கோங்கோ...''

காமாக்ஷியின் ஆணையா?

கோயிலிலிருந்து வெளியே வந்தபோது, இரண்டு குடும்பத்துப் பெரியவர்களும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டார்கள், பேசிக் கொண்டார்கள்.

விவாகரத்து, ரத்தாகி விட்டது.

காமாக்ஷியல்லவா, ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறாள்!

பெரியவா திருவடிகளில் விழுந்து எழுந்தார்கள்.

''ஜட்ஜ்மெண்ட் வந்துடுத்து போலிருக்கே?''

எவ்வளவு புஷ்டியான சொற்கள்!

''எழுதினது, பெரியவா தானே!'' என்று அந்த இளம் தம்பதி நினைத்துக் கொண்டிருக்க மாட்டார்களா?

## நிறுத்தக்கூடாது!

''ரொம்ப ஏழை. பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணணும்... பெரியவா, திருமாங்கல்யம் அனுக்ரஹம் பண்ணணும்...''

அரை மணி கழித்து இன்னொருவர் வந்தார், ஒரு கல்யாணப் பத்திரிகையுடன். ''மாமா பெண்ணுக்குக் கல்யாணம். ரொம்ப ஏழை...''

அவருக்கும் ஒரு திருமாங்கல்யம்.

அடுத்ததாக, இன்னொருவர், ''தம்பி பெண்ணுக்குக் கல்யாணம்...''

கேட்டுக் கொண்டிருந்த சிஷ்யருக்கு எரிச்சலாக வந்தது. எல்லாரிடமும் ஒரே பத்திரிகை. ஏன், இந்தத் தில்லுமுல்லு?

''திருமாங்கல்யம் வேணும். ரொம்ப ஏழை. அவ்வளவு தானே?'' என்றார், பட்டென்று.

வந்தவர் குழைந்தார். பெரியவா, மானேஜரிடம் சொல்லி அவருக்கும் ஒரு திருமாங்கல்யம் வாங்கிக் கொடுக்கச் சொன்னார்கள்.

சிஷ்யரின் ஆத்திரம் அடங்கவில்லை. ''பெரியவாளின் தாராளமான, கருணை உள்ளத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களே, சில பேர் என்று ஆத்திரம்.

''கல்யாணத்துக்கு யாசகம் கேட்டுப் பல பேர் வருகிறார்கள். தீர விசாரித்து விட்டுத்தான் உபகாரம் செய்யணும். இல்லேன்னா, ஒருத்தரே இரண்டு, மூணு திருமாங்கல்யமோ, வேஷ்டி, புடைவையோ, பணமோ வாங்கிண்டு போயிடறா. யார்

கேட்டாலும் திருமாங்கல்யம் கொடுப்பதை நிறுத்தி விட்டால் கூடத் தேவலை...'' என்று முணுமுணுத்தார்.

பெரியவா, கொஞ்ச நேரம் கழித்து அழுத்தமாகச் சொன்னார்கள், ''எந்தக் காரணத்தைக் கொண்டும், கல்யாணங்களுக்குத் திருமாங்கல்யமோ, பணமோ கொடுப்பதை நிறுத்தவே கூடாது. யாரோ, இரண்டு பேர் ஏமாற்றலாம். பாதகமில்லை. பரம ஏழையாக, டிசர்விங்காக உள்ளவாளுக்குக் கிடைக்காமல் போயிடக் கூடாது. ஒருவர் செய்யும் தப்புக்காக, நடந்து கொண்டிருக்கும் தர்மங்களை நிறுத்தி விடக் கூடாது.''

பெரியவா சொன்ன 'தர்மம்' இன்றும் நடைபெறுகிறது.

## தயிர்க்காரியின் புண்ணியம்

சிவாஸ்தானத்தில் ஒரு தயிர்க்காரி இருந்தாள். ஸ்ரீ மடத்தைத் தாண்டிப் போகும் போதெல்லாம் பெரியவாளுக்கு நமஸ்காரம் செய்து விட்டுப் போவாள். கூட்டமாக இருந்தால், யார் மேலும் பட்டுவிடாமல், தொலைவிலிருந்தபடியே விழுந்து கும்பிடுவாள். காலையில் நீராடுகிற வழக்கமில்லை. அநேகமாக, பிற்பகலில்தான் நீராடுவாள். அதனால், மற்றவர்களுக்குத் தீட்டுப் பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பாள்.

ஒருநாள் கூட்டமில்லாத சமயத்தில் பெரியவா எதிரில் வந்து தயிர்க்கூடையை வைத்தாள். சிறு சிறு சட்டிகளாக நாலைந்து சட்டித் தயிரை வெளியே வரிசையாக வைத்தாள்.

''எசமானே! பசும்பால் காய்ச்சி, உறை குத்தி கொண்டு வந்திருக்கேன். சுத்தமா செய்திருக்கேன். சாமி எல்லாத்தையும் சாப்பிடணும்'' என்று உரக்கச் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

பிற்பாடு சிஷ்யரைக் கூப்பிட்டு, ''அந்த சட்டித் தயிர் கொண்டு வா'' என்றார்கள் பெரியவா. ஒரு சட்டியிலிருந்து தன் கையாலேயே சிறிதளவு எடுத்துச் சாப்பிட்டார்கள். மீதி சட்டிகளிலிருந்த தயிரை, தயிர்ப்பச்சடி, மோர்க்குழம்பு, மோர்க்கூட்டு, அவியல் செய்யச் சொல்லி, அன்று பிக்ஷை செய்தார்கள்.

ஒரு தயிர்க்காரியின் பக்திக்குக் கட்டுப்பட்டு, பெரியவா இப்படியெல்லாம் செய்தார்கள். பெரிய பெரிய தனவந்தர்களுக்குக் கூட கிடைக்காத பாக்கியம் இது.

தயிர் என்றால், பெரியவா கண்ணனாகவே மாறிவிடுவார்கள்.

'சாமி எல்லாத்தையும் சாப்பிடணும்' என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் போனாளே தயிர்க்காரி, அவள் வார்த்தைகள் சத்தியமாகி விட்டன என்பது வேண்டுமானால், ஒருக்கால் அவளுக்குத் தெரியாமல் போயிருக்கலாம்.

ஆனால், 'சாமி' சத்தியமானவராயிற்றே!

## சென்னாரெட்டியிடம் சொல்

ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்தது. தெலுங்கானா பிரதேசம் தனியாக அமைக்கப்பட வேண்டும் என்பதில் பலர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். அதனால் அந்தப் பகுதியில் பெரும் கொந்தளிப்பு, ரயில், பஸ் ஓடவில்லை; கடையடைப்பு இத்தியாதி.

சென்னாரெட்டிதான் இந்தக் கூட்டத்தின் முக்கியஸ்தர். செய்தித்தாளிலிருந்து இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டு, பெரியவாளிடம் சொன்னார்கள், சிஷ்யர்கள்.

பெரியவா, சென்னா ரெட்டியிடம் ஒரு சிஷ்யரை அனுப்பினார்கள். 'தற்சமயம் சண்டை வேண்டாம், பிரிவினைப் போராட்டம் இப்போது வேண்டாம்' என்று சொல்லச் சொன்னார்கள்.

சிஷ்யர் கூறியதை, சென்னாரெட்டி பொறுமையாகக் கேட்டார். ''பெரியவா பகவான் ஆயிற்றே? ஸ்ரீ கிருஷ்ணன், அர்ஜுனனைப் பார்த்து அண்ணனாவது, தம்பியாவது? ஆசார்யனென்ன? பாட்டன் என்ன? போடு, சண்டை! என்றுதான் சொன்னார். இப்போது பெரியவா ஏன் மாற்றிச் சொல்கிறார்கள்? சரி, பெரியவா சொன்னா, அது சரியாகத்தான் இருக்கும். தர்மமாகத்தான் இருக்கும்... தாமதமாகத்தான் புரியும்.''

பின்னர், போராட்டத்தை சாதுர்யமாக விலக்கிக் கொண்டார்.

<u>பாரதி சிந்தனை:</u>

# பேதை உரையும் மேதையர் பேச்சும்

## கவிக்கோ ஞானச்செல்வன்

தலைநகர் சென்னையில் பல இலக்கிய விழாக்களில், தமிழ் அரங்குகளில் சில திங்கள் காலமாகப் பேசப்பட்டு வருவன இரண்டு செய்திகள்.

முதலாவது, நடுவண் அரசு தமிழ்மொழியைச் செம்மொழி என்று ஏற்புரைத்து அறிவித்தமை பற்றியது. இது பற்றிப் பேசும் பலரும் 'தமிழ்மொழி செம்மொழி ஆகிவிட்டது' என்றும், தமிழ்மொழி செம்மொழி ஆகியுள்ள தருணத்தில்... என்றும் பேசி வருகிறார்கள்.

தமிழ் இன்றைக்குச் செம்மொழி ஆகவில்லை. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் செம்மொழியாக இயங்கி வருகிறது. இந்தச் செம்மொழி என்பதைச் சிலர் செவ்வியல் மொழி என்றும் உரைத்தனர். சரியாகச் சொன்னால் பரிதிமாற் கலைஞர் குறிப்பிட்ட **உயர்தனிச் செம்மொழி** என்பதே நாம் கருதும் பொருளை முழுமையாகத் தரவல்லதாகும். 'கிளாசிக்கல் லாங்வேஜ்' என்று ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டதையே உயர்தனிச் செம்மொழி என்று பரிதிமாற் கலைஞர் சுட்டியுரைத்தார்.

தமிழ்மொழி உயர்மொழி, தமிழ்மொழி தனிமொழி, தமிழ்மொழி செம்மொழி என்று மூன்று கூறுகளாக இத்தொடரின் நுணுக்கத்தை நாம் பகுத்தறிந்து கொள்ள வேண்டும். இந்த மூன்றிலேயே, இப்போது செம்மொழி என்பதற்குச் சொல்லப்படும் பதினோரு தகுதிகளும் அடக்கம். அந்தப் பதினோரு தகுதிகளைப் பற்றி ஏற்றும், மறுத்தும், குறைத்தும் பேசுவோரும் எழுதுவோரும் உளர். ஈண்டு நாம் அது பற்றி ஆராயப் போவதில்லை.

உயர்மொழி எனப்படுவது மிகப் பழைமை வாய்ந்த இலக்கிய வளமும், வரலாற்றுச் சிறப்பும் உடையதாக இருக்க வேண்டும். தமிழில் காலத்தால் அழிந்தன போக, எஞ்சியவற்றுள் ஈராயிரம் ஆண்டின் முற்பட்ட எட்டுத் தொகை, பத்துப் பாட்டு நூல்களும், அவற்றைச் சார்ந்து பின்னர் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஆகிய 'சங்க இலக்கியங்கள்' மாபெரும் இலக்கியப் புதையலாக, ஆழ்ந்தகன்ற கடல் போல வரலாற்றுச் சிறப்புடன் இன்றும் குன்றாச் சிறப்புடன் பொலிகின்றன.

பழைமையும் சிறப்புமுடைய திருக்குறள் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை இரட்டைக் காப்பியங்களாகத் தமிழின் சீர்மையைப் பறை சாற்றுகின்றன. இடைக்காலத்தில் சிந்தாமணியும், தேவார, திவ்யப் பிரபந்தங்களும், பிற்காலத்தே இராம காதையும், பெரிய புராணமும், பள்ளு, குறவஞ்சி, பரணி அனைய சிற்றிலக்கியங்களும் தமிழ் இலக்கியக் களஞ்சியங்களாகும்.

தனிமொழி எனப்படுவது, பிறமொழியின் துணையின்றித் தனித்தியங்கும் வல்லமை பெற்றதாகும். எந்தக் கருத்தையும் எந்தப் பொருள் பற்றியும் எத்துறை பற்றியும் சொல்லக் கூடிய ஆற்றல், அஃதாவது சொல்வளம், சொற் பெருக்கம் உடையதாகத் தனிமொழி இருத்தல் வேண்டும்.

தமிழிற் சொற் குறைபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. அத்துணை இலக்கியச் சொற்கள், வாழ்வியற் சொற்கள் நிரம்பியுள்ளன. புதிய புதிய சொல்லாக்கங்களுக்கு வேண்டிய அளவு வேர்ச் சொற்கள், அடிச் சொற்கள் தமிழில் நிரம்ப இருக்கின்றன. மிகப் பழைய ஒரு மொழியில் புதிய கண்டு பிடிப்புகளுக்கான சொற்கள் முன்னரே அமைந்திருக்க முடியாது. ஆனால் அவற்றை உருவாக்கிக் கொள்ளத் தமிழால் முடியும். அருவி என்றும் இருப்பது. கணினி இன்று வந்தது. இரண்டிற்கும் தமிழ்ச் சொற்கள் உள்ளன. முன்னது பழஞ்சொல், பின்னது ஆக்கச்சொல். (அருவியை, நீர்வீழ்ச்சி எனல் வேண்டா; இது மொழி பெயர்ப்பு).

'மோட்டார்' என்பதை 'உந்து' என ஆக்கச் சொல்லால் குறிப்பிட்ட நாம் பேருந்து (பஸ்), சிற்றுந்து (மினி பஸ்),

சரக்குந்து (லாரி), மகிழ்வுந்து (கார்), கரட்டுந்து (ஜீப்) என்றெல்லாம் பலவாகக் குறிப்பிட வாய்ப்பமைந்த மொழி, நம் தமிழ்மொழி.

தமிழுக்கு ஒரு தகுதியில்லை - அது தனிமொழி இல்லை; கலப்பு மொழி என்று ஓர் எழுத்தாளர் - தமிழையே பெயராக உடையவர் எழுதியுள்ளார். பல காலங்களில் அந்நியர் பலரின் ஆட்சியால் ஏற்பட்ட பேச்சு வழக்குக் கலப்படச் சொற்களை அவர் குறிப்பிடுகிறார். பிற மொழிச் சொற்களைக் கலந்து பேசுவது நம்முடைய குறையேயன்றித் தமிழின் குறை யன்று. வழக்கத்தில் உள்ள எந்தச் சொல்லுக்கும் தூய தமிழ்ச் சொல் உண்டு.

ஜன்னல் என்பதைக் காலதர் என்றும், மேகத்தை முகில் என்றும், வில்லனைக் **கேடன்** என்றும், பந்த் என்பதை **முற்றடைப்பு** என்றும், 'அன் அப் போஸ்ட்' என்பதை எதிரிலி என்றும், சோபாவை **மெத்திருக்கை** என்றும், ஐஸ்கிரீமைப் **பனிப்பாற்குழைவு** என்றும் சொல்லலாமே. (இப்படியே நிரம்ப எழுதலாம்; எடுத்துக்காட்டாகச் சிலவற்றைச் சுட்டி னோம்).

தமிழின் சொல்வளம் பற்றிச் சொல்லும்போது ஒன்றைக் குறிப்பிட விழைகிறேன். தமிழில் உள்ளது போல் பொருளையும் அப்பொருளின் பருவத்தையும் குறிப்பிடும் தன்மை பிறமொழிகளில் இல்லை. எடுத்துக்காட்டாக துளிர், தளிர், இலை, பழுப்பு, சருகு என்பன ஒரே பொருளின் வேறு பட்ட நிலைகளைக் குறிக்கின்றன. ஆங்கிலத்தில் சொல்வ தென்றால் Young Leaf, Green Leaf, Yellow Leaf, Dry Leaf என்று ஒட்டுச் சொற்களைச் சேர்த்துத்தான் குறிப்பிட முடியும்.


குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. (29)

உயர்ந்த குணமலையாக விளங்குபவர்
நொடியளவு கூடச் சினம்
கொள்ளார்.



ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்

இனி, செம்மொழி எனப்படுவது முறையான இலக்கண வரையறை கொண்டிருப்பதாகும். தமிழில் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல், தமிழ் எழுத்துக்கும், சொல்லுக்கும் மட்டுமன்றிப் பொருளுக்கும் இலக்கணம் வகுத்த நூலாகும். வாழ்வை அகம், புறம் எனப் பகுத்து அதற்கு இலக்கணம் சமைத்த பெருமை தமிழுக்கே உண்டு. எழுத்தும், சொல்லும், பொருளும் அவற்றினூடே பாவும், மரபும் இலக்கணம் பெற்றுள்ளமை தொல்காப்பியச் சிறப்பாகும். பின்னர் தோன்றிய நன்னூல் முதலாய பல நூல்கள் தமிழின் இலக்கண வரம்பு, கட்டுக்கோப்பு, வரையறைக்குச் சான்று பகர்கின்றன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அமைந்த இலக்கண நெறிகளிலே சிதைவின்றி இன்றைக்கும் போற்றப்பட்டு வரும் சிறப்பு தமிழ் மொழிக்கே உள்ளது. பழைமைக்குப் பழைமையாயினும், புதுமைக்கும் இடம் கொடுத்து, ‘பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே’ என்று ஏற்றுக் கொண்டு மாற்றங்களைக் கண்டு வளம் பெற்று வரும் மொழி, தமிழ்மொழி.

ஆகத் தமிழ், உயர்மொழியாகவும், தனி மொழியாகவும், செம்மொழியாகவும் அமைந்துள்ள சிறந்த மொழி என அறிந்தோம். இன்றைக்கும் தமிழ் எழில், வளம், இளமை குன்றாது உயிர்ப்புடன் இயங்குகிறது. சம்ஸ்கிருதம் பேச்சு வழக்கற்ற மொழி. இலத்தீன், பாரசீகம் ஆகியனவும் ஏறத்தாழ முன்னதைப் போன்றனவே. இவை செம்மொழிகளாக ஏற்கப்பட்டுள்ள நிலையில்தான், தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை நூறாண்டுகளுக்கு முன்னரே எழுந்தது.

சம்ஸ்கிருத மொழிக்கு வழங்கப்படுவதுபோல் பெரும் அளவில் மானியங்கள், நிதியளிப்பு எல்லாம் தமிழுக்கும் வேண்டும். அதன் வழி, உலகப் பல்கலைக் கழகங்களில் எல்லாம் தமிழ் இருக்கை - தமிழ்த் துறை ஏற்பட வேண்டும். தமிழ் ஆராய்ச்சி வளர்ந்திட வேண்டும். தமிழில் புது நூல்கள் - அறிவியல் பொருளியல் பிற துறை நூல்கள் எல்லாம் பெருகிட வேண்டும் என்ற விழுமிய நோக்கத்துடன்தான் இக் கோரிக்கை எழுந்தது. இத்துணைக் காலம் போராடி இப்போது

கிட்டியுள்ள 'நிலை' குறித்து கருத்து மாறுபாடுகள் இருக்கின்றன.

தமிழ் - தனிப்பட்டியலில் வந்ததேன்? கல்வித் துறையில் சேர்க்காமல் பண்பாட்டுத் துறையில் வைத்ததேன்? என்றெல்லாம் வினாக்கள் எழுப்பப்படுகின்றன. எந்தப் பட்டியலில் இருந்தாலும், எந்தத் துறையில் இருந்தாலும் நம் எதிர்பார்ப்பு - தமிழ் வளர்ச்சி நிறைவேற வேண்டும் என்பதே நம் வேட்கை. மைய அரசு காலம் கடத்தாமல் 'விளைவுகள்' உண்டாக்க வேண்டும்.

கட்டுரையின் தொடக்கத்தில் இரண்டு செய்திகள் என்றோம். ஒன்று பற்றிய விளக்கமே மிக நீண்டு போயிற்று. ஆயினும் முற்றிலும் எழுதவில்லை (நூல் வடிவில்தான் எழுத முடியும்). மற்றொன்று பற்றி இப்போது பார்ப்போம். இதுதான் நம் மனத்தை மிகவும் உறுத்தி வருகிற - வருத்தி வருகிற செய்தி. கூட்டத்தில் எழுந்து 'சத்தம் போடலாமா?', 'தட்டிக் கேட்கலாமா?', 'சுட்டிக் காட்டுவோமா?' என்றெல்லாம் மனம் கிடந்து துடிக்கும். ஆனாலும் அவை நாகரிகம், பண்பாடு கருதி நம்மை நாமே அடக்கிக் கொண்டு வருகிறோம்.

தமிழ் அறிந்தவர்கள், தமிழ் கற்றவர்கள், தமிழ் அறிஞர்கள்(!), மேதையர்(?) பலரும் இப்படிப் பேசுகிறார்கள். எப்படி?

"மெல்லத் தமிழினிச் சாகும் என்சு பாரதி பாடினார். அந்த நிலை விரைவில் வரப் போகிறது. ஐ.நா. பேரவை ஆய்வு சொல்கிறது... இன்னும் ஐம்பதாண்டுகளில் அழியப் போகும் மொழிகளுள் தமிழும் ஒன்று" என்று பேசுகிறார்கள்.

"மெல்லத் தமிழினிச் சாகும் என்று பாரதி சொன்னானே... அந்த நிலை வந்து கொண்டுள்ளது. அவன் கூற்று மெய்யாகி வருகிறது" என்று பேசுகிறார்கள்.

"மெல்லத் தமிழினிச் சாகும் என்று பாரதிப் பாவலன் பாடியது சரியாய்ப் போய்விட்டது. அந்தத் திசை நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கிறோம்" என்று பேசுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பிறமொழி மேலாண்மை பெருகிவிட்டது. தமிழன் தமிழில் பேசுவதில்லை; தமிங்கிலம் பேசுகிறான்.

படிப்பது ஆங்கிலம்; பார்க்குமிடமெல்லாம் ஆங்கிலம், ஆங்கிலம்தான்! அரங்கில் தெலுங்கிசை, ஆட்சியில் தமிழில்லை. வணிக நிலையங்கள், நீதி மன்றங்கள் எல்லாம் அந்நிய மொழியின் பிடியில். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பது வெறும் முழக்கமாகி விட்டது. தமிழ்க் குழந்தைகளின் பேச்சில் கூடத் தமிழில்லை. தமிழ் படிக்காமலே பட்டதாரி ஆகிவிடும் கல்வி வாய்ப்புகள் தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளன.

இந்த இழிநிலை வந்துவிடக்கூடாது என்றுதான் பாரதி அன்றே பாடினான்.

'............
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்குக்
கூறத் தகாதவன் கூறினான் கண்டீர்.'

'புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை!'

'சொல்லவும் கூடுவதில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை!
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்!'

'என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ
இந்த வசைஎனக் கெய்திட லாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்.'

என்று தமிழ்த்தாய் தன் மைந்தர்களைப் பார்த்துச் சொன்னதாகப் பாரதிப் பாடினான். 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்று சொன்னவன், ஒரு மூட்டாள்; சொல்லத் தகாதவன் சொன்னான், அவன் சொல் கொன்றிடல் போலொரு வார்த்தை என்றெல்லாம் பாரதி சொல்லியிருந்தும், அவற்றையெல்லாம் விட்டு வீட்டு, மொட்டையாகப் பாரதி சொன்னான், பாரதி சொன்னான் என்று பேசினால் அது பாரதிக்குப் பெருமையாகுமா? பாரதிக்குச் சிறுமை செய்வதாகாதா? பேதையின் உரையை மேதையர் மேடையில் இவ்வாறு பேசிடலாமா?

தமிழை வெறும் வீட்டு மொழியாக வைத்திருக்காமல், இலக்கிய மொழியாக மட்டும் பேசிக் கொண்டிருக்காமல், புத்தம் புதியன பற்றியெல்லாம் சொல்லும் ஆற்றலுடைய மொழியாக, அறிவியல் மொழியாக ஆக்க வேண்டும் என்ற தணியாத வேட்கையைப் புலப்படுத்த பாரதி இப்படி ஓர் உத்தியைக் கையாண்டான். உலகின் எட்டுத் திசையும் சென்று கற்று கலைச் செல்வங்கள், அறிவியல் நுட்பங்கள் அனைத்தையும் தமிழ்மொழியில் எழுதிச் சேர்த்திட வேண்டும் என்றான் பாரதி.

ஒரு பேதையின் கூற்றாகச் சொன்னாலும் அவன் கூற்றுக்குக் காரணமான குறைகளைக் களைய வேண்டும் என்ற நோக்கு பாரதிக்கு இருந்தது. இந்தக் குறைகள் இன்றைக்கும் இருப்பனதாம். அவற்றைப் போக்க நம் தமிழறிஞர்கள் - பிற மொழிகள் கற்ற தமிழர்கள் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பாரதிக்குத் தமிழ் அழியாத மொழி - அமர மொழி என்ற நம்பிக்கை மிக்கிருந் தது. தமிழ் தெய்வ மொழி, இயற்கை மொழி, அழிக்க முடியாத மொழி என்ற உறுதி தமிழர்க்கு வேண்டும்.

'தந்தை அருள்வலி யாலும் -இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
<u>இந்தப் பெரும்பழி தீரும் - புகழ்</u>
<u>ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.'</u> (தந்தை - இறைவன்)

என்று தமிழ்த்தாயே இறுதியில் நம்பிக்கையுரை நல்கியிருப்பதை பாரதியின் பாடலில் நாம் காண வேண்டும். பேதை உரைத்த மொழியாம் <u>பழி - பெரும்பழி</u> தீரும் என்றும் அதை தீர்ப்பதற்குத் தெய்வ அருளுடன் புலவோர் தவ வலிமையும் துணையாகும் என்ற கருத்தையும் சிந்திக்க வேண்டும். அதனாற்றான் புலவர்களை நோக்கிச் 'சென்றிடு வீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்குச் சேர்ப்பீர்' என்று வேண்டுகோள் வைத்தான்.

ஆதலின் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதை விட்டு விட்டு, திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்யும் வகையில் திறம் படைத்தவர்களாய்த் தமிழ் வளர்ப்போமாக.

☐

# சைகை மொழி

தாகம் என்பதைக் காட்டுவது
'தடித்தவிரல்' வாயில் நீட்டுவதாம்
சோகம் என்பதற் கடையாளங்'கை
தாங்கியே கன்னத்தில் ஊன்றுவதாம்'
யோகம் என்பதற்குத் 'துடைகளின் மேல்
இருவிரல் கைசேர்த்து வைப்பதுவாம்'
யாவும் மனிதர்கள் கைகளினால்
எடுத்துக் கூறுமிவை 'சைகைமொழி'!

'பேசாதே' என்பதற் கடையாளந்தான்
பெருவிரல் உதட்டின்மேல் கூட்டுவதாம்
ஈசன்மேல் பக்தியுண் டென்பதற்கு
'இருகரம் கூப்பி' வணங்குவதாம்
யோசனை என்பது 'மூக்கின் மேலே
பெருவிரல் இருத்தி வைப்பதுவாம்'
பேசாமல் கைகளால் மனிதர்கள்தாம்
பேசிடும் அடையாள மொழி இதுவே!

கையொன்றை மடித்துத் தலையின் கீழே
வைத்திடில் தூங்குவதற் கடையாளமாம்
'ஐயா வா' என்பதைக் கைவிரல்கள்
அசைவினில் காட்டி அழைப்பதுவாம்
கைகளை ஒன்றின்மேல் ஒன்றுபடக்
கலந்து வைப்பது கலியாணத்தின்
செய்கையாம் இதனைத்தான் 'கைத்தலமென்'
றியம்பினார் ஆண்டாள்தம் பாசுரத்தில்!

வாயிலா ஊமைகள் கைகளினால்
வார்த்தைக ளாடுவதைஎன்றும் காண்போம்!
ஆய கலைகள் அறுபத்தெட்டில்
ஆடற்கலைக் கிது முக்கியமே
தேய மெங்கும் நாம் சென்றிடினும்
தெரிந்த மொழியிந்தச் சைகைகளே!
தீயினை அறிந்திடும்முன்னர் முன்னோர்
தோற்றிய மொழியின்றும் தொடர்கின்றதே!

- **முத்து எத்திராசன்**


# "நானொரு கம்யூனிஸ்ட்"

## கவிஞர் நா. காமராசன்

*'கறுப்பு மலர்களில்' இவர் ஏற்படுத்திய அதிர்வுகள் புதுக் கவிதை இருக்கும் மட்டும் இருக்கும்.*

*இவரது கவிதை நடை யதார்த்த மானது. ஆனால், பாடு பொருள் களோ அசாத்தியமானவை.*

*அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்தில் வித்தியாசத்துடன் கூடிய கவிதை கன மழை பெய்யக் கூடு மென எப்போதும் பேனாவுடன் இயங்கி வருகிறவர்.*



கவியரசர் நா. காமராசன்

*பேனாவைக் கூட நிமிர்த்தி வைத்துக் கொண்டுதான் எழுது கிறாரென நினைக்குமளவு எப்போதும் அதிகபட்ச கவிதா கம்பீரத்தோடு காணப்படுகிறவர்.*

சந்திப்பு: **கவிஞர் ஜானகிராமன்**

**எதை வைத்து உங்களை ஒரு கவிஞரென நீங்களே நிர்மானித்துக் கொண்டீர்கள்?**

நடுநிலைப் பள்ளியில் படிக்கும்போது ஒரு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது. கலைஞரின் கவிதை நடைச் சொல்லோவியங் களும், உவமைக் கவிஞர் சுரதாவின் கவிதைகளும் வானொலியில் தொடர்ந்து வெளிவந்தன. கலைஞரின் சொல்லோவியத்தின் உணர்ச்சி யும், சுரதாவின் சிந்தனையும் என்னை மிகவும் கவர்ந்தன. அவற்றை யெல்லாம் மனப்பாடமே செய்யத் தொடங்கினேன். அப்போதுதான் எனக்குள் ஆழமான கவிதா அனுபவங்கள் ஏற்பட்டன.

**ஆரம்ப காலக்கட்டங்களில் தேவையான பரபரப்பை வெகு விரைவாக அடைந்து விட உங்களால் எப்படி முடிந்தது?**

கவிதையின் கருப் பொருளை மற்ற எல்லாக் கவிஞர்களை விடவும் நான் வித்தியாசமாகச் சிந்தித்தேன். நடைபாதைகளுக்கு என் 'கறுப்பு மலர்கள்' தொகுப்பைக் காணிக்கையாக்கினேன். எல்லாராலும் புறக்கணிக்கப்படும் எல்லாரையும் பாடுவதென எனக்கு நானே விதித்துக் கொண்டேன்.

'அவர்கள் நீதி மன்றத்தை விசாரணை செய்கிறார்கள்'. என்ற என் கவிதை உலகத்திலே எந்தக் கவிஞனும் பாடாத கருப் பொருள் கொண்டது. அதைப்போல் 'விலை மகளிர்' என்ற கவிதையையும் குறிப்பிட வேண்டும். பணம், பதவி என்ற எதற்காகவும் நான் இலக்கியம் வளர்க்கவில்லை. அதனால் பெரிய வரவேற்பைப் பெற்றேன்.

**படைப்பிலக்கியம் நினைக்காதது மாதிரி வந்தீர்கள். ஆனால் நினைத்தது போல் தொடர முடியவில்லையே ஏன்?**

புதுக்கவிதைக்கு ஒரே ஒரு சாட்சியம் என் 'கறுப்பு மலர்கள்'தான் என்று செக்கோஸ்லோவியா நாட்டுத் தமிழர் 'இஸ்சபபில்' அறிவித்திருக்கிறார். அது மட்டுமன்று; தமிழகச் சட்டப் பேரவையிலே என் கவிதைகளைப் பற்றிய விவாதங்கள் நடந்துள்ளன. இலக்கியத்தை உடைத்து மக்களிடம் ஜனரஞ்சகத்தைப் பரப்பியது என் கவிதைகள் தாம். முதலில் கருப்பொருளை வைத்துக் கொண்டு, அதற்கு வரிகளைச் செதுக்குவேன். அதன் வலி எனக்குத்தான் தெரியும். விமர்சனம் பல வகைப்பட்டது. இது உங்களுடையது.

**'விசாரணையே குற்றவாளிக் கூண்டில்தான் ஆரம்பிக்கிறது' என்று அறிவித்தீர்கள் - அது பிரகடனமா? அல்லது பின் குறிப்பா?**

பிரகடனம்தான். இங்கே ஒன்றை நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த உலகத்தின் போக்கையே சுத்தமாக மாற்ற வேண்டும். தெளிவாகச் சொன்னால் நானொரு கம்யூனிஸ்ட் என்று சொல்லலாம்.

**உங்கள் இலக்கிய வாழ்க்கையில் சில காலம் அளவிட முடியாத கர்வத்தோடு காணப்பட்டது எதற்காக?**

ஒவ்வொரு மகாகவிஞனின் இயல்பு அது. கர்வம்தான் கலைஞனை கௌரவப்படுத்துகிறது. சில காலம் என்று கால அளவைக் கணக்கிடாதீர்கள். இப்போதும் அப்படித்தான் இருக்கிறேன். எப்போதும் அப்படியேதான் இருப்பேன்.

**புதுக்கவிதைக்கு பிரத்யேகமான அடையாளமாக இருந்தீர்கள். அதன் பின்னர் என்னவாயிற்று?**

இப்போதும் இருக்கிறேன். ஆசிரியர் விக்கிரமன், வலம்புரிஜான் ஆகியோரின் ஆதரவு என்னை எழுத வைத்தது. எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இந்த உலகத்திலேயே புதுக்கவிதைக்கு அசைக்க முடியாத தலைவன் நான்தான்.

**பிறமொழி எதிர்ப்பை முன்னின்று நடத்திவிட்டு, தன் தலைமுறையை மட்டும் தமிழைத் தாண்டி அனுப்பி வைத்த 'மொழிக் காவலர்களின்' மூளை குறித்து?**

தமிழ் செம்மொழியென இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக் கிறது. எனவே, எல்லாத் துறையிலும் தமிழால் சாதிக்க முடியும். இந்தக் கேள்வியை யாரையோ மனத்தில் வைத்துக் கேட்கிறீர்கள். யாராயிருந் தாலும் கண்டிக்கிறேன்.

**'கறுப்பு மலர்கள்' மட்டும் போதுமா?**

இப்படி ஒரு பெரிய பரவலான கருத்து இருக்கிறது. வலம்புரி ஜான்கூட 'கறுப்பு மலர்'களுக்குப் பின்பு நான் கவிதையே எழுத வேண்டியதில்லை என்றார். நேற்றுக் கூட ஒரு நண்பர் 'காட்டுக் குறத்தி'யைப் படித்து விட்டு. அது 'கறுப்பு மலர்களை'விட நன்றாக இருக்கிறது என்றார்.

One of the Best என்று சொல்லும்போது படைப்புகளில் ஒன்றைத் தான் எடுக்க முடியும். யுனஸ்கோ விருதைப் பெற்ற அந்தப் படைப்புக் குப் பிறகும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். அது, ஏன் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை?

**மொழிக்கும் வாசகனுக்கும் உண்மையாக இல்லாமல், பிறகெப்படி ஒரு படைப்பாளனால் யோக்கியத்தனத்தைப் பற்றி பேச முடிகிறது?**

எப்படியென்று எனக்குத் தெரியவில்லை. இதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

**சாகித்ய அகாதமி, ஞானபீடம் வாங்குமளவு ஆள்பலம் இருக்கிறதா?**

நான் ஒன்றை முதலில் மறுத்துவிட விரும்புகிறேன். ஆள்பலம் என்பது எனக்கு மிகவும் அவமானமாகத் தெரிகிறது. சிறுகதை மன்னன் ஜெயகாந்தனோடு பேசும்போது, 'நீங்கள் ஏன் நோபல் பரிசு வாங்குமளவு ஒரு நூல் எழுதக்கூடாது?' என ஆர்வமாகக் கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார், 'ஒரு காலத்தில் நோபல் பரிசு பெயரே அழிந்துவிடும். ஆனால் ஜெயகாந்தன் பெயர் என்றும் நிலைத்திருக்கும்' என்றார். நானும் அதையே கூறுகிறேன். என்னையும் ஜெயகாந்தனையும் தவிர மிகவும் தரமான எழுத்தாளர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. உலகத் தரத்தில் பார்த்தால் டால்ஸ்டாயை எங்களோடு இணைத்துக் கொள்ளலாம்.

**உலக இலக்கியத்தை உற்றுப் பார்த்தால் தமிழும், தமிழனும் எழுதி வைத்தது, 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' மட்டும்தானா?**

உலகத்திலேயே அற்புதமான கவிஞர் யார் என்றால் நம் கம்பனைக் கூறலாம். எனவே, இந்தக் கேள்வி இனி தேவையற்றது.

**வாருவது, வசை பாடுவது - இன்னும்கூட தமிழனின் தேசிய குணம் மாறவில்லையே?**

இந்தக் கேள்வியை நான் முற்றிலும் மறுக்கிறேன். தீயவற்றை எதிர்ப்பதில் தமிழனின் கோபம் மிக அருமையாக இருக்கும். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் அரசியல் சட்டத்தையே எதிர்த்து கைதானவன் நான். அதே நேரத்தில் இந்தி கவிஞர் ஜெய்சங்கர் பிரசாத் எழுதிய 'காமாயநீ' என்ற குறுங்காவியத்தை இந்திய மொழிகள் எதிலும், அத்தகைய படைப்பு இல்லையெனக் கருதுகிறேன்.

**ஒரு பெரிய இயக்கச் சார்பு இருந்தும் உங்களால் ஏன் தொடர்ந்து இயங்க முடியவில்லை?**

நான் ஒரு விமர்சகன் என்பதோடுதான் எங்கேயும் இருந்திருக்கிறேன். ஜனங்களைப் பற்றி சிந்திப்பவனும், சமூகத்தை முன்னிறுத்தி எழுதுபவனும் என்றும் தொடர்ச்சியானவன். இந்த நிலையில்தான் எப்போதும் நானிருக்க விரும்புகிறேன்.

**விதிகளற்ற உங்கள் இலக்கிய வாழ்க்கையின் இப்போதைய நிலையென்ன?**

எப்போதும் என் நிலை ஒரே நிலைதான். சென்ற கேள்வியின் பதிலிலேயே இதைச் சொல்லி விட்டேன்.

**உங்கள் பதிவுகளெல்லாம் பிரமாதப்படுத்தி இருக்கின்றன. இருந்தும் அத்தனை சீக்கிரம் ஏன் சமாதானம் அடைந்தீர்கள்?**

சமாதானம் அடைந்ததாகச் சொல்வது தவறு. எதற்காகவும், எப்போதும் சமாதானம் அடையாததுதான் மகாகவிகளின் மனோ

பாவம். கவிதையின் கருப் பொருளுக்காகவே கவனிக்கப்பட்டவன் நான். அதற்கான தேடலில் இன்றும் இயங்குகிறேன். எழுத்தோடுதான் என் நாள்கள் நகர்கின்றன.

**புதுக்கவிதைக்கு உங்களை விட்டால் ஆளில்லை என்பது மாதிரி பேசுகிறீர்கள். அதற்கு இப்போது என்ன அவசியம்?**

வேடிக்கையாக இருக்கிறது. புதுக்கவிதையை மக்களின் பொருளாக ஆக்கியது நான் ஒருவன்தான்.

முத்தமிழ்க் காவலர் கலைஞர் ஒருமுறை என்னிடத்தில் கூறினார், "கறுப்பு மலர்கள் போல இனி யாரும் எழுத முடியாது. ஏன் நான்கூட அப்படி எழுத முடியாது" என்றார்.

மண்வாசனை எழுத்தாளர் கி.ரா.வும் ஒருமுறை, "உலகத்தில் வருகின்ற எல்லா இதழ்களிலும், நூல்களிலும் இருக்கிற கவிதைகளை விடவும் உங்கள் கவிதைகள் உயர்ந்தவை" என்றார்.

புதுக்கவிதை என்றதும் நா. காமராசனை உங்களால் முன்னிறுத்த முடியாவிட்டால் உங்கள் இலக்கிய உணர்வை என்னால் சந்தேகமாகத்தான் பார்க்க முடியும்.

**உங்கள் வருகையால் இலக்கியம் எத்தனை 'இஞ்ச்' வளர்ந்தது?**

ஆழமான விமர்சனப் பார்வையில் பார்த்தால் நானும், கம்பனும் தான் கவிதைக்கு அத்தாட்சி. இது எப்படியென்று ஊருக்கே தெரியும்.

**கம்பனைத் தவிர ஏனைய பழம் புலவர்கள் சம்மத மில்லையா?**

கம்பனைத் தவிர பழம் புலவர்களில் யாரோடும் எனக்கு சமாதானமில்லை. வேறு யாரும் பெரிய ஆளில்லை என்பது என் எண்ணம். இந்த வரிசையில் வள்ளுவனையும் வைத்துக் கொள்ளுங்கள். ○


**சிறப்பீனும், செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு.** (31)

*அறம் புகழையும் தரும்; பொருளையும் தரும்;
ஆதலால், உயிர்க்கு நலமாவது
அதுவே.*



**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு (பி) லிமிடெட்

# பேய்த்தொழிலாட்டி

## இரா. கலைக்கோவன்

அப்பர் பெருமானின் நான்காம் திருமுறையில் தொண்ணூற்றைந்தாம் பதிகமாக அமைந்துள்ளது வீழிமிழலை விருத்தம். 'மறக்கினும் என்னைக் குறிக் கொள்மினே' என வேண்டி முடியும் இந்த அருமையான பதிகத்தின் நான்காம் பாடலில் (தருமபுரம், 1957) அப்பர் புதிய தகவலொன்றைப் பொதிந்து வைத்துள்ளார். 'தீத்தொழிலான் தலை தீயில் இட்டுச் செய்த வேள்வி செற்றீர்' எனத் தொடங்கும் இப்பாடலின் இரண்டாம் அடி, 'பேய்த்தொழிலாட்டியைப் பெற்றுடையீர்' என்கிறது. இவ்வடிக்கு உரை எழுதும் முத்து சு. மாணிக்க வாசகன், 'பேயின் தொழிலை ஆள்பவரைப் பெற்றுடையவரே' என்று அப்பர் பெருமான் இறைவனைப் போற்றுவதாகக் கூறுகிறார். பேயின் தொழிலாளும் இப்பெண்மணி யார்? பேய்களின் தலைவியா? சிவபெருமான் இவரைப் பெற்றுடையவர் எனில், இப்பெண்மணி சிவபெருமானின் திருமகளா?

முத்து சு. மாணிக்கவாசகன், 'பேய் ஊர்தி உடையாள் ஒரு பெண் விநாயர்க்குத் தங்கை முறையிற் கொள்ளப்பெறும் வரலாறு உண்டு' என்று விளக்கம் தருவதுடன் தம் விளக்கத்திற்குச் சான்றுகளாக நம்பியாண்டார் நம்பியின் திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை (பதினோராம் திருமுறை, சைவ சிந்தாந்தப் பெருமன்றம், 1990, பக் 276-79)யிலிருந்து இரண்டு பாடல்களை முன் வைக்கிறார். இவ்விரண்டனுள் நான்காம் பாடல்,

'பேசத் தகாதெனப் பேயெரு
 தும்பெருச் சாளியும்என்
றேசத் தகும்படி ஏறுவ
 தேஇசை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழில் நுங்கையும்
 நுந்தையும் நீயும்இந்தத்
தேசத் தவர்தொழு நாரைப்
 பதியுட் சிவக்களிறே.'

என அமைந்துள்ளது.

இப்பாடலில் பேய், எருது, பெருச்சாளி எனும் மூன்று ஊர்திகள் குறிக்கப்பட்டு, அவற்றில் ஏறுவாராக, 'நுங்கை, நுந்தை, நீ' என்பார் சுட்டப்படுகின்றனர். 'நீ' என்பது நாரைப்பதிச் சிவக்களிறான பிள்ளையாரைக் குறிப்பதால், நிரல்படி அவர் ஏறும் ஊர்தி பெருச்சாளி எனப் பொருந்த, 'நுந்தை' சிவபெருமானாகிறார். அவர் ஊர்தி எருதாகப் பொருந்துகிறது 'நுங்கை' எனச் சுட்டப்படும் பிள்ளையாரின் தங்கைக்கு ஊர்தி 'பேய்' என்பது நம்பியாண்டார் கூற்று. பேயை ஊர்தியாகக் கொண்ட இப்பெருமாட்டி பிள்ளையாரின் தங்கை எனில் சிவபெருமானின் திருமகளன்றோ?

இரட்டை மணிமாலையின் பதினான்காம் பாடல், 'வீரணக்குடி ஏந்திழைக்கும் பூந்தார்க் குமரற்கும் நீ முன்னினை' என்று நாரைப்பதி விநாயகரைப் போற்றுகிறது.

'ஏறிய சீர்வீ ரணக்குடி
ஏந்திழைக் கும்இருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும்
முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தி
னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் பால்தொழு நாரைப்
பதியுள் விநாயகனே.'

*வீரணக்குடி என்று பதிப்புச் சுட்டும் ஊரை, முத்து சு. மாணிக்க வாசகன், 'வீரனற்குடி' எனக் கொண்டு குறித்துள்ளார். இந்த இரண்டு* பாடல்களில் எது சரியானது?

வீரணக்குடியே சரியான பாடம் எனக் கொள்ளின், நம்பியாண் டாரின் இரண்டு பாடல்கள் வழிப் பிள்ளையாரின் தங்கையாக *அறிமுகமாகும் இந்த ஏந்திழை, வீரணக்குடி இருப்பவர் எனக் கொள்ள* நேரும். பேயை ஊர்தியாக உடைய இவரைப் பற்றி வேறெந்தத் தகவலும் இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இவர் ஊர்தியாகக் கொண்டிருக்கும் பேய் சிவபெருமானுக்கு மிக நெருங்கிய உறவாகத் திருமுறை ஆசிரியர்களால் கொண்டாடப் படுகிறது.

அப்பர் பெருந்தகை, 'பேய்க் கணத்தோடு இணங்கி நின்றாடி யவை' இறைவன் திருவடிகள் என்று போற்றுகிறார். பேய்கள் வாழும் காட்டிலேயே இறை நடனம் நித்தமும் நடக்கிறது. இறையாடலுக்குப்

பாடுநர்களாகவும் அவ்வாடலின்போது உடன் ஆடுநர்களாகவும் அவ்வாடலுக்கு இசைகூட்டும் கருவிக் கலைஞர்களாகவும் கூடப் பேய்கள் திகழ்வதைக் காணமுடிகிறது. பேய்ச் சுற்றும் கொண்டவராய்ப் பேயுகந்து ஆடுநராய்க் காட்டப்படும் பெருமானின் பேய் நாட்டப் பின்னணியில் பேய்த்தொழிலாட்டி மிளிர்வதைப் பொருத்திப் பார்க்கலாம்.

இதுநாள் வரையிலும் அடையாளப்படுத்தப்படவில்லை எனினும் இனி, ஆய்வாளர்கள் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் வீரணக்குடி ஏந்திழையைத் தேடிப் பார்க்கலாம். கல்வெட்டுகளில், சிற்பக் காட்சிகளில் பேய்த்தொழிலாட்டியைக் கண்டறிய முயலலாம். சைவ சமய அறிஞர்களும் திருமுறை வல்லாரும் உரிய சான்று களுடன் இப்பேய்த்தொழிலாட்டி யார் என உணர்த்திக் கற்பனைகள் வளராமல் தடுக்கலாம்.

வரலாற்றின் பல முதல்களுக்குச் சொந்தக்காரராகத் திகழும் அப்பர் பெருந்தகை, சிவக்குடும்பத்தின் இளைய நங்கையை அறிமுகப்படுத்து வதிலும் முதல்வராகிச் சிறப்பது ஈண்டு கருதி மகிழத்தக்கதாகும். ○

---

# பயணம்...

சாகாமல் சத்தியங்கள் நிமிர்ந்து வாழும்
சாதனைகள் செய்தவர்நம் சாந்த மூர்த்தி!
ஏகாதி பத்தியத்தைப் போகச் சொல்லி
இறுதிவரை பொறுமையுடன் எதிர்த்தா ரிங்கே!
போகாமல் அடம்பிடிக்கும் சாதிப் பேயைப்
புறங்காட்டப் புதியதொரு போர்தொ டுத்தார்!
ஆகாத மதவெறிகள் அடங்கும் என்றே
அரும்பாடு பட்டதனால் அமரர் ஆனார்!

அடிவாங்கி உதைவாங்கி அறையும் வாங்கி
அவமானம் அளவின்றி அதிகம் வாங்கி
இடிதாங்கி யாயிங்கே எல்லாம் தாங்கி
இந்நாட்டில் சுதந்தரமாய் வாழும் வாழ்க்கை
கொடிவாங்கி வானளாவப் பறக்க விட்டே;
குடியாட்சித் தத்துவத்தை உலகம் போற்றும்
படியோங்கச் செய்தவர்நம் காந்தி அண்ணல்
பாதையிலே நாமெல்லாம் பயண மாவோம்!

கவிஞர் காட்டாம்புலியூர் கா. தங்கராஜ்

யுகபாரதி

## ஓசை

'எஃப்' என்ற ஆங்கில எழுத்துக்குத் தமிழில் அதே ஓசை வரும் எழுத்து இல்லை. 'எப்' என்றோ 'எஃப்' என்றோதான் எழுதுகிறார்கள். இதுபோல சில உச்சரிப்பு எழுத்துகள் தமிழ் மொழியின் குறைவை வெளிப்படுத்துவதாக ஆங்கிலம் படித்த அறிவாளிகள் கருதுவதுண்டு.

செய்தி வாசிக்கும் பெண்மணிகளின் உச்சரிப்பைக் கவனிக்கும் போது இந்தக் குறைகள் எனக்குத் தெரியவில்லை. ஒன்றைத் தொடர்ந்து பயன்படுத்தும்போது அது பழக்கத்திற்கு வந்து விடும். அதன் மூலம் இக்குறைகளை நிவர்த்தி செய்யலாம்.

'அய்யா' என்ற தமிழ்ச் சொல்லை உச்சரிக்கும்போது அது பயிலப்படுகின்ற இடத்தைப் பொருத்து மாறுபடுகிறது. ஓர் எஜமானனை அழைக்க அவனது வேலைக்காரன் சொல்லும்போது ஒருவிதமாகவும், ஆசிரியரை அழைக்க மாணவன் சொல்லும்போது வேறு விதமாகவும்தான் இருக்கிறது. தாய்த் தமிழ்ச் சொல்லுக்கே இப்படியென்றால் பிறமொழிகளைப் பயன்படுத்தும்போது இக்குறை தவிர்க்க முடியாதது.

தமிழில் எழுத்துகள் குறைவுடையதென்ற கருத்து பாரதிக்கும் இருந்தது. பிறமொழிகளைப் போல, தமிழில் துருவ எழுத்துகள் இல்லை. துருவ எழுத்துகள் எனில் 'க' என்ற சொல்லுக்கு இணையான ஓசையுடைய பிற எழுத்துகள்.

இது விஷயமாகப் 'புதுச்சொல்லாக்கம்' பற்றிய கருத்தை மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் குறித்து பாரதி தமது கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார். இதே கருத்தை சுப்ரமணிய சிவாவும் கொண்டிருந்தார். 1914 ஆண்டு வாக்கில் இக்கருத்து விவாதத்திற்கு வந்தது. பாரதியின் புதுச்சொல் ஆசைக்கு வ.உ.சி. தீவிரமான எதிர்ப்பைத் தெரிவித்தார்.

''நம் பாஷையில் எழுத்துக் குறையென்று தமிழ் பாஷை இலக்கண இலக்கியங்களைக் கற்றவர் எவரும் கூறார்'' என்று

கண்டித்தார். பல மொழிகள் தெரிந்த பாரதியின் ஆதங்கம் ஒருபுறமிருக்க வ.உ.சி.யின் ஆதங்கம் இன்னொருபுறம்.

பாரதியின் கவலை என்னவெனில் ஜ,ஷ,ஸ,ஹ,க்ஷ போன்ற எழுத்துகளைத் தமிழ் அரிச்சுவடியில் சேர்த்திருப்பதுபோல நாமும் நம் காலத்திற்குத் தேவையான சொற்களைச் சேர்க்கலாம் என்பது தான். அதன்மூலம் தமிழ் வலுவிழந்த மொழியென்று அவர் பேசவில்லை. 'தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்றுதான் எழுதியிருக்கிறார். வ.வே.சு. ஐயருக்கும் பாரதியின் கருத்தில் உடன்பாடு.

'எஃப்' என்ற எழுத்தை ஆங்கிலேயரைப் போல உச்சரிக்க ஆசைப்படுவதே ஒருவிதப் போலித்தனம்தான். தமிழில் உள்ள எழுத்துகளைக் கொண்டே அவற்றை எழுதவோ, பேசவோ செய்தால் அது நகைப்புக்குரியதில்லை. 'எஃப்'ஐ 'எப்' என்றால் என்ன குறைந்துவிடும்?

பாரதியின் மொழிப்பற்றும், வ.உ.சி.யின் மொழிப்பற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாதவை. எனவே, இருவரது கருத்துகளும் ஏக்கங்களும் கவனத்துக்குரியன. இந்த விவாதத்தின் முடிவாக 1936இல் இராஜாஜி எழுதினார்.

''வடமொழிச் சொற்களை தமிழில் சொல்லும்போது அவற்றின் சம்ஸ்கிருத உச்சரிப்பை வைத்துச் சொல்ல வேண்டும் என்பது கூடாது. அது தமிழ் முறையாகாது. மணிப் பிரவாளமாகும்''. எனவேதான் பிறமொழிகளின் சொற்களுக்குத் தமிழ்மொழியில் சொற்களைத் தேடுவதை விட்டுவிட்டு உரிய முறையில் எழுதிப் பழகுதல் வேண்டும்.

சில வார இதழ்களின் கேடுகெட்ட வாக்கிய அமைப்புகளைப் பார்த்து, படித்து, தமிழ் மறந்த புதிய தலைமுறைக்கு 'தமிழில் எழுத்துக் குறை' என்ற விவாதம் இனிக்கும். உண்மையில், 'தனது தாயைப் பழிப்பது போன்ற இழிசெயல்' என்பார் பாரதிதாசன்.

தமிழிலுள்ள இந்தச் சிக்கலான விவாதத்தை இவருக்கு முன்பாக ஆ. வேங்கடாசலபதியும் எழுதியிருப்பதாகத் தகவல். மேலும் அறிய விரும்புவோர் 'வ.உ.சி. வளர்த்த தமிழ்' என்ற நூலை வாசிக்கவும். எழுதியவர் மா.ரா. அரசு. பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர்.

நமக்கு என்ன செரிக்குமோ அதைத்தான் உண்ணவேண்டும். ஆசைக்கு உண்டு, அவஸ்தைப்படுவதில் புதுமை எதுவுமில்லை. ○

# ரப்பர்

## எம். தோத்தாத்ரி

நம் அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் பல பொருள்களில் ரப்பர் முக்கியமான ஒன்றாகும். இன்று நம்மால் தவிர்க்க முடியாத இந்த ரப்பரைப் பற்றி சற்றே விரிவாகப் பார்ப்போம்.

நமது வீடுகளில் புதுமனை புகுதல், ஆண்டு நிறைவு, திருமணம் போன்ற கொண்டாட்டங்கள், சுதந்தர தினம், குடியரசு தினம் போன்ற தேசிய விழாக்கள் ஆகியவற்றின்போது நாம் பறக்கவிடும் பல வண்ண பலூன்கள், நம் குழந்தைகள் விளையாடுவதற்கான பந்துகள், பொம்மைகள், சின்னஞ்சிறு குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கான நிப்பிள்கள், ஊர்திகளின் டியூபுகள், டயர்கள், பெண்களின் தலைமுடி மற்றும் கரன்ஸி நோட்டுகளைக் கட்டுவதற்கான வளையங்கள் (ரப்பர் பேண்ட்ஸ்), நாற்காலிகள், கட்டில்கள், மேஜைகளின் கால்களுக்கு கீழே பொருத்தப்படும் குமிழ்கள், வழவழப்பான தரைத் தளங்களில் போடப்படும் மிதியடிகள், மின்சாதனங்கள், மின் அடுப்புகள் பயன்படுத்தப்படும் அறைகளில் மின் காப்பானாகப் பயன்படும் பாய்கள், கைகள் மற்றும் கால்களுக்கான உறைகள் (க்ளவுஸ்), சமையலறைகளில் பயன்படுத்தும் பிரஷர் குக்கர்களின் காஸ்கெட்கள், மின்சாரம் பாயும் கம்பிகளின் பாதுகாப்பு உறைகள், உடைந்து போகாத வளையங்கள், சீப்புகள், பல வண்ணங்களில் தயாரிக்கப்படும் சோப்புப் பெட்டிகள், மருத்துவர்களின் கை உறைகள், ஒத்தடம் கொடுக்க உதவும் பைகள், நீர் பாய்ச்சப் பயன்படும் குழாய்கள், பேப்பர் வெயிட்கள், சூடான பானங்கள் அடங்கிய கண்ணாடி டம்ளர்களின் அடியில் வைக்கப்படும் தட்டுகள், விளம்பரத்துக்காகப் பறக்க விடப்படும் மிகப் பெரிய பலூன்கள் போன்ற கணக்கற்ற பொருள்கள் இன்று ரப்பர் கொண்டே செய்யப்படுகின்றன.

கி.பி.11ஆம் நூற்றாண்டில் கிரிஸ்டோபர் கொலம்பஸ் எனும் ஆங்கில மாலுமி அமெரிக்கக் கண்டத்தை முதன்முதலில் கண்டு

பிடித்த சரித்திர உண்மை, நாம் அனைவரும் அறிந்ததே! ஆனால், இதே கொலம்பஸ்தான் ரப்பரையும் முதன்முதலாக ஐரோப்பிய - ஆசிய நாடுகளில் அறிமுகம் செய்தார் என்பது நம்மில் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

தன் இரண்டாவது அமெரிக்க யாத்திரையின்போது கொலம்பஸ், தென் அமெரிக்கப் பழங்குடிகள் ஒரு மரத்தின் பிசினை உருண்டையாக்கி, அதைத் தரையில் அடித்துத் துள்ளி எழச் செய்து, அதை வைத்து விளையாடியதைக் கண்டு அதிசயித்தார். பந்து என்பதே கண்டுபிடிக்கப்படாத அக்காலத்தில், துள்ளிக் குதித்த அந்தப் பொருள் அவருக்கு மிக்க வியப்பை அளித்தது. மேலும் இப்பொருள் மீள் சக்தி (எலாஸ்டிசிட்டி) உடையதாக இருந்தது எனவும் கண்டு, அந்த மரத்தின் கன்றுகளை எடுத்துச் சென்று மற்ற நாடுகளில் பயிரிடவும் ஏற்பாடு செய்தார்.

இம்மரத்தின் பிசினை பென்சில் எழுத்துகளின்மீது தேய்த்த போது அந்த எழுத்துகளை அது அழித்தது. ஆங்கிலத்தில் 'ரப்' என்பது அழுத்தித் தேய்ப்பதைக் குறிப்பது. இப்படி அழுத்தித் தேய்த்தபோது பென்சில் எழுத்துகளை அது மறையச் செய்ததால் அப்பொருள் 'ரப்பர்' என அழைக்கப்படலாயிற்று. இன்றும் கூட ஓவியர்கள், பள்ளி மாணவர்களால் 'எரேஸர்' என்னும் பெயரில் அழிப்பானாக ரப்பர் பயன்படுத்தப்படுகிறது.

கொலம்பஸின் கண்டுபிடிப்புக்குப் பின் சுமார் முந்நூறு ஆண்டுகள் கழிந்த பின்பே ரப்பர் பல வகையில் உபயோகத்துக்கு வந்தது.

இயற்கை ரப்பர் 'ஹெவியா பிரேசிலியென்ஸிஸ்' எனும் பெயர் கொண்ட மரத்தின் பிசினிலிருந்து தயாரிக்கப்படுகிறது. 'ஹெவியா' என்றால் 'கண்ணீர் விடும் மரம்' என்பது பொருள். இம்மரத்தின் பட்டையை கூர்மையான ஓர் ஆயுதத்தால் கீறினால் அதிலிருந்து சொட்டுச் சொட்டாக வெண்மை நிறத்தில் இப்பிசின் கசியும். இப்பிசின், 'ரப்பர் பால்' எனப்படும். இதில் 30 முதல் 40 விழுக்காடுகள் திட ரப்பர் துளிகளும் மீதி பாகம் தண்ணீரும் இருக்கும்.

ரப்பர் மரங்கள் ஈரமும் வெப்பமும் மிகுந்த பிரதேசங்களில் நன்கு வளரும். தென் அமெரிக்காவில் அமேஸான், ஆரினாக்கோ ஆறுகளின் பள்ளத்தாக்குகள், மெக்ஸிகோ, பர்மா, மலேசியா,

இலங்கை போன்ற நாடுகளில் ரப்பர் மரங்கள் மிகுதியாகப் பயிரிடப்பட்டு, ரப்பர் தயாரிக்கப்பட்டு பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

இந்தியாவில் கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களில் ரப்பர் பயிராகிறது.

இந்த நாடுகளில் நூற்றுக்கணக்கான ரப்பர் மரங்களிலிருந்து ரப்பர் பால் சேகரிக்கப்பட்டு, அத்துடன் அசிடிக் அமிலம் சிறிதளவு சேர்க்கப்படுகிறது. அப்போது ரப்பர் பாலின் ஒரு பகுதி கட்டியாகி, மீதிப் பகுதி நீராகப் பிரிந்து விடும்.

திட ரப்பர் இயந்திர உருளைகளின் ஊடே செலுத்தி அழுத்தப் பட்டு, நீர் பிழியப்பட்டு அகற்றப்படும். இந்த தகடு வடிவில் கிடைக்கும் ரப்பரைத் தொங்கவிட்டு, புகை மூட்டப்படும். இப்போது நீர் முற்றிலுமாக நீக்கப்பட்டு புகைந்த ரப்பர் பெறப்படும். இந்த கச்சா ரப்பர் ‘மீள் சக்தி’ உடையதாக இருக்கும். ஆனால் வெப்பநிலை மாறுபாடுகளைத் தாங்கும் சக்தியற்றதாக இருக்கும்.

கோடை காலத்தில் இளகி, பிசுபிசுப்பாக ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையதாகவும், குளிர்காலத்தில் இறுகி, வெடிப்புகள் ஏற்பட்டு நொறுங்கும் தன்மையுடையதாகவும் இருக்கும். எனவே, இதை அப்படியே பயன்படுத்த இயலாது. பல்வகை வேதிப் பொருள்களை இத்துடன் தகுந்த அளவுகளில் சேர்த்து, இதன் பண்புகள் மேம்படுத்தப்படும். இந்நிகழ்ச்சி ‘கூட்டுதல்’ (காம்பவுண்டிங்) எனப்படும்.

கூட்டுதலின்போது கச்சா ரப்பருடன் கந்தகம் சேர்க்கப்பட்டு வெப்பப்படுத்தப்படும். ‘வல்கன்’ எனும் கிரேக்க, வெப்பக்


வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (50)

உலகில் வாழ வேண்டிய முறைப்படி
வாழ்பவன் தெய்வத்தன்மையன்
ஆவான்.



ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்

கடவுளின் பெயரை அடிப்படையாகக் கொண்டு இந்நிகழ்ச்சிக்கு 'வல்கனாக்கல்' என்று தாமஸ் குட் இயர் எனும் அமெரிக்கரால், பெயரிடப்பட்டது. வல்கனாக்கலின்போது கந்தகம் ரப்பருடன் விரைவில் சேர்வதற்காக நாக ஆக்ஸைடு ஒரு முடுக்கியாக சேர்க்கப்படும். இதன்பின் கிடைக்கும் ரப்பர் மிக்க வலிமை பெற்று வெப்பநிலை மாறுபாடுகளினால் பாதிக்கப்படாததாக மாறும்.

சேர்க்கப்படும் கந்தகத்தின் அளவைப் பொருத்து ரப்பரின் கெட்டித்தன்மை மாறுபடும். அதிக அளவில் கந்தகம் சேர்க்கப் பட்டால் மிக கெட்டியான 'எபோனைட்' எனும் ரப்பர் வகை கிடைக்கும். மின்சக்தியை சிறிதும் கடத்தாததாக இது இருப்ப தால் மின் சாதனங்களில் அதிகமாக இது பயன்படுகிறது. மேலும் விலை மிகுந்த ஊற்றுப் பேனாக்கள் (பவுண்டன் பேனாக்கள்) செய்யவும் கூட 'எபோனைட்' பயன்படுகிறது.

ரப்பரின் கூட்டுதல் நிகழ்ச்சியின்போது கந்தகம் தவிர, வெண் களிமண், மிகச் சன்னமான கரி போன்றவை நிரப்பிகளாக (பில்லர்ஸ்) சேர்க்கப்படும். இதனால் ரப்பரின் அளவு கூடுவதால், உற்பத்திச் செலவு குறையும்.

வண்ணப் பொடிகளை வல்கனாக்கப்பட்ட ரப்பருடன் சேர்ந்து ரப்பருக்குத் தேவையான வர்ணம் ஊட்டப்படுகிறது. டைட் டேனியம் ஆக்ஸைடு வெண்மை நிறத்துக்கும், குரோமியம் ஆக்ஸைடு பச்சை நிறத்துக்கும், ஈய குரோமேட் மஞ்சள் வண்ணத்துக்கும், ஃபெரிக் ஆக்ஸைடு சிவப்பு வண்ணம் ஊட்டவும் பயன்படுத்தப்படுகின்றன.

ரப்பருக்கு உறுதி அளிக்க மிகச் சன்னமான கரித்தூள், பேரியம் சல்பேட் போன்ற பலப்படுத்தும் பொருள்கள் சேர்க்கப்படு கின்றன. கரித்தூள் சேர்க்கப்படுவதனால்தான் பெரும்பாலும் ஊர்திகளின் ரப்பர் டயர்கள் கறுமையாக உள்ளன.

பலவகை அளவுகள் கொண்ட துளைகளின் வழியாக கூட்டப்பட்ட ரப்பர் கலவையை அழுத்தத்தில் செலுத்தி ரப்பர் குழாய்கள் பல அளவுகளில் பெறப்படுகின்றன.

ஊர்திகளின் டயர்கள், பொம்மைகள் ஆகியவற்றைத் தயாரிக்க கூட்டப்பட்ட ரப்பர் தகுந்த அச்சுகளில் (மோல்டு) நிரப்பப்பட்டு, அதிக வெப்பம், அழுத்தம் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்



படுகிறது. இந்த அச்சுகளின் வடிவத்தில் திடமான ரப்பர் பொருள்கள் உண்டாகின்றன.

கடற்பஞ்சு போன்ற மிருதுவான நுரை ரப்பர் (ஃபோம் ரப்பர்) கூட்டப்பட்ட லேடக்ஸுடன் பொட்டாசியம் ஓலியேட் எனும் நுரையூட்டும் பொருளையும் சோடியம் ஃப்ளூரோ சிலிகேட் போன்ற ஊன் ப்சையாக்கும் பொருளையும் கலந்து, இக் கலவையை நுரை அடங்குமுன் வார்ப்புகளில் இட்டு வல்கனாக்கி தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய ரப்பர் துளைகள் மிகுந்து இருப்பதால் மிக மிக மிருதுவாகவும், அமுங்கும் தன்மை கொண்டதாகவும் இருக்கும். சோஃபாக்கள், மெத்தைகள், தலையணைகள் மற்றும் கார்களின் இருக்கைகள் நுரை ரப்பர் கொண்டு செய்யப்படுவதால், பயனீட்டாளருக்கு அதிக சுகத்தை இவை அளிக்கின்றன.

இயற்கை ரப்பரின் உற்பத்தி அளவை விட, ரப்பரின் தேவை இன்று மிக அதிகரித்துள்ளதால், ரப்பருக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய, ரப்பர் போன்ற பல செயற்கைப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

இவை ரப்பரைப் போலவே மீள் சக்தி பெற்றிருப்பதால் இவை 'செயற்கை ரப்பர்' என அழைக்கப்படுவதற்குப் பதிலாக, 'எலாஸ்டமர்கள்', அதாவது மீள் சக்தி உடையன என பொதுவாக அழைக்கப்படுகின்றன.

பலவகை வேதிப் பொருள்களைக் கலந்து இவை தயாரிக்கப் படுகின்றன. வேதிப் பொருள்களின் அளவுகளைக் கூட்டியும் குறைத்தும் நமக்குத் தேவையான பண்புகளைப் பெற்ற

எலாஸ்டமர்கள் இன்று தயாரிக்கப்படுகின்றன. சில பண்புகளில் இவை இயற்கை ரப்பரை விடவும் சிறந்தவையாக உள்ளன.

பூனா எஸ், பூனா என், தியோக்கால், ரியோப்பிரீன், ப்யூட்டில் ரப்பர் போன்ற பல பெயர்கள் கொண்ட இவ்வகை எலாஸ்டமர்கள் இன்று உபயோகத்தில் உள்ளன. இரண்டாம் உலகப் போர் சமயத்தில் இயற்கை ரப்பர் விளையும் நாடுகள் பல, நேச நாடுகள் வசம் இருந்ததால், ஜெர்மனி மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அவற்றின் ஊர்களுக்குத் தேவைப்பட்ட ரப்பர் போதுமான அளவு கிடைக்கவில்லை. அப்போது அந்நாட்டு விஞ்ஞானிகளின் விடாமுயற்சியாலும், கடும் உழைப்பினாலும் இத்தகைய மாற்றுப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன். இவற்றின் விலை மலிவு.

எனவே, இப்போது கூட இவ்வகை எலாஸ்டமர்களை நாம் பல வகையில் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டாக 'பூனா எஸ்' கால்ணிகள், ஊர்திகளின் டயர்கள் செய்யவும், எண்ணெய்த் தொட்டிகளின் உட்புறப் பூச்சாகவும் பயன்படுகிறது. தியோக்கால் மின் கம்பிகளுக்குக் காப்பான் ஆகவும், காஸ்கெட்கள் தயாரிக்கவும் உதவுகிறது. ப்யூட்டில் ரப்பர் வாயுக்களைக் கசிய விடாத தன்மை பெற்றிருப்பதால் ஊர்திகளின் டியூப்கள் தயாரிக்க மிகுந்த அளவில் பயன்படுகிறது.

தொழிலங்களின் ரப்பர் கழிவுகள், கிழிந்த அல்லது உடைந்து போன ரப்பர் பொருள்கள் ஆகியவற்றை சோடியம் ஹைடிராக்ஸைடு கரைசலுடன் கொதிக்க வைப்பதன் மூலம் அவற்றிலுள்ள ரப்பரை மீட்க முடியும். இப்படி மீட்கப்பட்ட ரப்பர், புதிய ரப்பர் கலவையுடன் கலக்கப்பட்டு, தரத்தில் சற்று குறைவான ரப்பர் பொருள்கள் செய்யப்படுகின்றன. பெரும் பாலும் ரப்பர் வளையங்கள் (ரப்பர் பேண்டு), ஒட்டுவதற்கான பசைகள் (அடிசிவ்ஸ்) தயாரிக்க இது பயன்படுகிறது.

ஒரு மரத்தின் பிசினைக் கொண்டு தயாரிக்கப்படும் ரப்பரின் இத்தனை சிறப்புகளையும், பலன்களையும் எண்ணுகையில், மனித முயற்சியால் ஆகாதது எதுவுமில்லை என உணர்கிறோம்.

எனவே, ரப்பருக்கு மட்டுமன்றி, உலகுக்கு அதை அறிமுகப் படுத்திய கொலம்பஸுக்கும்கூட நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். ○

# முதலிலேயே விலகிவிட்டேன்

வித்வான் வே. லட்சுமணனின் எதிர்பாராத மறைவிற்குப் பிறகு எனக்கு எதிலும் நம்பிக்கை குறைந்து வருகிறது. நம்பிக்கை என்று ஒன்றிருந்தால்தான் பற்று, பாசம், அன்பு, ஆசை, எதிர்பார்ப்பு எல்லாம் இருக்கும். நம்பிக்கை ஏன் குறைகிறது? எதிர்பார்த்த செயல் ஏதும் நடக்காத காரணத்தால் இருக்குமா? பணவரவு போதவில்லையா? புகழும், பதவியும், வெற்றியும் நினைத்தபடி நடக்கவில்லையா; கிடைக்கவில்லையா?

அவையெல்லாம் இல்லை. பதவி, பரிசு, பணம் இவற்றை நான் நினைப்பதில்லை. கிடைக்குமென்று எதிர்பார்ப்பதுமில்லை. கிடைக்காது, வராது, நடக்காது என்றுதான் நினைப்பேன். எதிர் மறையாக ஆகிவிட்டால் வருத்தம் வராது. நடந்து விட்டாலோ, வெற்றி ஏற்பட்டு விட்டாலோ சாதாரணமாகவே ஏற்பேன்.

'நடக்கும் என்பார் நடக்காது; நடக்காது என்பால் நடந்துவிடும்' என்ற பாடல் என்வரையில் உண்மை.

'உன் வாழ்க்கைத் தத்துவத்திற்கும் நம்பிக்கைக் குறைவுக்கும் என்ன தொடர்பு? தனிப்பட்டவருக்கு ஏற்படும் விளைவுகளைக் கொண்டு, பொதுவாக முடிவு செய்யக்கூடாது' என்று நீங்கள் சொல்வது, கேட்கிறது.

நம்பிக்கை குறையக்கூடாதுதான். முயற்சியுடையவர்கள், இறை நம்பிக்கையுடையவர்கள், நல்லதே நினைப்பவர்கள்... நம்பிக்கை மீது அழியாத நம்பிக்கை வைக்க வேண்டும். ஆம்; ஒப்புக் கொள்கிறேன். நானும் அப்படித்தான். இதுவரை நம்பிக்கை மீது நம்பிக்கை கொண்டிருந்தேன். 'சாவு', 'மரணம்' ஏற்படுவதால் உலகத்தின் மீது பற்று கொள்வதனின்று நழுவி விடக் கூடாது.

'இன்றைக்கிருப்பவர் நாளைக்கு இல்லை என்ற பெருமையுடையது இவ்வுலகம்' என்று வள்ளுவர் கூறினாலும், நாளையைப் பற்றி நமக்குத் தெரியாது என்றாலும் நம் அன்றாட வாழ்க்கையை அனுபவிக்காமல் விட்டு விடுவதில்லை.

'இப்படியும் சொல்கிறீர்களே... அப்படியும் சொல்கிறீர்களே?' என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், பத்தாண்டுகளாகவே படிப்படியாக நம்பிக்கை குறைந்து வருவதை நான் உணர்கிறேன். எதிர்பாராத அதிர்ச்சி ஏற்படும்போது, நம்பியவர் கெடுதலைச் செய்யும்போது, குடிலன்கள் அருகே இருப்பதை அறியாதபோது வேறு எப்படித்தான் நினைப்பது?

வித்வான் வே. லட்சுமணன் மறைவுச் செய்தியைக் கேட்டபோது மனத்தில் இறங்கிய இடி முதலில் கூறிய 'நம்பிக்கை' அஸ்திவாரத்தை உலுக்கத் தொடங்கிவிட்டது.

நீண்ட நாள்களாக நோய்வாய்ப்பட்டிருப்பவர்கள், மரணத்துடன் போராடுபவர்கள், மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்கள் மறையும் போது அவ்வளவு அதிர்ச்சி ஏற்படுவதில்லை. ஆனால், சென்ற நான்கைந்தாண்டுகளாக அடையும் அதிர்ச்சியைச் சொல்லில் வடிக்க முடியவில்லை.

எவ்வளவோ நண்பர்கள் மறைந்திருக்கிறார்கள். 'ஐயோ அப்படியா?' என்று ஒருகணம் வருத்தப்படுமளவுக்கு மட்டும் அறிமுகமானவர்கள் காலமாகியிருக்கின்றனர். ஆனால், இங்கே குறிப்பிடும் என் உயர் நண்பர்கள் மரணம் என்னைப் பாதித்து விட்டது.

கல்கி, ஏ.கே. செட்டியார், பொ. திருகூடசுந்தரம், சின்ன அண்ணாமலை, விந்தன், சாண்டில்யன், ம.பொ.சி. மறைந்தபோது மனம் வருந்தினேன். ஈடு செய்ய முடியாத இழப்பு என்று மட்டும் எழுதி, பேசியதோடு நின்றேன்.

ஆனால், எஸ். வேங்கடசுப்பிரமணியம் என்றழைக்கப்பட்ட 'ஜெயரதன்', நா. ராமச்சந்திரன், ஆடிட்டர் இராஜகோபாலன், குன்றக்குடி பெரியபெருமாள் இறந்த செய்தி கேட்டபோது பாதிப்பு ஏற்படத் தொடங்கியது. மேலே குறிப்பிட்டவர்கள் இறந்து விடுவார்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

அதிலும் வித்வான் வே. லட்சுமணன் அகால மரணம் என்னைப் பெரிதும் பாதித்துவிட்டது. அதனால்தான் இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் 'நம்பிக்கை இழந்தேன்' என்று புலம்பத் தொடங்கினேன்.

பத்திரிகை உலகில் எனக்கு ஒரு தகுதியை ஏற்படுத்தக் காரணமானவர் வித்வான் என்று சென்ற கட்டுரைகளிலேயே சொன்னேன். வேப்பத்தூரில் என் நண்பர் ஸுபா திருமணத்தில் முடிவு

செய்து என்னை 'அமுதசுரபி'யில் சேருமாறு பணித்தார்.

1948ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் நாள் காலையில் மேலே கதர்த் துண்டை அணிந்து கொண்டு, சென்னை, உயர் நீதி மன்றம் எதிரிலுள்ள சுங்குராம செட்டி தெரு, ஏழாம் எண் கட்டடத்திற்குள் நுழைந்தேன்.



ஓவியர் ஸுபா

'அமுதசுரபி' என்ற பெயர்ப் பலகையும், 'ராஜன் எலெக்ட்ரிக் பிரஸ்' என்ற பெயர்ப் பலகையும் தாங்கி நின்ற அந்தக் கட்டடத்திற்குள் பலமுறை சென்றிருந்தாலும் 'அமுத சுரபி' இலக்கியப் பத்திரிகை அலுவலகத்திற்குள் அன்று நுழையும் போது பயபக்தி ஏற்பட்டது.

பெரிய மேஜை எதிரே உரிமையாளர் திரு. டி.கே. சாமி உட்கார்ந்திருந்தார். உள்ளே தள்ளு கதவின் பின்புறம் விசாலமான கூடத்தில் அச்சு இயந்திரங்கள் 'தடால்... தடால்' என்ற ஓசையை எழுப்பி இயங்கிக் கொண்டிருந்தன.

வண்ண அட்டைகளை அச்சிடும் டிரெடிலை, அச்சுத் தொழிலாளி காலால் மிதித்து இயக்கிக் கொண்டிருந்தார். அதற்குப் பின்பக்கக் கூடத்தில் பெரிய வெட்டு இயந்திரம் (கட்டிங் மிஷின்) 'சர், டக்' என்று காகிதத்தை இரண்டாக - நாலாக வெட்டுவதுடன், புத்தகத்தின் மூன்று ஓரங்களையும் மழமழவென்று வழித்துத் தள்ளுவதையும் செய்து கொண்டிருந்தன. வெட்டப்பட்ட துண்டுகள் (ஜல்லி) மலை போல் குவிந்து கொண்டிருந்தன. அச்சடித்த பக்கங்களை ஓர் ஓரமாக சிறுவர்கள் மடித்துக் கொண்டிருந்தார்கள். அது பைண்ட் செய்யப்படும் கூடம்.

டி.கே. சாமிக்கு 'வணக்கம்' தெரிவித்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

டி.கே. சாமி என்றழைக்கப்படும் டி. கிருஷ்ணசாமி முதலியார் மலர்ந்த முகத்துடன் என்னை வரவேற்றார்.

''நீங்கள் வருவீர்கள் என்று ஆசிரியர் சொன்னார்'' என்று மலர்ந்த முகத்துடன் பேசினார். பதிவு செய்யப்பட்ட ஆசிரியர் அவர். ஆனால் வே. லட்சுமணனை ஆசிரியர் என்றே அழைத்தனர். அவர் அருகே அவர் இளவல் டி.கே.எஸ். மணியம் அமர்ந்திருந்தார்.

இளமை ததும்பும் முகம். தூய கதராடை. அச்சக நிர்வாகத்தின் பெரும்பகுதி அவருடையது. ''ராகுகாலம் ஒன்றும் இல்லையே'' என்று டி.கே. சாமி கேட்டு விட்டு, தன் சகோதரரைப் பார்த்து ''சாருக்கு மேஜை, நாற்காலிக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறிவிட்டார்.

பள்ளி இறுதி வகுப்பை முடித்து விட்டு நான் வேலை தேடிச் செல்வது, இது மூன்றாவது இடம்.

முதன்முதலில், ஸ்பென்ஸர் கம்பெனிக்கு விண்ணப்பம் அனுப்பினேன். மிக மும்முரமான போர்க்காலம். போர், ஒரு முடிவுக்கு வரும் தருணம். பொருள் தட்டுப்பாடு அதிகம். யுத்த பீதி குறையவில்லை. இந்தியாவுக்கு விடுதலை பெறப் பல முனைகளிலும் காங்கிரஸ் கட்சி முயன்று கொண்டிருந்தது.

என் தந்தை இறந்து ஓராண்டாகி விட்டது. என் தாய்மாமன் உதவியை எவ்வளவு காலம் எதிர்பார்க்க முடியும்? பல்வேறு இடங்களில் வேலைக்கு முயன்றேன். எனக்காகப் பலர் பல்வேறு இடங்களில் சிபாரிசு செய்தனர்.

சென்னை மெடிக்கல் ஸ்டோர்ஸ், பி ஆர் அண்ட் சன்ஸ், பாரி கம்பெனி, சிம்ஸன் கம்பெனி, மிலிடரி கணக்கு தணிக்கை இலாகா... இப்படி வருமானத்திற்கு வழி தேடுவது ஒருபுறம். மறுபுறம் இலக்கியத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டேன். பள்ளியில் எனக்கு அறிமுகமான ஸூபா அவர்களுடன் சேர்ந்து 'தமிழ்ச்சுடர்' இதழை மிகச் சிறப்பாக நடத்தி வந்தேன்.

விண்ணப்பம் அனுப்பியதில் பலன் ஏதுமில்லை. அந்தப்போதில் சென்னையில் மவுண்ட்ரோடில் (இப்போது அண்ணாசாலை) பிரபலமான ஸ்பென்ஸர் கம்பெனியில் குமாஸ்தா பதவிக்கு விண்ணப்பம் பெற்று நியமிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். சைதாப்பேட்டையினின்று என் நண்பர்கள் சிலருக்கு விண்ணப்பம் அனுப்பிய மறுநாளே வேலையில் சேருமாறு உத்தரவு வந்து விட்டது.

நானும் உடனே விண்ணப்பம் அனுப்பினேன். ஒரு வாரமாகியும் பதிலில்லை. விசாரித்ததில் சைதாப்பேட்டையிலிருந்து ஏழெட்டு பேருக்கு வேலை கொடுக்கப்பட்டதால், சைதாப்பேட்டையில் வசிப்பார்கள் விண்ணப்பத்தைக் கவனிக்காமல், 'கட்டி' வைத்து விட்டார்கள் என்று சொன்னார்கள்.

நான் ஒரு யோசனை செய்தேன்.

என் நண்பர் ஸுபா தாம்பரத்தில் வசித்து வந்தார். கிழக்குத் தாம்பரத்தில் அவர் வீடு, அவர் தந்தை நாராயண அய்யர் மளிகை வைத்து நடத்தி வந்தார். எனவே, என்னுடன் மிக நெருங்கிப் பழகி வரும் ஸுபாவின் வீட்டு முகவரி கொடுத்து, விண்ணப்பம் ஒன்று அனுப்பினேன்.

விண்ணப்பம் அனுப்பிய மூன்றாவது நாள் ஸுபா, கையில் ஓர் கவருடன் முக மலர்ச்சியுடன் என் வீட்டிற்கு வந்தார். ஸ்பென்ஸர் கம்பெனியிலிருந்து வந்திருந்தது. மறுநாளே நேர்முகப் பேட்டிக்கு வருமாறு அதில் கண்டிருந்தது.

மவுண்ட் ரோடிலுள்ள அலுவலகங்கள் அநேகமாக காலை எட்டரைக்குத் தொடங்கி மாலை ஐந்தரை வரை இயங்கும். காலை எட்டரைக்கே நான் ஸ்பென்ஸர் கம்பெனிக்குச் சென்றேன்.

என்னை வேலைக்கு நியமிக்கும் முன்பு 'இன்டர்வியூ' செய்ய விருந்த, பிரதம கணக்காளர் முன் போய் நின்றேன். அவர் பெயர் தில்லான். கிறிஸ்தவர். இனிய சுபாவமுடையவர்.

என் விண்ணப்பத்தைப் பார்த்தார். மேஜை மீது ஏராளமான விண்ணப்பங்கள் இருந்தன. என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். அரைக்கைச் சட்டை, நாலு முழ வேட்டி. மேலே துண்டு அணியவில்லை.

வெள்ளைக்காரர் நிறுவனத்தில் கோட் - சூட் அல்லது பைஜாமா, டை, காலில் பூட்ஸ் சகிதம் செல்ல வேண்டும். என் காலில் செருப்பு இல்லை. பல ஆண்டுகள் நான் செருப்பு அணியாததற்குக் காரணம், வாங்க வசதியில்லாததுதான்.

நல்ல செருப்பு அணிய வேண்டும் என்ற என் பிள்ளைப் பிராய ஆசையை, என் உறவினர் ஒருவர் முளையிலேயே கிள்ளி விட்டார்.

யுத்த காலத்தில் விடுமுறையின்போது விழுப்புரத்தில் உறவினர் வீட்டிற்குச் செல்வேன். அங்கே வந்திருந்த மற்றோர் உறவினர் என் காலில் செருப்பு இல்லாததைக் கவனித்து செருப்பு வாங்கித் தருவதாக கடைத் தெருவுக்கு அழைத்துச் சென்றார்.

விழுப்புரம் கடை வீதியிலுள்ள எல்லா செருப்புக் கடைகளிலும் ஏறி இறங்கினார். எனக்கு அலுப்பு ஏற்பட்டது. தனக்கு நல்ல செருப்பை வாங்கிக் கொண்டார். 'உன் காலுக்கு எதுவும் சரியாக அமையவில்லை' என்று கூறிவிட்டு, 'அடுத்த முறை வரும்போது

வாங்கித் தருகிறேன்; இந்த முறை உனக்கு அதிர்ஷ்டமில்லை' என்று கூறினார்.

என் மனத்தில் அந்தப் 'பொன் மொழிகள்' பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தின. நான் செருப்பின் மீதிருந்த ஆசையை விட்டு விட்டேன். வெயில், மழை எதுவாயினும் என் பாதங்கள் மிதியடியைத் தழுவவில்லை.

என்னைப் பார்த்து, கணக்காளர் பெயர் கேட்டார், படிப்பு பற்றி விசாரித்தார். உயர்நிலைப் பள்ளியில் விருப்பப்பாடமாக 'புக் கீப்பிங்' எடுத்திருந்தேன். அது இன்றைய 'பி.காம்' படிப்புக்குச் சமம்.

'டபுள் என்ட்ரி என்றால் என்ன தெரியுமா?' என்று கேட்டார். டெபிட், கிரடிட், அஸெட்ஸ், லையாபலிட்டிஸ், ப்ரீபெய்ட், எக்ஸ்பென்ஸஸ் பற்றிக் கேட்டார். வியாபாரக் கணக்குப் பாடத்தின் அடிப்படையான மூன்று மந்திரங்களை வினவினார். பளிச்சென்று பதில் சொன்னேன். பிறகு என் குடும்ப நிலையைப் பற்றி விசாரித்தார். ''ஏன் தாம்பரத்தில் இருந்து விண்ணப்பத்தை அனுப்பினாய்?'' என்று கேட்டார். மிகச் சாதுர்யமான கேள்வி. அவர் கேள்வியின் நோக்கத்தைப் புரிந்து கொண்டேன்.

''தாம்பரத்தில் வசிக்கிறேன். அதனால் அங்கிருந்து அனுப்பினேன்.''

''அலுவலகத்துக்குக் காலை எட்டரை மணிக்கு வந்தாக வேண்டும். தாம்பரம் என்றால் காலை ஆறு மணிக்கே புறப்பட வேண்டுமே?'' என்றார்.

''என்னால் முடியும் ஐயா. இந்த வேலை கிடைத்து சம்பளம் வாங்கித்தான் வருகிற மாதம் என் குடும்பத்தை நடத்த வேண்டும். என் தாயைக் காப்பாற்ற வேண்டும்'' என்றேன்.

அவர் சிரித்தார். ''பொதுவாக வெளியூரிலிருந்து வரும் விண்ணப்பங்களைக் கவனிப்பதில்லை. ஆனால், நீ சைதாப்பேட்டையிலிருந்து விண்ணப்பம் அனுப்பியது நினைவுக்கு வந்தது'' என்றார், என்னை ஆராய்வது போல பார்த்து.

நான் வியப்புற்றேன். ''எப்படிக் கண்டுபிடித்தேன் என்று நினைக்கிறாயா?'' என்று கேட்டு, முன்பு நான் அனுப்பி 'தள்ளுபடி' செய்யப்பட்ட விண்ணப்பத்தையும் கையிலெடுத்தார். நான் அதிர்ச்சியடைந்தேன்.

ஒரே மாதிரியான கையெழுத்து. எல்லாவற்றையும் விட ஒரே நிற மை.

வண்ண 'இங்க்'குகளை பயன்படுத்துவதில் எனக்கு வேட்கை அதிகம். 'வையலட்' வண்ண 'இங்க்'கில்தான் எல்லாம் எழுதிக் கொண்டிருந்தேன்.

''தாம்பரத்திலிருந்து வந்த உன் விண்ணப்பத்தைப் பார்த்தவுடன் எனக்கு மனத்தில் பளிச்சிட்டது. இந்தக் கையெழுத்து, இதே இங்க்கை பார்த்து அந்த விண்ணப்பத்தைத் தேடி எடுத்தேன். ஒப்பிட்டேன். சைதாப்பேட்டையிலிருந்து அனுப்பிய விண்ணப்பத்திற்கு நேர்முக அழைப்பு கிடைக்கவில்லை என்றவுடன் இப்படி ஒரு தந்திரம் செய்தாயா?'' என்று கேட்டார்.

நான் மிகவும் பயந்து போனேன். சாமர்த்தியம் என்று நினைத்து செய்த தவற்றை அவர் கண்டுபிடித்து விட்டாரே!

''மிஸ்டர் வேம்பு! கவலைப்படாதே. உன்னைப் பற்றி உன் ஊரிலிருந்து வருபவர்களிடம் விசாரித்தேன். சைதாப்பேட்டையில் நீ பாப்புலராம். மிகவும் ஏழைமையான குடும்பமாம். சுறுசுறுப்பு மிக்கவராம். அதனால், நேர்முகப் பேட்டிக்கு அழைத்தேன். உன் தகுதியைப் பற்றியும் கேள்விப்பட்டேன். 'பாஸ்' செய்து விட்டாய். இன்று முதல் உனக்கு இங்கு வேலை. இருபது ரூபாய் சம்பளம். 'இன்வாய்ஸ்' டிபார்ட்மெண்ட் என்றழைக்கப்படும் - மேல் நாட்டுப் பண்டங்களைக் கப்பலிலிருந்து இறக்குமதி செய்வதற்கான பட்டியலைச் சரிபார்க்கும் வேலை. திறமையுடன் சுறுசுறுப்பாக இயங்கு வாழ்த்துகள்'' என்றார்.

இரண்டாண்டுகள் ஸ்பென்ஸர் கம்பெனியில் பணியாற்றினேன். அந்தக் கட்டடத்திலுள்ள அத்தனை துறை உயரதிகாரிகளுடனும் பழகினேன்.

என் இலக்கியத் தாகம் ஸ்பென்ஸரை விட்டு விலகுமாறு செய்தது. அங்கிருந்த போது தமிழ்நாடு கையெழுத்துப் பத்திரிகையாளர்கள் சங்க மாநாட்டை 'கல்கி' துணையாசிரியர் நாடோடி தலைமையில் நடத்தினேன்.

சென்னையிலுள்ள பாரதி சங்கங்களைச் சேர்த்து 'பாரதி சங்கங்கள் சம்மேளனம்' என்ற சங்கத்தைத் தொடங்கி, அதன் விழாவை சிலம்புச் செல்வர் ம.பொ.சி. தலைமையில் (இப்போது 'தினகரன்' பத்திரிகை இருக்கும் கச்சேரி சாலை அலுவலகத்தில்) நடத்தினேன்.

தியாகி இராம சடகோபன், ம.பொ.சி. தலைமையில் 'அஹிம்சா சமதர்ம, சோஷலிஸக் குடியரசு கட்சி!' என்ற சேராவுடன் இணைந்து (இன்று குமாரவாடி இராமானுஜாச்சர்ய சுவாமிகள்) அமைப்பை திருவல்லிக்கேணியில் தொடங்கினேன். (இது பற்றி சிலம்புச் செல்வர் பற்றிய நினைவுகள் எழுதும் போது குறிப்பிடுகிறேன்).

அதனால் என் இலக்கியத் தாகத்திற்கு ஸ்பென்ஸர் ஒத்துழைப்பு தராது என்று முடிவு செய்து ஒரே நாளில் விலகி 'வெள்ளி மணி'யில் சேர்ந்தேன். (என் ராஜினாமாவை ஏற்க முடியாது என்று வெள்ளைக் காரத் துரை சுணங்காமல் கூறிவிட்டார். பிராவிடண்ட் பண்டில் பிடித்த தொகை எட்டு ரூபாய் சொச்சம். அதையும் தருவதற்குத் தடை விதித்தார். பிறகு மணியார்டர் மூலம் எனக்கு அனுப்பப்பட்டது).

ஸ்பென்ஸருக்குப் பிறகு, 'வெள்ளி மணி'. இந்த அனுபவத்தை முன்பே எழுதி விட்டேன். 1948இல் 'அமுதசுரபி' அலுவலகம்.

எந்த அலுவலகத்தில் 52 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி னேனோ, எந்த அலுவலத்தில் ஆசிரியராக அமர்ந்தேனோ, எந்த அலுவலகத்தைச் சொந்தமாக விலைக்கு வாங்கி நடத்தினேனோ, எந்த அலுவலகத்தின் உயர்வுக்கு உடல், பொருள், (உயிர்த் தியாகமில்லை) தியாகம் செய்து சிறந்த இலக்கியப் பத்திரிகையாக உயர்த்தினேனோ, எந்த அலுவலகத்திலிருந்து அவமானம் ஏற்படுவதனின்று தப்பி... எந்தவித வழியனுப்பு பாராட்டும் நன்றியும் இல்லாமல் 2002 ஜூலையில் வெளி வந்தேனோ... அந்த 'அமுதசுரபி' அலுவலகத்திற்கு 1948ஆம் ஆண்டு செப்டம்பர் காலை பத்து மணிக்குச் சென்றேன். மாலை ஐந்து மணிக்கு மேல் துண்டை மடித்துப் போட்டுக் கொண்டு 'இந்த அலுவலகத்தில் சேரப் போவதில்லை' என்ற உறுதியுடன் வெளியே வந்தேன்.

என்னை புன்முறுவலுடன் நியமித்த திரு. டி.கே. சாமி அவர்களுக்கு, 'நான் ஏன் அமுதசுரபியில் தொடர விரும்பவில்லை?' என்ற காரணங்களை 4 பக்கங்கள் எழுதி தபாலில் அனுப்பி விட்டு, மீண்டும் சின்ன அண்ணாமலை எதிரே போய் நின்றேன்.

மறுநாள் வித்வானும், நண்பர் ஸுபாவும் எரிமலை போல் கோபத்தைக் க்கினர்.

நான்கு மாதங்களுக்குப் பிறகு நான் மீண்டும் 'அமுதசுரபி'யில் சேர்ந்த சம்பவங்களை இப்போது மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். அதை...

பிறகு சொல்கிறேன்...

# விந்தன் கதைகள்

## டாக்டர் மு. வரதராசன்



'பொழுது' என்ற ஒன்று இருப்பதை என்றைக்கு மனிதன் தெரிந்து கொண்டானோ, அன்றைக்கே பொழுது போக்கும் வழிகளையும் தெரிந்து கொண்டான். கலை என்று சொல்லப் படுகின்றவையெல்லாம் முதலில் பொழுது போக்குக்காகத் தோன்றியவையே. கலைகளில் சிறந்த கதையும் இப்படித் தோன்றியதே. கதை சொல்லிக் குழந்தையைத் தூங்க வைக்கும் தாயார், கதை சொல்லிக் குழந்தையின் மனத்தைத் திருத்தி வாழ்க்கையைப் பண்படுத்தவும் முயல்வதுபோல், பொழுது போக்குக்காக தோன்றிய கலைகளையே வாழ்க்கைப் பண்பாட்டுக் காகவும் சான்றோர் கையாளத் தொடங்கினார்கள். அது முதற் கொண்டே, புற்றீசல் போல் பொழுது போக்குக்காகத் தோன்றிய கலைகள், விண்மீன்கள் போல அழியாத வாழ்வு பெறலாயின. கல்லிலும் சொல்லிலும் பிறவற்றிலும் நிலைத்து நின்று தலைமுறை தலைமுறையாக நூற்றாண்டு நூற்றாண்டாக வாழ்வு பெற்றன.

சொல் வடிவாக வாழும் கலைகளுக்குத் தனிப்பட்ட பெரிய ஆற்றல் உண்டு. வாழ்வுக்காகக் கொண்ட வில்லையும், வாழ்க்கைப் பண்பாட்டுக்காகக் கொண்ட சொல்லையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் ஒரு சிறந்த உண்மையை உணர்த்துகிறார். வில்லைக் கருவியாகக் கொண்டவர்கள் பகையானாலும் கவலை இல்லை; சொல்லைக் கருவியாகக் கொண்டவர்களின் பகை பொல்லாதது என்கிறார்.

*'வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க*
*சொல்லே ருழவர் பகை.'*

என்று அறிவுரை கூறுகிறார். இந்த அறிவுரை அரசனுக்குக் கூறப் பட்டது என்று விட்டுவிடக் கூடாது. அரசன் என்று ஒருவன் இல்லாத குடியரசு முறைக்கும் இந்த அறிவுரை பொருந்தும். சமூகம் என்ற அமைப்புக்கும் இந்த அறிவுரை பொருத்தமுடையதே.

கவிதையாலும் கதையாலும் கலைத் தொண்டு செய்யும் சொல்லாளரின் - எழுத்தாளரின் - பகையைக் கொண்ட அரசன்

அழிவது போலவே, அவர்களின் பகையைத் தேடிக் கொண்ட சமூக அமைப்பும் அழியும். இன்றுள்ள சமூக அமைப்பு நீடிக்காது, விரைவில் மாறிவிடும் என்பதற்குச் சோதிடம் கேட்க வேண்டிய தில்லை. சொல்லேருழவராகிய இன்றைய தமிழ் எழுத்தாளரின் கவிதைகளையும், கதைகளையும் படித்தால் போதும். 'திருவள்ளு வரின் அறிவுரையைக் கேட்டுத் திருந்தாத சமூக அமைப்பே! நீ நிலை குலைந்து அழியப் போகிறாயே!' என்று இரக்கம் பிறக்கிறது.

'விந்தன்' எய்யும் சொல்லம்புகள் குறி தவறாமல் பாய்கின்றன. சமூகத்தை அவர் சிற்சில இடங்களில்தான் நேராகத் தாக்குகிறார். பல இடங்களில் அவர் அம்பு தொடுப்பதே இல்லை. இன்றிருக்கும் நிலைமையை எடுத்துக்காட்டி, பேசாமல் கதை சொல்கிறார். அவர் படைக்கும் பாத்திரங்களும் பெரும்பாலும் 'அப்பாவி'களே. அவர்களுக்குச் சமூகத்தின் மேல் வயிற் றெரிச்சல் தோன்றுவதே இல்லை. ஆனால் நமக்கு மட்டும் வயிற்றெரிச்சல் தோன்றுகிறது; ஆத்திரம் பொங்குகிறது; நாயோடு போட்டி போட்டுப் பிழைக்கும் சோலையப்பன், மாம்பழம் விற்று வயிறு வளர்க்கும் அம்மாயி, விளக்கெண்ணெய் வியாபாரம் செய்யாத நாடார் கடை மாணிக்கம் பிள்ளை... இவர்களுடைய மனங்கள் எல்லாம் அமைதியாக நல்ல மனங்கள். ஆனால், அவர்களைப் பற்றிப் படிக்கும் மனங்கள் புரட்சி மனங் களாக மாறுகின்றன.

சில இடங்களில் ஆசிரியர் கையாளும் உவமைகளும் சமூகக் கேட்டுக்குக் காரணமானவர்களை வம்புக்கு இழுப்பதைப் பாருங்கள்.

*'தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்து விட்டவர் களைப் போல் ''போடா, போ!'' என்று எரிச்சலுடன் அவனைப் பிடித்துத் தள்ளி விட்டான் சங்கர்.*

*அவனைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது - சூரியனைக் கண்ட தாமரையைப் போல் அல்ல; சோற்றைக் கண்ட ஏழையைப் போல.*

*அவர் தம்முடைய காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு நைவேத்தியத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் கல்லுப் பிள்ளையாரைப் போல் உட்கார்ந்திருப்பார்.'*

ஆசிரியரின் கதைகளில் கறவை மாடு குடும்பத்துக்குக் 'கார்டியன்' ஆகிறது; கிளி 'கைது' செய்யப்படுகிறது; குப்பைத் தொட்டிக்கும் வேலைக்காரியின் வயிற்றுக்கும் உள்ள வேற்றுமை

மறைந்து போகிறது; சந்தர்ப்பங்களைத் தானே ஏற்படுத்திக் கொள்வதில் தமிழ்நாட்டு 'மாமியார்' நெப்போலியனுக்கு நிகராகிறாள்; வாழ்வதற்காகப் பிரார்த்தனை செய்வதை விடச் சாவதற்குப் பிரார்த்தனை செய்வது கட்டாயமாகிறது; கூடைக் காரியாக வியாபாரம் செய்கிறவள் அரிச்சந்திரனைப் பின்பற்ற விரும்பித் தோல்வி அடைந்த பின் புதிய வழி காண்கிறாள்.

பொருளாதார ஏற்றத் தாழ்வு என்ன என்ன தீமைகளைச் செய்கிறது என்பதை ஆசிரியர் பல இடங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார். குழந்தைகளின் வாழ்க்கை முதல் காதலர்களின் வாழ்க்கை வரையில் எல்லாருடைய வாழ்க்கையையும் பொருளாதார நிலைமை எப்படி எப்படி ஆட்டி வைக்கிறது என்பதை அவருடைய கதைகள் தெளிவாக்குகின்றன. காதல் எதன் மேல், எதுவரையில் என்றெல்லாம் கதைகள் விளக்குகின்றன. கவிதையிலே காவியத்திலே கதைகளிலே சாகாத காதல் வாழ்க்கையிலே பணப் போரில் சாவதை ஆசிரியர் எடுத்துக் காட்டுவது போற்றத்தக்கது. வாழ்க்கையில் உள்ள இத்தகைய உண்மைகளை மறைப்பது குற்றம் என்று ஆசிரியர் உணர்ந்து எழுதுவதற்காக, உலகம் அவருக்கு நன்றி கூற வேண்டும்.

இப்படிப்பட்ட சிறந்த கதைகளைத் தெளிவாக எளிய தமிழில் உணர்ச்சி வேகத்துடன் எழுதிக் கலைத் தொண்டு புரியும் 'விந்தன்' முயற்சி மேன்மேலும் வளர வேண்டும். அவர் ஓயாமல் படித்துவரும் இந்த 'உலகம்' என்னும் புத்தகம் நாள்தோறும் புதிய புதிய உண்மைகளை அவருக்கு உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும்.

சென்னை - 2.1.50

**('விந்தன் கதைகள்' நூலிலிருந்து. வெளியீடு: கலைஞன் பதிப்பகம், 10, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை 600 017)**


**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல். (52)**

குடும்பத்திற்குரிய நல்ல தன்மை மனைவியிடத்து இல்லையானால் குடும்பம் பெருமையடையாது.



**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு (பி) லிமிடெட்

## 1947ஆம் ஆண்டு வெளிவந்த
## 'வேலை நிறுத்தம் ஏன்?' என்ற கட்டுரைகள் தொகுப்பில்

# விந்தனின் முன்னுரை

என்னை 'எழுத்தாளன்' என்று சொல்லிக் கொள்வதை விட 'தொழிலாளி' என்று சொல்லிக் கொள்வதில் நான் எப்பொழுதுமே பெருமையடைபவன். ஏனெனில், என்றைக் காவது ஒருநாள் இந்த நாட்டு அரசியல் - ஏன், உலக அரசியலே கூட - தொழிலாளிகளின் கைக்குத்தான் வந்து சேரப்போகிறதென் பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. அப்படியிருக்கும்போது யார்தான் தன்னைத் 'தொழிலாளி' என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடையாமல் இருக்க முடியும்?

ஆனால், எந்தக் கட்சியையும் நான் சேர்ந்தவனல்ல என்பதை இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். என்றாலும் எந்தக் கட்சி, தொழிலாளிகளுடைய நலனுக்காக தன்னுடைய நேரத்தை அதிகமாகச் செலவிடுகிறதோ, எந்தத் தலைவர்கள் தொழிலாளி களுடைய நலனுக்காகத் தங்கள் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்கிறார்களோ - அந்தக் கட்சியிடம், அந்தத் தலைவர்களிடம் - என்றுமே எனக்கு அனுதாபம் உண்டு.

சமீப காலத்தில், தமிழ்நாட்டில் எழுந்த வேலை நிறுத்தப் போராட்டங்களின்போது என் உள்ளத்தில் எழுந்த எண்ணங் களைத்தான் இந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறேன். ஆனால், என்னுடைய எண்ணங்கள், அபிப்பிராயங்கள்தான் சரியானவை என்று நான் சாதிக்கவில்லை. அபிப்பிராய பேதங்களுக்குச் செவி சாய்க்காத யார்தான் உண்மையான ஜனநாயகவாதியாக வாழ முடியும்?

ஆகவே, இந்தப் புத்தகத்தைப் படிக்கும் நேயர்கள் என்னுடைய அபிப்பிராயங்களை அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்பவில்லை. ஆனால், படிக்கும் நேயர்களின் சிந்தனையை இந்தப் புத்தகம் சிறிதளவாவது தூண்டி விட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். என்னுடைய விருப்பத்தை இந்தப் புத்தகம் எவ்வளவு தூரம் நிறைவேற்றி வைக்குமோ... நான் அறியேன்.

*16.4.1947* **விந்தன்**

# ‘கல்கி’க்கு முதல் நன்றி

என்னுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், வளத்துக்கு நீரூற்றாகவும், அன்புக்கு உறைவிடமாகவும், ஆர்வத்துக்குப் பிறப்பிடமாகவும் உள்ள ஆசிரியர் ‘கல்கி’ அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி முதலில் உரியதாகும். அடுத்தபடியாக என்னுடைய நினைவில் என்றும் நீங்காத இடத்தைப் பெற்றிருப்பவர்கள் தமிழர்கள். பொருளாதாரச் சீர் கேட்டினால் இன்று அவர்களுடைய வாழ்க்கை எத்தனையோ விதமான தொல்லைகளுக்கு உள்ளாகியிருக்கிறது. அத்தனை தொல்லைகளுக்கிடையிலும் நான் எதிர்பாராத அளவு எனக்கு ஆதரவு காட்டிவரும் அவர்களுக்கு நன்றி மட்டுமல்ல; எஞ்சியுள்ள வாழ்நாள்களும் உரியவை.

இன்னும் முகமறிந்த நண்பர்கள் - முகமறியாவிட்டாலும் அகமறிந்த நண்பர்கள் பலர் தென்னாட்டிலும் வட நாட்டிலும் கடல் கடந்த பிரதேசங்களிலும் மூலைக்கு மூலை இருக்கிறார்கள். அவர்கள் என்னுடைய கதைகளைப் படிப்பதோடு வாழ்த்தியும் வைதும் கடிதம் எழுதுகிறார்கள். அதன் மூலம் கூம்பும் உள்ளம் மலர்கிறது; தேயும் நம்பிக்கை வளர்கிறது; செல்லும் பாதை செப்பனிடப்படுகிறது. எந்தவிதமான பிரதிபலனுமின்றி எனக்காக அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரமத்துக்கு என்னுடைய நன்றியையாவது இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்சமயம் தமிழ்நாடு இருக்கும் நிலையில் ஏற்கெனவே ஒரு பிரபல பத்திரிகையில் வெளியான கதைகளைப் புத்தகமாக வெளியிடுவதற்கு அசாத்தியத் துணிச்சல் வேண்டும். அது மட்டுமிருந்தால் போதாது; அளவு கடந்த அன்பும் வேண்டும். அத்தகைய அன்பை என்மீது தொடர்ந்து செலுத்தி வரும் நண்பர்கள் - பிரசுராலயத்தின் நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றி உரியது.

நான் படிக்கும் உலகம் என்னும் புத்தகம் நாள்தோறும் எனக்குப் புதிய புதிய உண்மைகளை உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டுமென்று தம் முன்னுரையில் வாழ்த்தி வரங் கொடுத்திருக்கும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கும் கடைசியாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நேயர்களிடமிருந்து இப்போதைக்கு விடை பெற்றுக் கொள்கிறேன்.

**விந்தன்**

*3.1.1950*

# வான மண்டலம்

புஷ்பா தங்கதுரை

## அக்டோபரில் கிரகங்கள்

☿ புதன்

அக்டோபர் முழுவதும் புதன் மாலை ஆகாயத்தில் தென்படும். சூரியன் அஸ்தமித்த பிறகு முக்கால் மணி நேரத்தில் அது அஸ்தமித்து விடும். இதனாலேயே அதை பார்ப்பது கடினம்.

அக்டோபர் மாதக் கடைசியில் புதன் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்துத் தான் அஸ்தமிக்கிறது. அப்போது புதனை தென்மேற்கு அடிவாரத்தில் அமர்ந்திருப்பதைப் பார்க்கலாம்.

♀ வெள்ளி

அக்டோபரின் மாலை நேரம் ஆகாயத்தில் சென்று மாதத்தை விட சற்று அதிக அளவு நகர்ந்திருக்கும்.


♂ செவ்வாய்

மெதுவாக நகரும் கிரகம். அக்டோபர் ஒன்றுக்குப் பிறகு பூமி அதை விட அதிக வேகமாகச் செல்வதால், செவ்வாய் நம் கண்களுக்குப் பின்னால் செல்வது போல் ஒரு காட்சி கொடுக்கும். (இதை வக்கிரம் என்று நாம் சொல்லுவோம்.)

அக்டோபரில் இலை அதிகப் பிரகாசம் அடையும். அது வியாழனை விடப் பிரகாசமாக இருக்கும்! அக்டோபர் 30ல் செவ்வாய் பூமிக்கு மிக நெருக்கமாக இருக்கும்! அதன் தூரம் அப்போது 69.4 மில்லியன் கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும்.

♃ வியாழன்

சூரிய அஸ்தமனத்திற்கு சிறிது நேரத்தில் அஸ்தமிக்கும்.




அக்டோபர் 10ல் இரவு 8.00 மணிக்கு வானம்.

அக்டோபர் ஐந்தில் புதனுடன் சேர்ந்து இருக்கும். அதன் பிறகு அது அந்தி மாலையில் மறைந்து போகும், அக்டோபர் 23 இது சூரியனுடன் சேர்ந்தே இருக்கும் அதற்குப் பிறகு அது சூரியனுக்கு காலை ஆகாயத்தில் சூரியனுக்கு முன்னால் உதயமாகும்.

♄ சனி

அக்டோபரில் காலை ஆகாயத்தில் உதயமாகும். அக்டோபர் தொடகத்தில் சனி இருந்துக் கொண்டிருக்கும். மாதம் முழுவதிலும் அது 2 டிகிரி தான் நகர்கிறது.

● சந்திரன்

அமாவாசை அக்டோபர் 3


பௌர்ணமி அக்டோபர் 17.

எரிநட்சத்திரங்கள்

இந்த மாதத்தில் நடு நிசிக்குப் பிறகு அதிகாலை வரை கிழக்கு திசையில் விழுவது தெரியும்.

அக்டோபர் 3 சூரிய கிரகணம்

அக்டோபர் 17ல் சந்திர கிரகணம் உண்டு. ஆனால் அவை இந்தியாவில் தெரியாது.




* * *

# மானம் காத்தான்

மனம் பொறுக்குமா? நடப்பதைப் பார்க்கச் சகிக்கவில்லை. என்ன செய்யலாம்? ஒன்றுமே தோன்றவில்லை.

தலைவரிடம் போய்ச் சொல்லலாமா? அவர் மட்டும் என்ன செய்துவிடப் போகிறார்?

தலைவர் சட்டமன்ற உறுப்பினரிடம் போகலாம் என்பார். கூட்டத்தைக் கூட்டுவார். வருகிற கூட்டம் முழுவதும் ஒதுங்கி வெயிலில் காய்ந்து நிற்க, உள்ளே குளிர்பானம் அருந்திப் பேசிக் கொண்டிருப்பார்கள். 'ஏதாவது சொல்லி அனுப்புங்க' என்பார்கள். சிரிப்பார்கள். சிரித்தவாறே வெளியில் வருவார்கள். ஊரின் சிரிப்பெல்லாம் அங்கே திரண்டு வந்து குடிபுகுந்தது போலத் தோன்றும்.

''வறட்சி நிவாரண வேலைகள் தொடங்கப் போகுது. அப்பொழுது எல்லாருக்குமே வேலை கிடைக்கும். கூலியும் அரசாங்கச் சட்டப்படி கிடைக்கும். கூலியைக் குறைத்துக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை. பொறுத்திருங்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் உரிய நடவடிக்கை எடுப்பார்!''

கூட்டம் கைதட்டும்; கைதட்ட வேண்டும். இல்லாவிட்டால் அழைத்து வந்த தலைவருக்கு மரியாதை இருக்காது.

அவர் எப்பொழுது நடவடிக்கை எடுப்பது, எப்பொழுது வறட்சி நிவாரண வேலைகள் தொடங்குவது, வேலை செய்வது, கூலி வாங்குவது, பசியும் பட்டினியுமா அரிசி வாங்க ஓடுவது, ஒட்டிய வயிற்றுடன் குடிசைகளில் அமர்ந்து கதை பேசிக்

● ச. கலியாணராமன் ●

**இலக்கியப்பீடம்**
**சிறுகதைப் போட்டி 2004**
பிரசுரத்துக்குத் தேர்வுபெற்ற சிறுகதை

கிடக்கும் மக்களுக்கு - உழவுத் தொழிலையே நம்பி வாழ்ந்து விட்ட மக்களுக்கு எப்பொழுது கஞ்சி கிடைப்பது?

பெரியவர்கள் நிலைமையை விட சிறுவர், சிறுமியர் பாடு தான் கண்ணராவி காட்சி. குளம் குட்டைகள் வறண்டு போகாமல் இருந்தால் குத்தகைக்காரர்கள் மீன் பிடித்து முடிந்த பிறகு நண்டு நத்தைகளாவது கிடைக்கும். காசு செலவில்லாமல் கிடைக்கும்.

பள்ளிக்கூடங்களுக்குப் போகாவிட்டாலும் பெயரையாவது கொடுத்து வைக்கச் சொன்னதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் அலட்சியப்படுத்தி விட்டார்கள். பள்ளிக்கூடங் களில் பெயர் கொடுத்திருந்தால் இப்பொழுது மதிய உணவுத் திட்டத்தின் படியாவது சோறு கேட்டுத் தலைமையாசிரியரிடம் சண்டை போடலாம். அதற்கும் வழியில்லை.

''பள்ளிக்கூடம் வருகிறவர்களுக்குத்தானே மத்தியான சோறு போட முடியும்? பள்ளிக்கூடத்தில் பேரே இல்லாத பிள்ளை களுக்கு நான் எந்தக் கணக்கில், எப்படிய்யா சோறு போட முடியும்?'' என்ற கேட்க மாட்டார்களா?

எந்த வகையிலும் வழியில்லை. திறந்து கிடந்த வழிகளை அடைத்துப் போட்டவனே இப்பொழுது அடைப்புக்குள் மாட்டிக் கொண்டு தவிப்பதாக எண்ணினான். மான உணர்ச்சியை விழிக்க வைத்தவன். ஆண்டானும் இல்லை; அடிமையும் இல்லை என்று முழங்கியவன். உழைத்து ஊதியம் பெற்று உண்ணச் சொன்னவன். இன்று உழைக்கவும் வழியில்லை; ஊதியம் பெறவும் வழியில்லை.

உழவுத் தொழிலைத் தவிர வேறு வேலை அறியாதவர்கள். தொழிலே இல்லை; கூலியும் இல்லை. சோற்றுக்கும் வழி யில்லை. மக்கள் ஆலாய்ப் பறந்தனர். குழந்தைகள் கண்டதைத் தின்றனர். தோப்பு துரவுகளில் திரிந்தனர். சிறுவர் சிறுமியருடன் வறண்ட வயல்களின் நண்டு வளைகளில் எலிகளையும் நண்டுகளையும் தேடி அலைந்தனர், முடியாத முதிர்ந்தவர்கள்.

இந்தக் கேடுகளைப் பார்த்துக் கொண்டு எப்படி சும்மாயிருக்க முடியும்?

எந்தத் தலைவரைப் பார்த்தாலும் ஒரு வேலையும் நடக்க வில்லை. ஒருவரையொருவர் கைகாட்டி விட்டுப் போய்க்

கொண்டிருந்தனர். வறட்சி நிவாரண வேலைகள் தொடங்கப் போகின்றன. ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. பணம் ஒதுக்கியாகிவிட்டது. இதோ, அதோ என்றெல்லாம் பேச்சு அடிபட்டதோடு சரி. அரசாங்க ஆமை இருந்த இடத்தை விட்டு நகர்ந்து வரும் பாட்டைக் காணோம்.

அதற்குள் அவசரப்பட்டு சிறுமி ஒருத்தி இறந்து போனாள். ஏதோ 'காயலா' என்று சொன்னார்கள். 'என்னடா ஆச்சு?' என்று கேட்கச் சென்றபோது வயிற்றுக் கோளாறு என்றான் பெற்றவன். இரண்டொரு நாளில் சிறுவன் ஒருவன் செத்து விட்டான். அவன் சோற்றுக்கு இல்லாமல்தான் செத்தான் என்று பேசிக் கொண்டார்கள். 'அது எப்படிச் சொல்லலாம்?' என்று அரசாங்க அதிகாரி ஜீப்பில் வந்து இறங்கினார். சிறுவனைப் பறி கொடுத்த வீட்டைக் 'குடை குடை' என்று குடைந்து தள்ளினார்கள்.

''பையனுக்கு வயித்து வலி இருந்ததுங்க. திடீர்னு செத்துப் போயிட்டான்.''

''ஆசுபத்திரிக்கு அழைச்சுகிட்டுப் போனியா?''

''ரெண்டாவது நாளு அழைச்சுகிட்டுப் போனேனுங்க.''

''மருந்து கொடுத்தாங்களா?''

''ஏதோ குடுத்தாங்க.''

''மருந்தை ஒழுங்கா குடுத்தியா?''

''சாப்பாட்டுக்கு முன்னாலேயும் அப்புறமும் கொடுக்கச் சொன்னாங்க. நான் என்னத்தைச் சாப்பாட்டைக் கொடுக்கறது?''

''மருந்தைக் கொடுத்தியா இல்லையா?''

''ஒரு நாளு குடுத்தேன்.''

''தொடர்ந்து ஏன் ஆசுபத்திரிக்குப் போகலை?''

''அரை நாளு போயிடும் ஆசுபத்திரிக்குப் போயிட்டு வரதுக்குள்ளே... நாங்க வயத்துக்குத் தேடுவோமா, ஆசுபத்திரிக்கு அலைவோமா?''

''வயிற்றுவலியாலேதானே உன் மவன் இறந்து போனான்? இதிலே கையெழுத்துப் போடு.''

''கை நாட்டு தாங்க...''

''ஏதோ ஒண்ணு போடு!''

கையொப்பம் பெற்றுக் கொண்டு ஜீப் புறப்பட்டுப் போய் விட்டது. அறிக்கை அவசரமாகக் கொடுக்க வேண்டும்.

மானம் காத்தானுக்கு மனம் பொறுக்கவில்லை.

''ஏன்டா, உன் மவனுக்கு வயத்து வலி எப்போதுமே உண்டா?''

''கிடையாது. இப்போதான் சோத்துக்கு இல்லாமே கண்டதையும் தின்ன ஆரம்பிச்சதுக்குப் பொறவு...''

''கண்டதையும்'னா?''

''ஒரு நாளு எலிக்கறி தின்னமா...''

''அட முண்டம், அதை ஏன்டா அந்த ஆபீசருகிட்டே சொல்லலை?''

''நாங்க எல்லாரும்தான் தின்னோம்.''

''ஏன்டா பெரியவங்களுக்கு ஒத்துகிட்டது?''

''விதி... போய்ச் சேர்ந்துட்டான்!''

''என்ன சாப்பிட்டேன்னு ஆசுபத்திரியிலே கேட்கலையா?''

''ஒண்ணும் கேட்கலை. இருக்கிற கூட்டத்திலே என்ன கேட்கிறாங்க?''

மகனைப் பறி கொடுத்தவனிடம் தன் பங்குக்கு ஒன்றும் குடையக்கூடாது என்று ஆறுதலை மட்டும் கூறிவிட்டு வந்த மானம் காத்தான் துண்டை விரித்துப் போட்டுக் குடிசையின் ஒட்டுத் திண்ணையில் படுத்துவிட்டான்.

வறட்சி நிவாரண வேலைகள் தொடங்குவதாகக் கூறி ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குள் தெருவில் இன்னும் எத்தனைச் சாவு விழுமோ?

என்னவோ, மூன்று வேளையும் மூக்கைப் பிடிக்கத் தின்றுவிட்டு, உடம்புக்கு ஏதாவது என்றால் தனியார் மருத்துவ மனையில் பெரிய மருத்துவர்களிடம் உடம்பைக் காட்டிச்

சோதனைகள் செய்து கொண்டு, விலை உயர்ந்த மருந்துகளை வாங்கி விழுங்கி விட்டு அதன் பிறகு உடம்பு தேறாமல் செத்துப் போவதாகக் கணக்கிட்டுப் 'பட்டினிச் சாவு' இல்லை என்று மிக எளிதாகக் கூறி விடுகிறார்கள்.

அவர்கள் மீது குற்றமில்லை. பட்டினிச்சாவு என்று அவர்கள் கணக்கிடுவது எதுவுமே உண்ணாமல் முழுப் பட்டினியாகக் கிடந்து துளித்துளியாகச் செத்துப் போவது. அதுபோல யாருமே சாவதில்லை. பசியின் கொடுமையால் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத எதையாவது தின்றுவிட்டு முறையான மருத்துவமும் செய்து கொள்ள வழியில்லாமல் செத்துப் போவதே அதிகம். அது பட்டினிச் சாவில் சேராது.

அவர்களுடைய கணக்குகளும் பொய்களும் ஏமாற்று வேலைகளும் எப்படியோ போகட்டும். மானம் காத்தான் தன் மக்களுக்கு மான உணர்ச்சியை ஊட்டியது போலவே இப்பொழுது அவர்களைப் பட்டினியின் கொடூரப் பிடியி லிருந்தும் காப்பாற்றியாக வேண்டும். அந்தக் கடமை அவனுக்கிருக்கிறது.

திண்ணையில் துயருடன் உருண்டு கிடந்த மானம் காத்தான் பொழுது போய் இருட்டியதற்குப் பிறகு எழுந்தான். தெரு முழுவதும் இருட்டு. தொலைவில் தெருமுனையில் உள்ள மின் விளக்கு வழக்கமாக ஒன்பது மணிக்குப் பிறகுதான் மினுக்கும். இருட்டோடு நடந்து குடியானவத் தெருவில் நுழைந்து ஒரு சந்து வழியாகச் சென்று இராமலிங்கம் ஐயாவின் பெரிய இரும்புக் கதவுகளைத் திறந்து பார்த்தான் அவன். நாய் குரைத்தது. கதவைச் சாத்திக் கொண்டான்.

''யாரு பாரு'' என்ற குரலோடு இராமலிங்கமே வெளியில் வந்தார். விளக்கு ஒளிர்ந்தது.

குரைத்த நாயை அதட்டி ஓட்டி விட்டு, ''என்ன மானம் காத்தான், இந்த நேரத்திலே?'' என்று வியப்புடன் வரவேற்பு அளித்தார்.

தயங்கி நின்றான் மானம் காத்தான்.

''ஏன் நிற்கிறே? அதோ பலகையிலே உட்காரு. ஒண்ணும் யோசிக்காதே. உட்காரலாம் உட்காரு. நீ உன் மக்களை மட்டு

மில்லை, எங்களையும் சேர்த்துத்தான் திருத்தியிருக்கே'' என்றார் இராமலிங்கம்.

அவன் உட்கார்ந்தான்.

''ஏன் உன் மூஞ்சி இம்மாங் கலவரப்பட்டுப் போயிருக்கு? வந்த சேதியைச் சொல்லு. எதுவாயிருந்தாலும் செய்யறேன்.''

அந்த ஆறுதல் சொற்கள் அவன் கூச்சத்தைப் போக்கின.

''எல்லாம் பசியும் பட்டினியுமாக் கிடக்கிறாங்க. வறட்சி நிவாரணம் வரும்னு சொல்லிக் காலத்தைக் கடத்திக்கிட்டு இருக்கிறாங்க'' என்றான் அவன்.

''தெரியும் சொல்லு. நம்ம அவசரம் அவங்களுக்குத் தெரியாது. சட்டதிட்டம் பார்த்துக்கிட்டு இருப்பாங்க. சாலையிலே அடிபட்டு ஆசுபத்திரிக்குப் போனா, போலீசுக்குச் சொல்லியாச்சான்னா கேட்பாங்க பாரு டாக்ட்ருங்க? அதைப் போலத்தான். உயிரைக் காப்பாத்த சட்டதிட்டங்களைத் தூக்கிக் குப்பையிலே போடணும். உங்க தெருவுக்கு என்ன செய்யலாம் முதல்லேன்னு நானும் யோசிச்சுக்கிட்டுதான் இருந்தேன். ஒரு மூட்டை அரிசி அனுப்பட்டுமா?'' என்றார்.

''இலவசமா கொடுக்கறதை எங்க மக்கள் ஏத்துக்க மாட்டாங்க. ஒரு பத்து நாளைக்காவது சோறு போட்டாகணும்.''

''ஐயோ! அது எப்படிப்பா முடியும்? என்கிட்டே வேலையும் இல்லை. ஊராட்சி மன்றங்களும் பணம் இல்லாமே முடங்கிக் கிடக்கு தெரியுமா? பொது வேலை ஒண்ணுகூட நடக்கலை.''

''எனக்கும்தாங்க ஒண்ணும் புரியலை. எங்க மக்களுக்கு அளவுக்கு மேலே தன்மான உணர்ச்சியை நானே உண்டாக்கி விட்டு இப்போ நெருக்கடியிலே தவிக்கிறேன். அவனவனும் சட்டம் பேசுறானுங்களே தவிர, கடமை உணர்ச்சியை அடியோட ஒழிச்சுட்டாங்க.''

''தன்மானம் என்கிறது கடமைக்கு எதிரானது இல்லை. கடமைக்குள்ளேதான் தன்மானம் அடங்கியிருக்கு. கடமைக் காகத்தான் தன்மானமே. இப்போ நீ உன் கடமைக்காகத்தான் தன்

மானத்தோட என்கிட்டே வந்திருக்கே'' என்ற இராமலிங்கம் சிறிது நேரம் தலைகுனிந்து வீற்றிருந்தார்.

மானம் காத்தான் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

இராமலிங்கம் ஒரு முடிவுக்கு வந்தவராகக் கூறினார்.

''மானம் காத்தான்! நான் ஒண்ணு சொல்றேன் கேளு. நாளைக்கு இங்கே உள்ள மாரியம்மன் கோயில் நிர்வாகிகள் கூட்டத்தைக் கூட்டுறேன். மழை பெய்து வளம் கொழிக்க மாரியம்மன் கோயில் விழா நடத்தணும்னு ஒரு தீர்மானம். ஆளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு மூட்டை அரிசி போட்டுக் கஞ்சி காய்ச்சி ஊத்தணும்னு சொல்லிடுறேன். சோறு போடுறதாச் சொன்னால் இங்கே உள்ளவங்களே சாப்பிட்டுப் போயிடுவாங்க. கோயில்லே கஞ்சி காய்ச்சி ஊத்தறதே ஏழை எளியவங்க சாப்பிடணும் என்கிறதுக்காகத்தான். ஏழைகளுக்குக் கஞ்சி ஊத்தறதா சொல்லிட்டா இவங்க வர மாட்டாங்க. நீயே முன்னாலே நின்னு கோயில் கஞ்சி புண்ணியம்னு சொல்லி உன் கையாலேயே உன் மக்களுக்கு ஊற்று. பத்து நாள் விழா வைச்சு நான் ஏற்பாடு பண்ணிடுறேன். என்ன சொல்றே? அதற்குப் பிறகு வறட்சி நிவாரணம் வந்தால் பார்த்துக் கொள்ளலாம்.''

மானம் காத்தான் எழுந்து நின்றான். அவரைக் கும்பிட்டான்.

''ஐயா... உங்களை நான் எப்படி...'' அவன் குரல் நெகிழ்ந்து தடுமாறியது.

''ஒண்ணும் அதிகமா சொல்லிடாதே. நீ மானம் காத்தானாகவே இரு'' என்றார் இராமலிங்கம்.


எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். (62)

பழியில்லாத நல்ல மக்களைப் பெற்றால்
வழிவழித் தலைமுறைக்கும்
பழியில்லை.



ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்

# மனிதன் தேடுவது மோட்சம்
# இறைவன் தருவது சொர்க்கம்

## கர்மயோகி

எல்லாம் வல்லவன் இறைவன் என்று கூறியவர்கள், உலகில் இறைவனும் கர்மத்திற்குக் கட்டுப்பட வேண்டும் என நினைத்தார்கள். எனவே, கர்மமே முடிவு; தலைவிதிக்கு மாற்றில்லை என்று நாம் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நம்புகிறோம்.

ஸ்ரீ அரவிந்தம் கூறுவது: *'இறைவன் எல்லாம் வல்லவன். சொர்க்கத்தில் அவன் ஆட்சி செய்கிறான். பூவுலகிலும் இறைவன் எல்லாம் வல்லவன். கர்மம் முடிவானதன்று; தலைவிதி நிர்ணயிக்கப்பட்டதில்லை'* என்கிறது.

மனிதனுக்குத் தன் குறை தெரிவதில்லை என நாம் குறை கூறுகிறோம்.
தன் குறையை அறிந்தவன் நிறைவான மனிதன்.
அடுத்த உயர்ந்த கட்டம் உண்டு.
மனிதன் தன் நிறைவுகளை அறிந்தவனல்லன்.
தன் நிறைவுகளை அறிந்தவனுக்குத் தலைவிதியும், கர்மமுமில்லை.

உதாரணமாக, நாம் சுமுகத்தின் சக்தியை அறிவதில்லை. நல்லெண்ணம் எதைச் சாதிக்கும் என்று கண்டு கொள்ள வில்லை. பிரியம் எவ்வளவு சக்தி வாய்ந்து என்பதை அறிவால் புரிந்து கொள்வதில்லை. விலங்கு போல் ஒட்டிக் கொண்டிருப்பதை (attachment) பிரியம் என நினைக்கிறோம். மனத்தில் கெட்ட எண்ணமில்லாவிட்டால் அதை நல்லெண்ணம் என நினைக்கிறோம். அழகாகப் பழகுவதை சுமுகம் எனக் கொள்கிறோம். இவற்றுக்குரிய பலன்கள் இருளுக்கும் ஒளிக்கும் உள்ள வேற்றுமையுள்ளது.

பிரியம் பொங்கி வரும்பொழுது பெரிய, நல்ல காரியங்கள் நடந்தாலும், இவற்றுக்குள்ள தொடர்பை நாம் காண்ப

தில்லை. மனம் நல்லெண்ணத்தால் நிறையும்பொழுது அந்தஸ்து திடீரென உயர்கிறது. ஏன் என நாம் புரிந்து கொள்வதில்லை. சுமுகம் நிறைந்தபொழுது கடை வியாபாரம் பெருகுகிறது. நாம் கவனிப்பதில்லை.

நம் வீடு சாதாரண வீடானால், எந்தப் பெரிய காரியமும் பல ஆண்டுகளாக நடக்காவிட்டால், அனைவரும் சேர்ந்து, உறவை சுமுகத்தாலும், மனத்தை நல்லெண்ணத்தாலும், நெஞ்சைப் பிரியத்தாலும் நிரப்பி, அதைச் சில நாள் நீட்டிப்பது என முடிவு செய்தால், அதை நிறைவேற்றினால், அவ்வீட்டில் கிடைக்காத அட்மிஷன் கிடைக்கும், நில விளைச்சல் உபரியாகும், கடை வியாபாரம் பெருகும், குழந்தைகள் நல்ல மார்க் வாங்குவார்கள், அதிர்ஷ்டத்தின் சுவடுகள் அடிக்கடி தெரியும். இங்கு அன்னையும் சேர்ந்தால் அதிர்ஷ்டம் நிலைபெறும்.

தொழில் (Industry) செய்பவர்களுக்குக் கணக்கு முக்கியம். ரிஜிஸ்டர், ரெக்கார்ட், சிஸ்டம் முக்கியம் என்று அறிவதில்லை. அவையிருந்தால் ஆர்டர் அதிகமாக வரும் என்று காண்பதில்லை. தொழிலில் உள்ளவர் பணத்தையும், ஆர்டரையும் நாடுகின்றனர். அவர்கள் கணக்கு, ரிஜிஸ்டர், ரெக்கார்ட், தொழிலாளியின் உற்சாகம், ஒத்துழைப்பை நாடினால் ஆர்டர் குவியும், லாபம் பெருகும்.

மனிதனுக்குத் தன் திறமை தெரிவதில்லை என்பது போல் தொழிலதிபர்களுக்குத் தொழிலின் வலிமை தெரிவதில்லை.

குடும்பத்தில் ஒற்றுமை, சேர்ந்து செயல்படுவதில் சிறப்பு, பிரியம், சேமிப்பு, பத்திரம், கடமை... இவற்றின் முக்கியத்தை அறியாமல், அவரவர் இஷ்டப்படி, வறண்ட உள்ளத்துடன், கடமைகளைப் புறக்கணித்து, சேமிப்பைக் கருதாது, பத்திரத்தைப் பத்திரமாக வைக்காமல், சிரமப்படுகிறார்கள். குடும்பத்தின் வலிமையை உணர்ந்தால் குடும்பம் சிறப்பாக இருக்கும்.

ஆசிரியர், டாக்டர், வக்கீல் (professionals) போன்றவர்களுக்குத் தொழிலுக்குரிய படிப்பின் முக்கியம், குறித்த நேரத்தில் செயல்படுவது, தொழிலுக்குரிய முறைகள்,

வாடிக்கைக்காரரை நயமாக நடத்துவது இவற்றின் அவசியம் புரியாமல் தொழிலை நசிக்க விடுகின்றனர். இவற்றைக் கருதுபவர் தொழிலில் உச்சகட்டத்திற்குப் போவார்கள்.

தொழிலின் உச்சியிலுள்ளவர்கள் இவற்றால் உயர்ந்தவர் என்பதைக் கண்டும், மனமும், செயலும் ஏற்பதில்லை.

இவற்றையெல்லாம் சுருக்கி அன்னை, ''மனிதன் கண் மூடியாக (unconscious), தான்தோன்றியாக (disorganised) செயல்படுகிறான்'' என்கிறார்.

கண் திறந்தால் வாழ்வு உயரும்.

முறையாகச் செயல்பட்டால் மனிதன் உயர்வான்.

கண் திறந்து, முறையாக நடந்தால் கர்மமில்லை,
தலைவிதியில்லை.

''அது எப்படி, மனிதன் என்றால் பொய் சொல்லாம லிருக்க முடியுமா? வீடு என்றால் சண்டை, சச்சரவு வரத்தான் செய்யும். தப்பு செய்யாமலிருந்தால் உலகம் கட்டுப்படாது'' என்றெல்லாம் பேசும் மனிதன்,

தன் குறைகளை வலியுறுத்துகிறான்.
குறையை வலியுறுத்தும் மனிதனைக் கர்மம்
கட்டுப்படுத்தும்.
அவன் வாழ்வை உதறிவிட்டு, மோட்சத்தை நாடுகிறான்.

இதற்குப் பதிலாக, ''நான் பொய் சொல்ல மாட்டேன். என்னால் பொய்யைத் தவிர்க்க முடியும், வீட்டில் சண்டை போடக்கூடாது, வீடு சுமுகமாக இருக்க முடியும், என்னால் தவறு செய்யாமலிருக்க முடியும்'' என்று நம்பும் மனிதன்,

தன் நிறைவை வலியுறுத்துபவன்.
நிறைவை அறியும் மனிதனைக் கர்மம் கட்டுப்படுத்தாது.
இறைவன் அவனை நாடி வருகிறான்.
அவனுக்குப் பூலோகத்தில் சொர்க்கம் உண்டு.

ஏன் மனிதன் இப்படியிருக்கவில்லை, அப்படியிருக் கிறான் எனில், மனிதன் சோம்பேறித்தனத்தைப் பாராட்டி, தனக்குப் பிடித்ததை வலியுறுத்தி, தான் என்ற அகங்காரம்

பூண்டதால் கர்மத்தாலும், தலைவிதியாலும், வறுமையாலும், சிறுமையாலும், சோகத்தாலும், துன்பத்தாலும், மரணத்தாலும், நோயாலும் பீடிக்கப்பட்டுள்ளான்.

ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்த அனைவரும் கலந்து முடிவெடுத்து, தங்கள் நிறைவுகளை அறிய வேண்டும். அவற்றை வலியுறுத்த வேண்டும் என்று செயல்பட வேண்டுமானால், அவர்கள் தனித்தனியே தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்ள வேண்டியது.

- நான் சண்டைக்குக் காரணமாக இருக்க மாட்டேன்.
- சத்தமாகப் பேசவே மாட்டேன்.
- எவரையும் அதிகாரம் செய்ய மாட்டேன், செய்ய நினைக்க மாட்டேன்.
- பிறர் குறை என் கண்ணில் படாது, பட்டால் கருத மாட்டேன்.
- எப்பாடு பட்டாவது சமூகத்திற்கு ஜீவன் அளிப்பேன்.
- நான் ஏற்றுக் கொண்ட கடமைகளை 100% நிறைவேற்றுவேன்.
- அன்றாடம் செய்ய வேண்டியதை அன்றே தவறாமல் செய்து முடிப்பேன்.
- பணத்தைக் கொடுத்தால் ஒழுங்காக, அழகாக, அடுக்கி வைப்பேன்.
- பொய் சொல்லவே மாட்டேன், நினைக்கவும் மாட்டேன்.
- என்னால் எந்நேரமும் இனிமையாக இருக்க முடியும்.
- பிறரைச் சந்தோஷப்படுத்துவதே என் தலையான கடமை.
- தேனீயைப் போல சுறுசுறுப்பாக இருக்க என்னால் முடியும். செய்வேன்.
- வயதிற்குத் தகுந்த பக்குவத்தோடு நடப்பேன்.
- சிணுங்க மாட்டேன்.

- கோபப்பட மாட்டேன், பிறர் என் கோபத்தைக் கிளறினார் என்று கூறமாட்டேன்.
- என் கோபத்தை என்னால் அடக்க முடியும். நான் மட்டுமே என் கோபத்திற்குக் காரணம்.

என்றெல்லாம் கூறி, முடிவு செய்து செயல்பட்டால், அபரிமித மான வெற்றி அளவு கடந்து நம்மைத் தேடி வரும். அத்துடன் அன்னையும் வருவார். அதற்கு அழைப்பு எனப் பெயர். அன்னையை அழைக்க அதைவிட உயர்ந்த முறையில்லை. செயலால், மனத்தால் அன்னையை நாம் இப்படி அழைக்கிறோம்.

மனிதன் கவர்ச்சியை நாடுகிறான்; வாய்ப்பை நாடுவ தில்லை. கவர்ச்சியை நாடும் மனிதன் உணர்ச்சியை அறிகிறான். அதனால் உணர்ச்சிக்குக் கட்டுப்படுகிறான். உணர்ச்சிக்குக் கட்டுப்பட்ட மனிதன், கர்மத்திற்கும், தலைவிதிக்கும் கட்டுப்பட வேண்டும். அவனுக்குள்ளே ஒரே வழி வாழ்வை உதறிவிட்டு, மோட்சத்தை நாடுவதேயாகும்.

கவர்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் கட்டுப்படாதவனை கர்மம் கட்டுப்படுத்தாது, வாழ்வு அவனுக்குக் கட்டுப்படும். வாழ்வு கட்டுப்பட்டால், ஆன்மா வாழ்வில் வெளிவரும், சொர்க்கம் இங்கே வரும்.

சிலர் இடைவிடாது பிறருக்கு உபதேசம் செய்கிறார்கள். எவருக்கும் இவருடைய உபதேசம் தேவைப்படவில்லை என்று அவர் அறிய வேண்டும். இவர் உபதேசம் ஒரேயொரு வருக்குத் தேவைப்படுகிறது.


அவர் இவர்தாம்.
பிறருக்குச் சொல்வதே தமக்கு வேண்டியதை என
இவர் அறிய வேண்டும்.

எனக்குத் திறமையில்லை என்பவர் தாம் இதுவரை வெற்றிகரமாகச் செய்த முடித்ததை நினைத்துப் பார்த்தால் அவருக்குத் திறமைமையுண்டு என அறியலாம். தமக்குள்ள திறமையை அறிந்து, புதுக் காரியங்களில் அவற்றைப் பயன்படுத்தும் பாங்கு வேண்டும்.

இயேசுவும், புத்தரும் 'உலகிலிருந்து துன்பத்தை அழிக்க வேண்டும்' என்றனர். ஸ்ரீ அரவிந்தர் 'துன்பத்தை, இன்பமாக மாற்ற முடியும்' என்றார். நாம் நம் திறமைகளை, நிறைவுகளை அறிந்தால், இறைவன் - அன்னை - நம்மை நாடி வருவதை உணர்ந்தால், குறைகளை வலியுறுத்தாவிட்டால் துன்பம், இன்பமாக மாறும்.

- தன் குறையை அறியாதவன் மனிதன் என்பது உண்மை.
- தன் நிறைவை அறியாதவன் மனிதன் என்பது பெரிய உண்மை.
- அதனினும் பெரிய முடிவான உண்மை, இறைவன் சொர்க்கமாகப் பூவுலகில், நம்மருகில் நமக்காகக் காத்திருக்கிறான் என்பதேயாகும்.

**அன்னை கூறுவது:**



இன்றே, இப்பொழுதே, நம் வாழ்வில், நம் வீட்டில் இதை நாம் நடைமுறையில் அறிய முடியும், அறிய வேண்டும் என்கிறார் அன்னை.

அதைச் சாதிக்க நாம் பொறுமையாக, சாந்தமாக, தூய்மையாக, கோபப்படாமல், நல்லெண்ணத்துடன், பிறருக்காக நல்லெண்ணத்தை மனத்தில் உற்பத்தி செய்ய வேண்டும். அதாவது.

- வலிமை உள்ளிருக்கிறது, வெளியில் இல்லை.
- அந்தஸ்து உள்ளேயிருக்கிறது, சமூகத்திலில்லை.
- யார் திட்டினாலும், அதிர்ஷ்டம் வருகிறது என்று பொருள்.
- திட்டுவதைப் பொருட்படுத்தாவிட்டால், பக்குவம் வந்து விட்டதாகும்.

- பிறர் எரிச்சலை நம்முள் கிளப்பினால், நமக்கு வாய்ப்பு என்று தெரிய வேண்டும்.
- பிறர் பொறுப்பை நாமே ஏற்பதே, நம் கடமையாகும்.
- நம்மீது கோபப்பட்டவரிடம் நாம் போய் மன்னிப்புக் கேட்க வேண்டும்.
- பிறரை நம் போல் நினைக்க வேண்டும்.
- பிறருடைய சிறு ஆசைகள், நம் பெரிய தேவைகளை, விட்டுக் கொடுத்து நிரப்ப வேண்டும்.
- சரி என்பதைப் பேசாமல், நினைக்காமல், செயலில், நிறைவேற்ற வேண்டும்.
- Silent will is powerful. Silent act is more powerful. Silence is beyond that.
- அதிர்ஷ்டம் தேடிவரும்பொழுது, உள்ளிருந்து கோபம் எழுந்து அதைத் தடை செய்வதைக் காண வேண்டும்.
- நமக்கு ஆசை எழுந்தால், உள்ளதும் போகும்.
- நமக்கு வெறுப்பு எழுந்தால் அது அன்பின் மட்டமான உருவம் என்று அறிய வேண்டும்.
- நாம் சொல்வது பிறருக்குப் புரியவில்லை என்றால், நமக்கு மனத்தில் அது புரியவில்லை என்று பொருள்.
- உணர்ச்சிக்குப் புரியாவிட்டால் கசப்பு ஏற்படுகிறது.
- முடியவில்லை எனில் செய்யப் பிடிக்கவில்லை என்று பொருள்.
- அறிவு, ஜடத்தை சீண்டும், கசப்பான வேலையை விரும்பிச் செய்தால் ஜடத்திற்கு அறிவு வரும். O


**வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ, விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். (85)**

விருந்தினரைப் பேணி எஞ்சியதை உண்பவன் விதைக்குரியதையும்கூட விருந்துக்குப் படைத்து விடுவான்.

இந்த இதழில் இடம் பெற்றுள்ள திருக்குறள்களுக்கான உரை ஆசிரியர்: இரா. இளங்குமரன்



**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு (பி) லிமிடெட்

# வாங்கிப் படியுங்கள்

**உலக மாவீரன் நெப்போலியன் (வரலாற்று நூல்)**

**ஆசிரியர்: சு. சௌந்தரராசன் (சௌந்தர்).**

**வெளியீடு: அலங்கார் பப்ளிகேஷன்ஸ், 144 (321), என்.எஸ்.கே. சாலை, சென்னை - 600 024. பக்கங்கள் 164. விலை ரூ. 55.**



உலக மாவீரன் நெப்போலியனைப் பற்றிக் கேள்விப்படாதவர்களே இருக்க முடியாது. ‘முடியாது என்பது என் அகராதியில் கிடையாது’ என்ற உறுதியை ஊட்டியவர் நெப்போலியன்.

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் நெப்போலியன். தன் துணிவால் முன்னேறியவர். பிரெஞ்சு நாட்டில் பெரும் புரட்சி ஏற்பட்டது. அதற்குப் பிறகு பயங்கர ஆட்சி நடைபெற்றது. குழப்பம் மிகுந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்தி ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அந்த நாட்டின் சக்ரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டார்.

இந்த நூல், மாவீரன் நெப்போலியன் உழைப்பால், உறுதியால், வீரத்தால் படிப்படியாக உயர்ந்த வரலாற்றைச் சொல்கிறது.

‘வாட்டர்லூ’ என்னுமிடத்தில் நெப்போலியனைத் தோற்கடித்த ஆங்கிலேய நாட்டுத் தளபதி வெல்லிங்டன் பாராட்டுமளவுக்கு வீரம் நிறைந்தவர். வீரர்களை ஊக்கப்படுத்துவதில் சமர்த்தர்.

அல்லும் பகலும் அயராது உழைத்தவர். பிறரையும் உழைக்கத் தூண்டியவர். ஆங்கில நாட்டுப் பிரதமர் சர்ச்சிலை நெப்போலியனின் வாழ்க்கை மிகவும் கவர்ந்தது.


நெப்போலியன் அறிவால் உயர்ந்தவர். அயராத உழைப்பால் உயர்ந்தவர். கட்டுப்பாடான செய்கையால் உயர்ந்தவர். அடிமைப்பட்டிருந்த பிரான்சு நாட்டில் பிறந்த அவர், அதே நாட்டின் சக்ரவர்த்தியாக உயர்ந்ததை மிகச் சுவையாக கதைபோல், படிக்கச் சலிப்பு ஏற்படாமல் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

நெப்போலியனின் கடைசி நாள்களைப் பற்றி நூலாசிரியர் எழுதியவை, நெப்போலியன் மீது அதிக மரியாதையை ஏற்படுத்திய தோடு அவர் வீரச் செயல்மீது ஒரு சொட்டு கண்ணீர் விடச் செய்கிறது.

உலக மாவீரர்களுள் ஒருவரான நெப்போலியனைப் பற்றி அனைவரும் அறியும்வண்ணம் மிக எளிய நடையில் எழுதியுள்ளார் நூலாசிரியர் சு. சௌந்தரராசன் அவர்கள்.

நல்ல வரலாற்று நூலை ஆக்கித்தந்துள்ள நூலாசிரியரைப் பாராட்டுகிறோம்.

**செந்தமிழில் ஒரு நந்தவனம் (கட்டுரைகள் தொகுப்பு)**
**ஆசிரியர்: இலக்கியமாமணி பி.வி. கிரி. வெளியீடு: சாந்தா பதிப்பகம், 13/5, ஸ்ரீபுரம் 2ஆவது தெரு, இராயப்பேட்டை, சென்னை 600 014. பக்கங்கள் 288. விலை ரூ. 70.**



கவிஞர் பி.வி. கிரி அவர்கள் சிறந்த எழுத்தாளர். சிந்தனையாளர். கட்டுரையாளர். இந்த நூலில் 28 கட்டுரைகள் உள்ளன. இதழ்கள் பலவற்றில் நூலாசிரியர் பல்வேறு தலைப்புகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல்.

நந்தவனத்தில் பல மலர்கள் பூத்து மணம் வீசும். அதைப்போல், இந்தத் தொகுப்பில் திருக்குறளில் திரண்ட கருத்துகளைக் குறள் மலர் என்றும், இலக்கியங்களில் வரும் இயற்கைக் காட்சிகளை இயற்கை மலர் என்றும் மற்றும் மனித நேயம், மழலை இலக்கியம் மற்றும் பல சுவையான செய்திகளை வெவ்வேறு தலைப்புகளில் எளிய நடையில் நூலாசிரியர் எழுதியுள்ளார். ஒவ்வொரு கட்டுரையிலும் நூலாசிரியரின் சிந்தனைச் சிதறல்கள் மிளிர்கின்றன.

பல இலக்கிய நூல்களை நூலாசிரியர் படித்துத் தேனமுதம் பருகி நமக்கு சுவையான கட்டுரைகளாக வழங்கியுள்ளார். இலக்கியக் கடலில் மூழ்கி முத்தெடுத்துள்ளார். நூலாசிரியரின் கடுமையான உழைப்பு தெரிகிறது.

இந்த நூலைப் படித்து முடித்ததும் தமிழ் இலக்கியங்களின் செழுமையை அறிந்த உணர்வு ஏற்படுகிறது.

---

**'பாவம் செய்யாதே'**
**பெரியோர் சொன்னது வேதமானது.**
**கோபம் வருவதில்லை.**

**- இளஞ்சுடர்**

# வெயிலில் உலவும் நிலவு



சாலை சந்திப்பு
சிவப்பு கண்டு
பொருமி நின்ற வரிசைகள்
வெப்பத் தாரை
வெட்கித் தலைகுனிய வைத்த
வெண் மலர்ப் பாதங்கள்
அக்கம் பக்கம் மேயும் சில
அவதாரக் கண் விழிகள்
கண்ணாடி துடைக்கும்
மஞ்சள் துணி அடுக்கு
'கருகும் முன்
காருக்குள் தொங்க விடேன்'
கண் கலங்கும் ஊஞ்சல்கள்...
கையில் ஏந்திய
கறுப்பு நிறக் காரிகை.
இடைவெளி வழி விட
இங்கும் அங்கும் கூவுகிறாள்...
ஓரத்துக் கடையின்
ஓரடி நிழலில்
ஒடுக்கிக் கொண்டு
அவள் கணவன்
கையில் ஒரு நோஞ்சான்
பையக் குரல் கொடுக்க
குலை பதறி வந்தவள்
குறு வயிறு நிரப்பினாள்.
வரிசைகள் இடம் பெயர
முடமான கணவன்
முனகினான் லேசாக...
வியர்வை ஒட்ட வைத்த
ரவிக்கையை
விரல் தொட்டு இழுக்க
வழி விட்ட ஓட்டையில்
வெளிக்காட்டிய வெள்ளை.
சரியும் துணி கொண்டு
மறைக்காத மங்கை
கருமமே கண்ணாயினாள்.
குளிர் தடுத்த கண்ணாடியைக்
கொஞ்சம் இறக்கி
வாசனைக் குளிரை
வெளியே அனுப்பியவன்
கொள்ளி விழிகளைக்
குத்தீட்டியாய்ப் பாய விட்டான்.

'மஞ்சள் துணிக்கு பத்து ரூபாய்
சரிதான் - உன்
மஞ்சள் உடம்புக்கு
என்ன விலை?'
கூசாத வாய்
குடித்த மதுவினால்
குளறிக் கொட்டியது.
'கூடப் பொறந்தவகிட்ட
போய்க் கேளுப்பா'
உடம்பை விற்காத உழைப்பாளி
பச்சை கண்டு பின் வாங்க
மிதிவண்டி ஒன்றின்
கொதிகலச் சொற்கள் வெடித்தன.

**கவிஞர் சுடர்**

# கவியாற்றல் மிக்க ஆற்றலரசு

ஈரோடு ஆற்றலரசு சிறந்த கவிஞர். எனக்குத் தெரிந்து இவர் சென்ற இருபதாண்டுகளாக எந்த நிறுவனத்திலும் பணிபுரியாமல் யாரை அண்டியும் உதவி கேட்காமல் 'நமக்குத் தொழில் கவிதை' என்று இலக்கியத் தொண்டாற்றி வருகிறார்.


நாற்பத்தைந்து ஆண்டுகளாகக் கவிதை எழுதி வரும் இவர், பல பேரறிஞர்களுடன் பழகியவர். அறிஞர் அண்ணா அவர்கள் இவர் கவிதைகளைப் பாராட்டியிருக்கிறார். முதல் கவிதை 'திராவிட நாடு' இதழில் வெளிவந்தது.

கவிஞர் கண்ணதாசனும், ஈரோடு ஆற்றலரசும் சிறந்த நண்பர்கள். 400 நிலா கவிதைகளைத் தொகுத்து 'நிலா நானூறு' எனும் தொகுப்பை உருவாக்கினார். கவிஞர் கண்ணதாசன் அதற்காக 'ஒன்பதாம் தொகையார்' என்ற பட்டமளித்து வாழ்த்தினார்.

கவிஞர் சுரதாவுடன் நெருங்கிப் பழகிய ஆற்றரலசு, பாவேந்தர் பரம்பரைக் கவிஞர்களுள் ஒருவர். கவிதையை இசையுடன் பாடினால் ஏற்படும் இன்பத்திற்கு எல்லையில்லை. முதன் முதலில் நான் ஆசிரியராகப் பணியாற்றிய 'அமுதசுரபி'யின் செங்கல்பட்டு மாவட்ட மலர் வெளியீட்டு விழாவை, காஞ்சி நகரில் நடத்தினோம். அந்த விழாவில் காஞ்சிப் பட்டைப் பற்றிய அருமையான கவிதை யைத் தாளமிட்டுப் பாடியதைக் கண்டு பலரும் பாராட்டினர். அந்தச் சம்பவம் நடந்து முப்பத்தி மூன்றாண்டுகளுக்கு மேலாகியும், இசை யுடன் பாடியது இன்றளவும் ரீங்காரமிட்ட வண்ணமிருக்கிறது.

கவியரங்கத்தில் தன் கவிதையை அவர் ராகத்துடன் பாடும் விதமே தனி. ஆற்றலரசு சிறந்த ஜோதிடர். சொன்னவை பலிக்கும். அந்த ஆற்றல்தான் அவருக்குச் சோறு போடுகிறது என்று கூறலாம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்போது புரட்சிக் கலைஞராகப் பாராட்டப்படும், விஜயகாந்த் பாண்டிபஜாரில் நடிப்புலகில் நுழைய முயன்று கொண்டிருந்த நேரம். அவரது எதிர்காலத்தைக் கணித்து 'அமுதசுரபி'யில் எழுதினார். பலித்தது. மிக மிகப் பலித்தது.



சென்னை வானொலி நாடகங்கள் பலவும், நாற்பது படங்களுக்கு இவர் பாடல்களும் எழுதியிருக்கிறார்.

'நிலா நானூறு' பாடல் தொகுதி இவருக்குப் புகழ் தந்தது. முதன் முதலாக நிலவில் இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ராங் இவருக்கு வாழ்த்து அனுப்பியிருக்கிறார்.

பல பிரமுகர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் அறிமுகமான ஆற்றலரசு ஒருவரையும் அணுகித் தன் குறையைத் தெரிவித்தாரில்லை.

சிறந்த பாடலாசிரியரும், நாடகாசிரியரும், 30 நூல்களுக்கு மேல் எழுதியுள்ள ஜோதிடருமான ஈரோடு ஆற்றலரசு இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

'திரையுலகில் ஓர் இசையுலகம்' நூலையும், 'நகரத்தில் நாற்பதாண்டுகள்' என்ற தலைப்பில் தன் அனுபவங்களையும் எழுதிக் கொண்டிருக்கிறார்.

இவருக்குச் சேர வேண்டிய புகழ் இன்னும் சேரவில்லை.



சென்னையில் 11.9.05 அன்று பாரதியார் சங்கம் நடத்திய மகாகவி பாரதியார் விழாவில் கலைமாமணி விக்கிரமன் அவர்களுக்கு 'பாரதி விருது-2005'ஐ அருளாளர் திரு. இராம. வீரப்பன் வழங்கி கௌரவித்தார்.

# விக்கிரமனின் சிறுகதைக் களஞ்சியம்




விக்கிரமன், பிரபலமான சரித்திர நாவலாசிரியர். அரை நூற்றாண்டுக் காலம் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழின் ஆசிரியராக இருந்தவர். தற்போது 'இலக்கியப்பீடம்' மாத இதழை நடத்துவதோடு, தமிழ் எழுத்தாளர்கள் சங்கத் தலைவராகவும் இருக்கிறார். இவர் 1942ஆம் ஆண்டு தொடங்கி, 2002ஆம் ஆண்டு முடிய அறுபதாண்டுகளில் அவ்வப்போது எழுதிய சமூகச் சிறுகதைகளின் தொகுப்பு நூலாக இது வெளிவந்துள்ளது. இந்நூலைப் பற்றி டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் அருமையான ஆய்வுரை ஒன்று எழுதி விக்கிரமனுக்கு 'சிறுகதைச் சேக்கிழார்' என்று விருதும் சூட்டியுள்ளார்.

இத்தொகுப்பில் உள்ள 70 சிறுகதைகளுக்கும், தனித்தனியே பிரபல எழுத்தாளர்கள் எழுபது பேர் அறிமுக உரை எழுதியுள்ளனர். இது ஒரு தனிச் சிறப்பு எனலாம். தொகுப்பில் உள்ள 'அழகின் நிறம்', 'வாணக்காரன்', 'நல்லதோர் வீணை' போன்ற பல கதைகள் விக்கிரமனின் சிறந்த சமூகப் பார்வைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

விரசமில்லாமல் ஆழ்ந்த மனித நேயத்தைச் சித்திரிக்கின்றன.ஒவ்வொரு கதையும், இளம் இலக்கியப் படைப்பாளிகளுக்கு கதை செல்லும் உத்தி, கதைக்களம் தேர்ந்தெடுக்கும் முறை, கலாசாரம் - பண்பாடுகளின் அடித்தளம் போன்ற நுட்பங்களை அறிய உதவும் அருமையான வழிகாட்டி நூலாகவும் இத்தொகுப்பு அமைந்துள்ளது கூடுதல் சிறப்பு எனலாம்.

**- கவுதம நீலாம்பரன்**

வெளியீடு: விக்கிரமன் பதிப்பகம், 3, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33. (ப்க்கங்கள்: 752 + 32) விலை ரூ.300) **நன்றி: 'தினமலர்'**

விஜயதசமி அன்று

# உங்கள் வீட்டில் ஒரு நூல் நிலையம் அமையுங்கள்!

அதற்கு நாங்கள் உதவி செய்கிறோம்.

ரூ.500ஐ மட்டும் டிராப்ட் அனுப்புங்கள். கலைமாமணி விக்கிரமன் எழுதிய ரூ.1000ம் விலையுள்ள 14 சரித்திர நாவல்கள் உங்கள் இல்லம் தேடி வரும். நல்ல நாளிலிருந்துத் தொடர்ந்து புத்தகங்கள் உங்கள் நூலகத்தில் சேரட்டும்.

**நூல் விபரம் :**

| | | | |
|---|---|---|---|
| வந்தியத் தேவன் வாள் (சரித்திர நாவல்) | ரூ. 80. | உதய சந்திரன் | ரூ. 120 |
| மதுரை மகுடம் | ரூ. 48 | அபிமானவல்லி | ரூ. 44 |
| பராந்தகன் மகள் | ரூ. 45 | சுவர்ணக்கிளி | ரூ. 70 |
| மாணிக்கவீணை | ரூ. 90 | கடமையும் கடைவிழியும் | ரூ. 35 |
| குலோத்துங்கன் சபதம் | ரூ. 70 | காந்திமதியின் கணவன் | ரூ. 30 |
| கடல் மலைக் காதலி (இரண்டு பாகங்கள்) | ரூ. 100 | விக்கிரமன் முதல் நாவல்கள் | ரூ. 40 |
| பாண்டிய மகுடம் | ரூ. 85 | வாழும்போதே ஒருவாலாறு | ரூ. 75 |
| சிற்பம், சித்திரம், கோபுரம், கோயில் | ரூ. 40 | சுந்தரர் சுந்தரி | ரூ. 40 |

நீங்கள் செய்ய வேண்டியது : ரூ. 500க்கு டிராப்ட் எடுத்து, நூல்கள் அனுப்ப வேண்டிய முகவரியைத் தெளிவாக எழுதவும். டி.வி.எஸ். அல்லது ஏபிடி பார்சல் மூலம் புத்தகங்கள் அனுப்பப்படும். ஊர் பெயர் தெளிவாக எழுதவும். ரூ.100/- பார்சல் செலவுக்குச் சேர்த்து அனுப்பவும். வி.பி.பி. இல்லை.

**விக்கிரமன் பதிப்பகம்**

3, ஜெயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை 600 033. போன் : 2371 2485.

# இலக்கியபீடம்

இதழுடன்

மாம்பலம் ஆ. சந்திரசேகர் (சந்திரசேகர் பில்டர்ஸ், சென்னை) –

சௌபாக்யா நிறுவனத்தார் – காஞ்சிபுரம் எஸ்.எம். சில்க்ஸ்

இணைந்து நடத்தும்

# சிறுகதைப் போட்டி 2005

## மொத்தப் பரிசு ரூ.10,000

**முதற்பரிசு ரூ.4000 +**

**சௌபாக்யா வெட் கிரைண்டர்**

**2ஆம் பரிசு ரூ.2000**

**3ஆம் பரிசு 10 சிறுகதைகளுக்கு ரூ.400 +**

**காஞ்சிபுரம் எஸ்.எம். சில்க்ஸின் புடைவை**

நிபந்தனைகள்: • சிறுகதை 'இலக்கியப்பீடம்' இதழில் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். • ஓர் எழுத்தாளர் போட்டிக்கு எவ்வளவு சிறுகதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம். • சிறுகதை சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். இதற்கு முன்பு வேறெங்கும் வெளி வந்ததாகவோ, தழுவலாகவோ, மொழியாக்கம் செய்யப்பட்டதாகவோ இருக்கக் கூடாது. இதை எழுத்து மூலம் உறுதி செய்த கடிதம் இணைக்கப்பட வேண்டும். • பரிசு பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடும் முதற்பதிப்பு உரிமை 'இலக்கியப்பீடம்' பதிப்பகத்திற்கு உண்டு. • தமிழகப் பண்பாடு, நாகரிகம், பெருமையைப் பிரதிபலிப்பவையாக கதைகள் இருக்க வேண்டும். • நடுவர்கள் கூடிப் பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுப்பர். • போட்டிக்கு அனுப்பப்படும் கதைகளுக்கு ஒரு நகல் வைத்து கொள்வது அவசியம். தபால் தலை இணைக்க வேண்டாம். திருப்பி அனுப்ப இயலாது. • சிறுகதைகள் 30.12.2005 தேதிக்குள் இலக்கியப்பீடம் அலுவலகத்திற்குக் கிடைக்க வேண்டும். நேரில் கொண்டு வந்து கொடுப்பதைத் தவிர்க்கவும். • ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. • கதைகளை அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், 'இலக்கியப்பீடம்' மாத இதழ், 3, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033. தொலைபேசி 2371 2485.**


நல்லி
பட்டுப்புடவைகள்
ஒவ்வொன்றும் உங்கள்
எண்ணம் போலவே
Nalli
நல்லி சின்னசாமி செட்டி
பனகல் பார்க், தி.நகர், சென்னை : 600 017, தொ.பே. 434415

# தமிழ் எழுத்தாளர் நல நிதி அறக்கட்டளை

## சிறந்த நூல்களுக்கு வழங்கும் பரிசு ரூ.10,000

ஒவ்வோராண்டும் வெளிவரும் சிறந்த நூல்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.2000 வீதம் ஐந்து நூல்களுக்கு மொத்தம் ரூ.10,000 பரிசு வழங்கப்படும்.

2004ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளிவந்த சிறந்த நூல்களுக்குரிய பரிசுக்கென 30.11.2005க்குள் படைப்பாளர்கள் தங்கள் நூல்களை அனுப்பலாம்.

பதிப்பகங்கள் அனுப்பும் நூல்களுக்கு நூலாசிரியரின் ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும்.

அனுப்பப்படும் நூல்கள் (சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு நீங்கலாக) குறைந்தபட்சம் 96 பக்கங்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

பரிசுக்கு இரண்டு பிரதிகள் அனுப்பினால் போதும். பரிசு பெறாத நூல்களைத் திருப்பி அனுப்ப இயலாது.

நேரே கொடுக்க விரும்புவோர் காலை 8 மணி முதல் 11 மணி வரை மட்டுமே தரலாம்.

நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

அனுப்ப வேண்டிய முகவரி:

**நிர்வாக அறங்காவலர்,**
**தமிழ் எழுத்தாளர் நல நிதி அறக்கட்டளை,**
**3, ஜயசங்கர் தெரு (முதல் மாடி), மேற்கு மாம்பலம்,**
**சென்னை - 600 033. தொலைபேசி - 2371 2485.**

---

வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்: விக்கிரமன், 3 (பழைய எண் 2)
'இலக்கியா', ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33.
அச்சிடுபவர்: கே. பத்மநாபன், எபிஷியண்ட் பிரிண்டர்ஸ், சென்னை 33.
ஆசிரியர்: கலைமாமணி விக்கிரமன்

# அறக்கட்டளையின் நோக்கமும், செயற்றிட்டங்களும்

1. தமிழில் புகழ்பெற்ற முற்போக்குச் சிறுகதைகள், கட்டுரைகள், திறனாய்வு, சுயசரிதை, புடைநூல் என ஏராளமாக எழுதித் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது கடல் கடந்த மேலைநாடுகளிலும் மிகுதியான வாசகர்களைப் பெற்றிருந்த அஞ்சாநெஞ்சன் அமரர் வே.கோவிந்தன் (விந்தன்) அவர்களுடைய படைப்புகளை அறக்கட்டளையின் மூலம் வெளியிடுதல். மேலும் அந்த மாமனிதனின் மறைக்கப்பட்ட திரையுலகச் சேவையை வெளிக் கொணர்தல்.

2. இளைய தலைமுறை எழுத்தாளர்கள், ஆராய்ச்சி மாணவர்களுக்கென்று நூலகம், ஆய்வுக்கூடம் போன்றவற்றை அமைத்தல்.

3. ஒவ்வோர் ஆண்டும் சிறந்து விளங்கும் எழுத்தாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் போன்றோர்க்கு ஊக்கம் தரும் விதமாக உதவித் தொகை, பரிசுகள் அறக்கட்டளையின் மூலமாக வழங்குதல்.

4. ஏழை மாணவர்களின் கல்வி தொடர்பாக அறக்கட்டளையின் மூலம் உதவிகள் செய்தல். கல்வி நிறுவனங்கள் கல்வி தொடர்பான அறக்கட்டளைகளை ஏற்படுத்துதல். அவற்றின் மூலம் அறக்கட்டளையை முன்னேற்ற பாதை நோக்கிப் பயணிக்கச் செய்தல்.

5. புதிய வளரும் எழுத்தாளர்களுக்காகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களை அழைத்து, திறந்தவெளிக் கூட்டங்கள் நடத்துவது. அவர்களுக்கு உரிய, சிறந்த பயிற்சி அளிப்பது.

6. அறக்கட்டளையின் வளர்ச்சிக்காகப் மாநில, மைய அரசாங்கம், நகர்ப்புறப் பஞ்சாயத்து, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் ஆகியோரிடமிருந்து உதவி கோரி அறக்கட்டளையை வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கி செலுத்துதல்.

7. கடுமையான இயற்கைச் சீற்றங்கள் ஏற்படின், உரிய நிவாரண உதவி செய்தல்.

8. உயரிய நோக்கங்களுடன் செயற்படுவதும், வளர்ச்சி பெறுவதும், எக்காரணம் கொண்டும் அறக்கட்டளை இலாபநோக்கத்துடன் செயற்படும் நிறுவனம் அன்று, என்ற உறுதிமொழியுடன் செயலாற்றுதல்.

9. அறக்கட்டளை எந்தவித எதிர்ப்பலனும் எதிர்பாராமல், சுயமாகவும், தனியாகவும் செயற்படும் ஒரு சேவை மையம் என்ற நோக்கத்தினை உறுதியுடன் பின்பற்றுதல்.

*விந்தன் நினைவு அறக்கட்டளை*
(பதிவு எண்.756/2003)
தலைமை அலுவலகம்
எண்:17, (ப.எண்:7/2), அருணாசலம் தெரு, செனாய் நகர்,
சென்னை–600030. இந்தியா.
தொலைபேசி எண்:26680436, செல் : 9‹ 444145275
E-Mail : info@vindhan.org
Website : www.vindhan.org.

*நிருவாகக் குழு*
*விந்தன் அறக்கட்டளை*



Registered with the Reigistrar of Newspaper for India : No.66059/97
Postal Registration No. : TN/PMG (CCR) 850/03-05
WPP Licence No. TN/CC (S) DN/12/04-05



# எங்களது இனிய நல்வாழ்த்துகள்

## ஏபிடி லிமிடெட்.,


கோயம்புத்தூர்



சரக்கு போக்குவரத்தில் கவர் செய்யப்பட்ட 375 லாரிகளைக் கொண்டு 530 நிலையங்களை இணைத்து நாட்டிற்கு அன்றாட சேவை செய்து வருவது "**ஏபிடி பார்சல் சர்வீஸ்**"



மாருதி கார் விற்பனையில் வாடிக்கையாளர்களுக்கு உறுதுணையாக விளங்குவது "**ஏபிடி மாருதி**"



மாருதி கார் பராமரிப்பில் தொடர்ந்த சிறப்புடன் விளங்குவது "**ஏபிடி ஆட்டோ சர்வீஸ்**



## ஏபிடி லிமிடெட்.,

10/14,15 காளிங்கராயன் வீதி,
இராம்நகர், கோயம்புத்தூர் 641 009